முடியவில்லை. அவர்களுக்குத் தாகமும் பசியும் அதிகமாயிருந்தன. முப்பது மணி நேரம் உணவும் தண்ணீரும் இல்லாமல் பொழுதைக் கழித்துவிட்டு, சூறைக் காற்று தானாகவே அடித்தொடுங்கிப் போகும்வரை காத்திருந்து, கடைசியாகப் பொத் அம்பாய் துறைமுகத்தை அடைந்தார்கள்.

தேசப்படத்தை உற்றுப்பார்த்தால், பிலடெல்பியா பட்டினமானது பொத் அம்பாய் நகரிலிருந்து இன்னும் வெகு தூரத்திலிருப்பது தெரியவரும். இளம் பெஞ்சமினோ, மறுபடி பிரயாணத்தைத் துவங்க வேண்டுமென்றால் காலாலே நடந்தாக வேண்டுமென்பதைத் தெரிந்து கொண்டார். பிலடெல்பியா பட்டினத்திற்கு அவரை ஏற்றிச் செல்லக்கூடிய படகைத் தேடவேண்டுமென்றால், பர்லிங்டன் ஊர்வரை அவர் ஐம்பது மைல் தூரம் காலால் நடந்தாகவேண்டும். இன்னும் நிலைமையை மோசமாக்க, தோணிப் பிரயாணத்தினால் அவருக்குக் காய்ச்சல் வேறு கண்டிருந்தது. மருந்து வாங்கவோ அவரிடம் போதுமான காசுகள் இல்லை. அதனால் நிறைய வெறும் தண்ணீரை மட்டும் குடித்துவிட்டுப் படுத்துறங்கிவிட்டார்.

மறுநாட் காலை அவர் கண் விழித்தெழுந்து பிரயாணத்தைத் துவக்கினார். அப்போது மழை நன்றாக அடித்தூற்றியது. மத்தியானத்திற்குள் அவர் தெப்பமாக நனைந்து மிகவும் களைத்துப் போய்விட்டார். வீட்டை விட்டு ஏன் ஓடி வந்தோம் என்றுகூட நினைத்தார். அதற்கு மேல் ஓர் அடிகூட எடுத்து வைக்க முடியாமற் போகவே, அன்று பிற்பகலும் இரவும் ஓர் ஏழைமார் விடுதியில் தங்கினார். ஆனால் அங்கே அதற்கு மேலும் தாமதிக்க அஞ்சினார். தூசிமண்டி கந்தல் மூட்டையாகி, பெஞ்சமினின் ஆடைகளெல்லாம் கண்ணால் காண்பதற்கே கண்ணறாவியாக இருந்தன. பெஞ்சமின் சாமான் பெட்டிகளையெல்லாம் நியூயார்க் நகரிலேயே வைத்துவிட்டு வந்தவராகையால், வேலையுடுப்புகளை மட்டும்தான் தரித்திருந்தார். உபரியான காலுறைகளையும் சட்டைகளையும் தம் எல்லாச் சட்டைப் பைகளிலும் அமுக்கித் திணித்து வைத்திருந்தார். அவரை யாரோ ஓடிப்போன வேலைக்காரரென்று விடுதியிலுள்ளவர்களெல்லாம் நினைத்துவிட்டார்கள். அதனால் தன்னைப் பிடித்துச் சிறையிலடைத்துவிடுவார்களோ என்று இளம் பெஞ்சமின் பீதியடைந்தார்.

துன்புறுத்தும் படுக்கையில் ஓய்வற்ற முறையிலே பெஞ்சமின் ஓரிரவைக் கழித்தார். காய்ச்சலினால் அவர் இன்னும் பலஹீனமாகவே இருந்தார். பருவக்காற்றோ ஒரே குளிராகவும் முரட்டுத்தனமாகவும் இருந்தது. எல்லாவற்றிற்கும் மேலாக, படிக்கட்டுகளில் சிறிது ஓசை கேட்டாலும், யாரோ ஓர் அரசாங்க உத்தியோகஸ்தர் தம்மைப் பிடித்துச் சிறையிலடைக்க வருகிறாரோ

வென்று நினைத்துக் கலவரமடைந்தார். அவர் தப்பியோடி வந்த வேலைக்காரனுமல்ல, சிறைப்படும்படியாக அவர் எந்தவிதக் குற்றமும் செய்யவுமில்லை—என்ற நியாய முறையெல்லாம் அந்த நாட்களில் அரசாங்க வீரர்களின் போக்கை மாற்றிவிடா. பெஞ்சமினோ துணைக்குத் தோழர்கள் இல்லாமல் ஒரு நாதியு மற்றுத் தன்னந் தனியனாயிருந்தார். இவ்வளவு சிரமப்பட்டு ஓடி வந்த பிறகு மறுபடி போஸ்டன் நகருக்கே சுருட்டியனுப்பப் படுவதை அந்த இளைஞர் சிறிதும் விரும்பவில்லை.

பொழுது விடிந்து வெளிச்சம் வந்ததுதான் தாமதம், பெஞ்சமின் தம்முடைய துணிமணிகளை யெல்லாம் வாரி யெடுத்து வழக்கம் போல் சட்டைப்பைகளுக்குள் திணித்துக்கொண்டு, பிலடெல்பியா பட்டினத்தை நோக்கிப் பாய்ந்தோடினார். ஒரு வழியாகப் பர்லிங்டன் ஊருக்கு அவர் வந்து சேர்ந்த போது, அன்று சனிக்கிழமை யானபடியாலே, தெருக்களிலெல்லாம் வியாபாரம் செய்யும் ஜனக்கூட்டம் நிறைந்திருந்தது.

"இஞ்சி ரொட்டி! சூடான இஞ்சி ரொட்டி!" என்று எவளோ ஒருத்தி கூவும் சப்தம் கேட்டது.

உடனே பெஞ்சமினுக்குப் பசியுணர்ச்சி கிளம்பிவிட்டது. "அதில் கொஞ்சம் வாங்கிச் சாப்பிடலாமே!" என்று அவர் சொல்லிக்கொண்டே தம்முடைய இலேசான பணப்பைக்குள் கையை விட்டு காசு ஒன்றைத் துழாவித் தேடினார்.

இஞ்சி ரொட்டி விற்ற ரோஜா நிறக்கிழவி பெஞ்சமினை நோக்கிப் புன் முறுவல் செய்து பெரிய ரொட்டித் துண்டொன்றைக் கொடுத்தாள். பெஞ்சமின் அவ்வளவு சின்னப்பையனைத் தோற்றமளித்தார்.

பெஞ்சமினோ இஞ்சி ரொட்டியைப் பிடுங்கிக்கொண்டு தோணித் துறையை நோக்கி விரைந்தோடினார்.

"பிலடெல்பியாப் பட்டினத்திற்குப் போக எனக்கொரு படகு வேண்டும்! அதை எங்கே கண்டு பிடிக்கலாம்?" என்று இளம் பெஞ்சமின் அங்கு வாராவதியிலிருந்த ஒருவனைக் கேட்டார்.

"அதை எங்கேயும் நீ கண்டுபிடிக்க முடியாது, பையா! ஒரு மணி நேரத்திற்கு முன்புதான் அந்தப் படகு புறப்பட்டுப் போய்விட்டது!" என்றான் அந்த ஆசாமி.

பெஞ்சமின் பெருமூச்செறிந்தார். துரதிஷ்டம் அவரைப் பின் தொடர்ந்து வருவது போலத் தோன்றியது. "அப்படியானால் இனி மறுபடி எப்போது புறப்படும்?" என்று கேட்டார்.

"செவவாய்க்கிழமைக்கு முநதி புறப்படாது ! போன படகு திருமபி வநது ஓயவு பெறவேணடும !" என்றான அநதப போவழி.

பெஞசமினுககு இதுவரை அனுபவிததிராத அதிகமான வீழசசி மனபபானமை ஏறபடடது செயவாயககிழமை வரை எபபடி உயிர வாழவது எனபதே அவருககுப புரியவிலலை. ஏனெனில அவருடைய காசெலலாம அனேகமாகக கரைநது போயவிடடன "இபபோது பிலடெலபியா படடினததிறகுப போவார யாருமிலலையா ? நான கையாளாக இருபபேனே ?" என்று பெஞசமின கெஞசுதலாயக கேடடார

"எனககுத தெரிநதவரை செவவாயககிழமைவரை யாரும போககககூடியவராய தெரியவிலலை !" என்றான அநத ஆள

பெஞசமின அஙகிருநது திருமபி மறுபடி தெருவில துயருடன் நடககலானார நிராசையின எலலைககே வநதுவிடடார

அபபோது "நீ பறநதோடின காரியம முடிநதுவிடடதா ?" என்று ஒரு கிழடடுக குரல கேடடது இஞசி ரொடடிககாரியான கிழவியே தனனைக கவனிததுககொணடு நிறபது பெஞசமினுககுத தெரிநதது

"படகு புறபபடடுப போயவிடடது இனி செயவாயககிழமை வருமவரை எனககு மறு படகு கிடைககாது எனககு என்ன செயவதெனறே புரியவிலலை !" என்றார அவளிடம பெஞசமின்

"செவவாயவரை காததிரேன !" என்றாள கிழவி

"ஆனால இஙகே தஙகுவதறகு எனககு இடமிலலையே ! "

"உனனைப பாரததால பிடிததமான பையனாயத தோனறு கிறாய் எளிமையான வீடு உனககு ஒததுககொளளுமெனறால என்னோடு நீ தஙகியிருககலாம !" என்றாள கிழவி

"ஆனால எனனிடம பணமிலலையே உனககு என்னால வாடகை தரமுடியாது !" என்றார பெஞசமின.

"பணததைப பறறி நான் ஏதாவது ஒரு வாரததை சொனனேனா ? உனனை விருநதாளியாகததான அழைககிறேன !" என்றாள கிழவி

பெஞசமின் என்னதான பெரிய பையனாகவிருநதாலும, தன்னையறியாமலே கணகளில நீர கசிநதது பெஞசமினிடம யாரும உண்மையான அனபு காடடி வெகு யுகமானதுபோல தோன்றியது கிழவியை அபபடியே முததமிட வேணடுமபோல

உணர்ச்சி கொண்டவராக அவ்வளவு தூரம் அவளிடம் நன்றியுணர்ச்சி கொண்டார்.

“என்னை உனக்குத் தெரியாது. முன்பின் தெரியாத அன்னியனை எப்படி நம்பி உன் வீட்டிற்குள் தங்க விடலாம்? ஒரு வேளை நான் குற்றவாளியாகக்கூட இருக்கலாம்!” என்றார் பெஞ்சமின்.

“நீ அப்படியெல்லாம் இருக்கமாட்டாய்! எனக்கு ஜனங்களைப்பற்றித் தெரிந்துகொள்ளக்கூடிய போதுமான அனுபவம் இருக்கிறது. நீ வழி தவறி வந்து துக்கப்படும் பையன்தான், என்பதும், செய்வாய்க்கிழமை வரை தங்க உனக்கு ஒரு புகலிடம் தேவை என்பதும் எனக்கு நன்றாகத் தெரியும்!” என்றாள் கிழவி.

“அப்படியானால் என்னைக் கூட்டிச் செல்லம்மா என்னுடைய எதிர் காலத்தைப்பற்றி ஜோசியம் சொல்லிவிட்டாய். உனக்கு ஒரு விருந்தாளியும் கிடைத்துவிட்டது!”

அந்தக் கிழவி இன்னொரு இஞ்சி ரொட்டி கொடுத்தாள், பெஞ்சமினைத் தன் வீட்டிற்கு அழைத்துச் சென்றாள்.

(அன்று) மாலை, நதிக்கரை ஓரமாக பெஞ்சமின் உலாவிக் கொண்டிருந்தபோது, பிலடெல்பியா பட்டினத்திற்குப் புறப்படக்கூடிய படகொன்று வந்தது.

“ஆஹோய்! பிலடெல்பியா பட்டினத்திற்கா படகு போகிறது?” என்று இளம் பெஞ்சமின் கத்திக் கூப்பிட்டார்.

“ஆமாம்!” என்று ஒரு மாலுமி தண்ணீரிலிருந்தவாறு திருப்பிக் கூவினான்.

“உங்களுக்கு நல்ல கையாளாக ஒருவனையும் கூட்டிப் போவீர்களா?” என்று பெஞ்சமின் கேட்டார்.

“ஏற்கனவே படகில் ஜன நெருக்கடி ஜாஸ்தி! ஆனால் இன்னுமொருவனையும் கூட்டிக்கொள்வதினால் என்ன கேடு வந்து விடுமென்று எனக்குத் தெரியவில்லை!” என்றான் அந்த மாலுமி.

பிறகு படகுத் தலைவனோடு மந்திராலோசனை நடத்தப்பட்டது. அவர்கள் பெஞ்சமினையும் படகில் கூட்டிக்கொண்டார்கள். அதற்காகப் பின்னர் மகிழ்ச்சியுமுற்றார்கள்.

அன்றிரவு படகுப் பாய்களுக்குப் போதுமான காற்று இல்லை. அதனால் மாலுமிகள் வழி நெடுகத் துடுப்பு வலித்துப்

படகோட்ட நேர்ந்தது. பெஞ்சமின் சின்னஞ்சிறு பாலகனாக இருந்தது முதலே படகோட்டிப் பழக்கப்பட்டவராகையால், துடுப்புகள் வலிப்பதில் கெட்டிக்காரராகவும் விளங்கினார். ஆனால் படகு வழி தவறிப் போனதால் பிலடெல்பியா பட்டினத்தின் கரையைப் படகுத் தலைவனால் கண்டுபிடிக்க முடியவில்லை. கடைசியாகப் படகுக் குழு ஒரு சின்னக் குடாவருகே கரையேறியது. அங்கே படகிலிருந்தவர்களெல்லாம் வெளியே ஊர்ந்து வந்து, அருகேயுள்ள ஒரு வேலியின் மரக்கிராதிகளைப் பியத்து நெருப்பு மூட்டிக் குளிர்காய்ந்தார்கள். ஏனெனில் அவ்வளவு தூரம் ஈரத்தால் அவர்கள் உறைந்து போயிருந்தார்கள்.

மறுநாட் காலை அவர்கள் கடற்குடாவை விட்டுக் கிளம்பி, பிலடெல்பியா பட்டினத்தின் உயரமான ஸ்தூபிகளைக் கண்டார்கள்.

"அதோ புகைக்கூண்டு" என்று படகோட்டிகளில் ஒருவன் கத்தினான். இளம் பெஞ்சமின் முதல் தடவையாகத் தம் புதிய வாசஸ்தலத்தைக் கூர்ந்து நோக்கினார்.

பார்வையால் பரபரப்புணர்ச்சி ஏதும் அவருக்கு ஏற்படவில்லை. அது ஞாயிற்றுக்கிழமையின் காலை நேரம். பெஞ்சமினோ நடையாலும், படகோட்டியதாலும், தூங்காதிருந்ததாலும் களைத்து அழுத்துப்போயிருந்தார். அவருடைய சட்டைப் பையில் ஒரு டாலர் பணத்திற்கு மேல் வேறு ஒரு சல்லிக் காசுமில்லை. அவர் பாங்கறியாது அசட்டைப் போலத் தெருவில் அலைந்துகொண்டிருந்தார். கடைசியில் யாரோ ஒரு பையன் ரொட்டித் துண்டொன்றைத் தின்று கொண்டிருப்பதைக் கண்டார். 'எங்கே ரொட்டி வாங்கலா'மென்று அவனிடம் பெஞ்சமின் கேட்டார். அவன் ரொட்டிக் கடைக்கு வழி காட்டினான்.

"எனக்கு ஒரு பிஸ்கோத்து வேண்டும்" என்று இளம் பெஞ்சமின் ரொட்டிக்காரனிடம் கேட்டார், மூன்றணா நாணயத்தைத் தம் சட்டைப்பையினுள் கேடித் துழாவிக் கொண்டே.

"அப்படியொன்றும் என் கடையில் இல்லை. பிஸ்கோத்து என்றால் என்ன?" என்று ரொட்டிக்காரன் கேட்டான்.

"எங்கள் போஸ்டன் நகரிலே பிஸ்கோத்துகள் கிடைக்கும்!" என்றார் இளம் பெஞ்சமின்.

"இது பிலடெல்பியா பட்டினம்!" என்றான் ரொட்டிக்காரன் எரிச்சலுடன்.

"அப்படியானால் மூன்று பென்னி ரொட்டி கொடு, எனக்கு ஓரே பசியாக இருக்கிறது!" என்றார் பெஞ்சமின்.

"அது நல்லது! ஆனால் மூன்றுபென்னி ரொட்டி என்னிடமில்லை!" என்றான் ரொட்டிக்காரன்.

"அப்படியானால் மூன்று பென்னி விலைக்கு எந்த ரக ரொட்டியாவது கொடு!" என்றார் எரிச்சலுடன் பெஞ்சமின், ஒவ்வொரு வினாடியும் பசியும் ஆத்திரமும் அதிகரித்துக்கொண்டு வந்ததினால்.

தோப்பைச் சுருள்கள் போன்ற மூன்று பிரும்மாண்டமான ரொட்டிச் சுருள்களைத் தூக்கிக் கடைக்காரன், பெஞ்சமினின் கையில் கொடுத்தான். இளம் பெஞ்சமின் திகைத்துப்போனார். அவற்றை வைத்துக்கொண்டு என்ன செய்வதென்றே அவருக்குப் புரியவில்லை. அவருடைய சட்டைப் பைகள் அனைத்திலும் ஏற்கனவே உபரிக் காலுறைகளும் சட்டைகளும் சுருட்டித் திணிக்கப்பட்டிருந்ததால், ரொட்டிகளையும் திணித்துக்கொள்ள இடமில்லை. இரண்டு ரொட்டிப் பந்துகளைத் திருப்பிக் கொடுத்துவிட்டு இரண்டு பென்னிக் கிரயத்தை ரொட்டிக்காரனிடம் திருப்பிக் கேட்க நினைத்தார். ஆனால் துணிவு வரவில்லை. கடைசியாக வேறு வழியில்லாமல், ஒவ்வொரு கையிடுக்குக்குள்ளும் ஒவ்வொரு ரொட்டி உருளையை அமுக்கிக்கொண்டு, இன்னொரு ரொட்டியைச் சாப்பிட்டுக்கொண்டே, தெருவில் நடந்துசென்றார்.

சந்தைத் தெருவில் நாற்சந்தியை நோக்கித் தள்ளாடித் தள்ளாடி நடந்துகொண்டிருந்தபோது, அழகான மங்கை ஒருத்தி அவளது தகப்பனின் வீட்டு வாசலில் நிற்பதைக் கண்டார். ரொட்டி மூட்டைகளின் பளுவைத் தாங்காமல் பெஞ்சமின் குனிந்து செல்வது வேடிக்கையாகத் தோன்றியதால் பெஞ்சமினை நோக்கி அந்தப் பெண் சிரித்தாள். இளம் பெஞ்சமினுக்கு அசடு தட்டியது. பெண்ணொருத்தி தன்னை நையாண்டி செய்வதைக் கண்டு, அதுவும் இவ்வளவு பேரழகியான ஒருத்தி தன்னைப் பார்த்துச் சிரிப்பதைக் கண்டு, அவருக்கு ஆத்திரம் அளவுமீறி எழுந்தது. வயிற்றெரிச்சல் தீர அவளை வாயால் திட்டித் தீர்த்திருப்பார்; ஆனால் வாய்முழுக்க ரொட்டி திணிக்கப்பட்டிருந்ததால் பேசாமலிருந்துவிட்டார்!

அந்தச் சமயம் அவள்தான் தன் வருங்கால மனைவி என்பது அவருக்குத் தெரியாது. ஆனால் அதுதான் அவர்களின் முதற் சந்திப்பு. இந்தக் கன்னிகையின் பெயர் டிபோரா ரீடு ஆகும். சில ஆண்டுகளுக்குப் பிறகு அவளைத்தான் பெஞ்சமின் பிராங்ளின் மணம் புரிந்துகொண்டார்.

5 அச்சாளன்

பெஞ்சமின் பிராங்ளின் பலவிதமான தொழில்களிலும் ஈடுபட்டார்; சிறந்ததொரு வணிகராகவும் விளங்கினார். ஆனால் எந்தக் காலத்திலும் தம்மை ஓர் அச்சாளராகவே நினைத்து

வந்தார். அவர் பிலடெல்பியா பட்டினத்திற்கு வந்ததும் அச்சுத் தொழில் பார்ப்பதற்குத்தான். வேறு எந்தவிதமான வேலையும் அவரது தலைக்குள் நுழையவில்லை.

பெஞ்சமின் தம்மிடம் உபரியாக இருந்த இரண்டு ரொட்டிச் சுருள்களையும் தம்மைவிடப் பசியுள்ளவர்களாய்த் தோன்றிய யாரோ ஒரு கிழவியிடமும் சிறுவனிடமும் கொடுத்துவிட்டு, தெருக்களில் நன்கு ஆடையுடுத்திச் செல்லும் ஜனக் கும்பல்களைப் பின்பற்றிச் சென்றார். குவேக்கர் கூட்டம் கூடும் இடத்தை நோக்கி ஜனக் கும்பல் போய்க் கொண்டிருந்தது.

பெஞ்சமின் அதனுள்ளே சென்று சிந்திக்க உட்கார்ந்தார். ஆனால் உறக்கம் வந்து அசத்தவே அயர்ந்து உறங்கிவிட்டார். யாரோ அவரது தோளில் தட்டி எழுப்பி ஸத் சங்கம் முடிந்து விட்டது என்று சொல்லும்வரை அவர் கண் விழிக்கவுமில்லை. வேலை தேடும் வேட்டைக்குக் கிளம்பும் முன் கொஞ்சம் தூக்கம் பிடித்தால் தேவலை என்று கருதி, ஓர் அறையை வாடகைக்கு அமர்த்திக்கொண்டு வெகுநேரம் வரை உறங்கினார். பிறகு வில்லியம் ப்ராட்போர்டு என்பாரின் குமாரரான ஆண்ட்ரு ப்ராட்போர்டு என்பவரைத் தேடியலையும் வேட்டையில் இறங்கினார்.

"அடேடே, சற்று முன்தானே ஒரு வேலையாளை அமர்த்திக் கொண்டேன்!" என்று ஸ்ரீமான் ப்ராட்போர்டு கூறினார். இது பெஞ்சமினுக்குப் பெரும் துக்கத்தை உண்டாக்கியது. எதுவும் சமயத்தில் கைக்கு எட்டாமல் நழுவிப் போய்விடுவது போலவே அவருக்குத் தோன்றியது.

'ஒருவேளை சாமுயல் கெய்மர் உன்னை உபயோகப்படுத்திக்கொள்ளலாம்!" என்றார் ப்ராட்போர்டு, பெஞ்சமினை ஏறிட்டுப் பார்த்து, அவரைப் பிடித்துப்போனதால்.

கெய்மெர் என்பவர் இன்னொரு அச்சாளர். அவரைக் காண இருவரும் சென்றனர். "தோழரே, உம்முடைய தொழில் தெரிந்த ஓர் இளைஞனை உம்மைப் பார்ப்பதற்காக அழைத்து வந்திருக்கிறேன். ஒருவேளை அப்படிப்பட்ட ஓர் ஆள் உமக்குத் தேவைப்படலாம்!" என்று ஸ்ரீமான் சாமுயல் கெய்மரிடம் ஸ்ரீமான் ப்ராட்போர்டு கூறினார்.

கெய்மர் தம் நீண்ட தாடியை விரல்களால் உருவிக் கொண்டே, பெஞ்சமினைக் கூர்ந்து நோக்கினார். அப்போது பெஞ்சமின் சுத்தமாக முகம் கழுவி சுத்தமான ஆடைகளுடன் நன்கு தோற்றமளித்தார். கடைசியாக அந்த இளைஞருக்கு ஒரு வேலை கொடுக்க அவர் சம்மதித்தார். கடைசியில் பெஞ்சமின் கூலிப்பணம் சம்பாதிக்கத் தொடங்கிவிட்டார்.

பிலடெல்பியா பட்டினத்தின் முதற் பனிக்காலம் நெடுகிலும் பெஞ்சமின் அற்புதமாகப் பொழுது போக்கினார் சட்டைப் பையில் சலசலக்கும் பணத்துடன் அவர் சுதந்திர புருஷனாக விளங்கினார் 'அதைச் செய், இதைச் செய்' என்று ஏவ அவருடைய தந்தையோ, அவரை அமுக்கி நெருக்கிச் சவுக்கடிகள் கொடுக்க அவருடைய தமையன் ஜேம்ஸோ அருகில் இல்லை!

அந்தக் காலத்தில் அமெரிக்கக் குடியேற்ற நாடுகளில் பிலடெல்பியாதான் மிகப் பெரிய நகரமாகும்—போஸ்டன் நகரையும் நியூயார்க் நகரையும் ஒன்று சேர்த்தாலும் அதையும் விடப் பெரிதான நகரமாகும்—அதன் ஜனங்கள் தலைசிறந்த படிப்பாளிகள், அதி பணக்காரர்கள் இப்போது நாம் பெரிய நகரங்கள் என்றால் நினைப்பதுபோல அது அவ்வளவு பெரிய நகரம் அல்ல என்றாலும், அந்தக் காலத்தில் அதுதான் அமெரிக்கக் குடியேற்ற நாடுகளுக்குப் பட்டினமாகும்

பருவ சீதோஷ்ண சக்திகளால் பழுப்பேறிய வீடுகளைத் தாறுமாறாகத் திணித்து வைத்த குவியல் போல், நீல நிறத் துறைமுகத்திற்கு மேலே போஸ்டன் நகரம் எழும்பி நின்ற காலத்திலே, பிலடெல்பியா நகரமானது பள பளக்கும் வர்ண ஜாலங்களின் பட்டினமாக விளங்கியது கடைத் தெருவில் பெரும்பாலான கடைகளின் முகப்புகள், சிவப்பு, ஊதா, பச்சை அல்லது மஞ்சள்போன்ற வர்ணங்களால் பூசப்பட்டிருந்தன அவற்றின் முன் ஊஞ்சலாடும் பெயர்ப் பலகைகளோ வர்ணத் தாலும் ஜிகினா மெருகாலும் ஜாஜ்வல்யமாய் பளபளத்தன. சுத்தமயமான தடம் பதிந்த வீதிகளிலே கட கடவென்று பாய்ந்து செல்லும் வாகனாதி வண்டிகளுங்கூடக் கண்ணைப் பறிக்கும் வர்ணப் பூச்சுகளுடன் குதூகலமாக விளங்கும்

பிலடெல்பியா பட்டினத்து ஜனங்கள் பளபளவென்ற வர்ண ஜொலிப்புள்ள ஆடைகளையே அணிந்து வந்தனர் ரமமிய ஆடைகளிலே அவர்களுக்கு அபாரமான ருசி உண்டு ஒரு சில ஸத் சங்கத்தினர் மட்டும் உச்சிமுதல் உள்ளங்கால்வரை சாம்பல் நிற ஆடை அணிந்து திரிந்தனர் ஆயினும் பணக்காரர்களான ஸத் புருஷர்கள் நகரின் நாகரிக மோஸ்தரைப் பின்பற்றி, பட்டும், வானவில்லின் எல்லாவித வர்ணங்களிலும் வெல்வெட்டும் தரித்து, அவற்றுடன் புனை தலை மயிரும், நகைகளும் அணிந்தார்கள். பெண்மணிகளோ அபாரமான ஆடைகள் உடுத்தி, உயரமான கூந்தல் கொண்டை அலங்காரங்களுடன், மிகவும் அழகாகத் தென்பட்டார்கள்

பிலடெல்பியா பட்டினவாசிகளுக்கு, தோழர்களாய் ஒன்று கூடுவதிலும், விருந்துக் கோஷ்டிகளிலும் மோகம் அதிகம் உண்டு கூட்டாளிகளாய் ஒன்றுகூடி, உரையாடி, உற்சாக

மாய்ப் பாடி, உண்பதிலே அவர்கள் மட்டற்ற மகிழ்ச்சி கண்டார்கள் அந்த நாட்களில், ஜனங்கள் உல்லாசமாய்ப் பொழுது போக்கி வரக்கூடிய கேளிக்கை இடங்கள் மிகக் குறைவானபடியாலே, அவர்கள் வீடுகளிலே ஒன்றுகூடித் தங்கி ஏராளமாக அரட்டையடிப்பார்கள் சம்பாஷணை—அதுதான் அவர்களுக்குப் பிரதானம்!

பெஞ்சமினுக்குப் பேசுவது என்றால் பிரியம் அதிகம் ஏராளமாகப் பேச வேண்டும் என்பதற்காக ஏராளமான புஸ்தகங்கள் படித்தார் படிப்பதிலும், மற்றும் தாம் மகிழும் விஷயங்களிலும் பற்றுள்ளவர்களான தம் வயதையொத்த வாலிபர்கள் பலரை பிலடெல்பியா பட்டினத்தில் பெஞ்சமின் சந்தித்தார் நண்பர்கள் பலரைச் சேகரிக்கத் தொடங்கினார்—அது என்னவோ அவருக்கு மிகச் சிரமமாகவும் படவில்லை தம் ஆயுளின் இறுதிவரை அதைக் கைவிடவுமில்லை!

அவருடைய முதலாளியான ஸ்ரீமான் கெய்மர், பெஞ்சமின் தங்குவதற்கும், சாப்பிடுவதற்கும் ரீடு என்பவரின் வீட்டில் ஏற்பாடு செய்தார் அந்த ஆசாமிதான், டிபோரா ரீடு என்ற மங்கையின் தந்தை—(வாலிபர் பெஞ்சமின் ரொட்டிப் பந்தைத் தூக்கிக்கொண்டு வீதியிலே நடக்கையில் பெஞ்சமினைக் கண்டு சிரித்தாளே, அந்தக் கன்னிகையின் தந்தை!)

இவ்வாறாக, பிலடெல்பியா பட்டினத்தில் பெஞ்சமினின் ஆனந்தமான நாட்கள் ஆரம்பமாயின அவர் உலகின் எங்கணும் வசிக்க நேர்ந்தாலும், அந்தப் பட்டினம்தான் அவருடைய உண்மையான சொந்த ஊர் ஆயிற்று!

வீட்டை விட்டு வெளிக்கிளம்பி, பையனாயிருந்தவர் வாலிபராக மாறி, சொந்தமாகப் பணம் சம்பாதித்துச் சொந்தமாகச் சிநேகிதர்களைத் தேர்ந்தெடுத்துக்கொண்டு விளங்கும் முதல் வருஷத்தைப் போல் வேறெந்த வருஷமும் எவர் வாழ்க்கையிலும் இருப்பதில்லை போலும்! போஸ்டன் நகரிலோ பெஞ்சமினின் கடைசி நாட்கள், அந் நகரத்தையே முடிந்தவரையில் அவர் மறக்க முயலும் அளவுக்கு—மிகத் துன்பகரமாயிருந்தன அவருடைய தமையரான ஜேம்ஸ் மறுபடியும் அலுப்பான கற்றுக்குட்டி வேலைக்குத் தன்னை இழுத்துக்கொண்டு வந்துவிட ஏதாவது திட்டம் தீட்டுவாரோ என்ற பயம் பெஞ்சமினுக்கு உள்ளூர இருந்துகொண்டே வந்தது அதனால், தாம் ஓடி வந்திருக்கும் இருப்பிடங்களைப் பற்றி யாருக்கும் தகவல் தெரியாதபடி ரகசியமாகவே வைத்திருந்தார் வெளியே யாரிடமும் சொல்லவில்லை என்று ஜான் கோலின்ஸ் என்பவன் சத்தியம் செய்து கொடுத்திருந்ததினால் அவனைத் தவிர பிறந்த ஊரிலுள்ள வேறு யாருக்குமே அவர் கடிதமும் எழுதவில்லை!

ஆயினும், பிலடெல்பியா பட்டினத்தில் பெஞ்சமின் பிரசன்னமாயிருக்கிறார் என்ற பேச்சானது சுற்றிலும் பரவி, வடக்கே நியூகாஸில் நகர் டெலவேர் நகர் வரைக்கூடப் பிரயாணம் செய்தது. டெலவேர் நகருக்கும் போஸ்டன் நகருக்குமிடையே செல்லும் வியாபாரக் கப்பலொன்றின் தலைவராக விளங்கிய காப்டன் ராபர்ட் ஹோம்ஸ் என்பவர், பெஞ்சமினின் சகோதரிகளில் ஒருத்தியின் கணவராவார். காற்றுவாக்கில் வந்த பெஞ்சமினைப் பற்றிய செய்தியை அவர் கைப்பற்றிக்கொண்டார். உடனே தம் இளம் மைத்துனனுக்கு வீடு திரும்பும்படி ஏங்கடமானதொரு கடிதம் எழுதினார். உதவாக்கரைப் பிள்ளையால் வீட்டிலுள்ள அனைவரும் மனமிடிந்துபோய்க் கவலைப்படுவதாய்க் கடிதத்தில் கூறியிருந்தார்.

பெஞ்சமினுக்கோ, தம் தமையனார் கொடுத்த அடிகளின் ஞாபகமும், தமையனார் போஸ்டன் நகரிலே தமக்கு வேலை கிடைக்காதபடி செய்துவந்தாரே என்ற எண்ணமும் இன்னும் தீவிரமாக உறுத்திக்கொண்டேயிருந்தன. இவையெல்லாம் கூறிக் கடிதத்தின்மூலம் காப்டன் ஹோம்ஸுக்குப் பதில் அனுப்பினார். போஸ்டன் நகரிலிருந்து தாம் ஓடிவர நேர்ந்த காரணங்களைக் கூறுமிடத்து வேறு சில விபரங்களையும் கூடவே சேர்த்திருந்தார்.

இப்போது, பெஞ்சமின் பிராயங்களின், கடிதம் எழுதுவதில் மாபெரும் நிபுணராகவே விளங்கினார். சரியாக வளர்ச்சியுறாத பருவத்திலகூட, கடிதத்தைப் படிப்பவர் எவர் மனதிலும் அது ஆழப் பதியும்படியான விதத்திலே கடிதம் எழுதுவார்.

பெஞ்சமினின் கடிதம் காப்டன் ஹோம்ஸிடம் கொண்டு வந்து கொடுக்கப்பட்ட சந்தர்ப்பமானது அவர், பென்ஸில்வேனியாவின் ஆங்கிலேயக் கவர்னரான ஸர் வில்லியம் கெய்த் என்பவரோடு உரையாடிக்கொண்டிருந்த நேரமாயிருந்தது.

அவர், கடிதத்தைப் படித்து முடித்ததும், "என் சொந்தக் காரப்பையன் வீட்டை விட்டு ஓடிப்போனவன் என்றாலும் மிகவும் உற்சாகமான பையன்!" என்றார்.

"ஓடிப்போனவனா?" என்றார் கவர்னர் ஸர் வில்லியம்.

காப்டன் ஹோம்ஸ் அந்தக் கதையையெல்லாம் சொல்லிக் கடிதத்தையும் கொடுத்தார். "இதில் அதற்குரிய காரணங்களையெல்லாம் விவரித்திருக்கிறான்!" என்றார்.

"அவனுக்கு நிறைய சாமர்த்தியமிருக்கிறது. நிதானம் தவறாத மனவலிமையும் இருக்கிறது. அவனை வந்து என்னைச் சந்திக்கும்படி சொல்லும்!" என்றார் கவர்னர்.

கவர்னர் பெருந்தன்மையான உணர்ச்சி கொண்டார். அத்தகையதொரு புத்திசாலிப் பையன் பிலடெல்பியா பட்டினத்தில் சொந்தமாகவே ஒரு அச்சகம் திறந்து, பென்ஸில்வேனியா காலனியோடு தொழில் நடத்த வேண்டும் என்று காப்டன் ஹோம்ஸிடம் ஆலோசனை கூறினார். அதுமட்டுமல்ல, செயல்வீரரான ஸர் வில்லியம் அத்துடன் விஷயத்தை நழுவ விடவில்லை. பிலடெல்பியா பட்டினத்திலுள்ள சாமுயல் கெய்மரின் அச்சுக்கூடத்திற்கும் விஜயம் செய்தார்.

பென்ஸில்வேனியா குடியேற்ற நாட்டின் கவர்னரே விஜயம் செய்கிறார் என்றால், அச்சுக்கூடத்திலும் அண்டையிலும் எவ்வளவு பெரிய பரபரப்பு ஏற்பட்டிருக்கும் என்று நீங்களே கற்பனை செய்துகொள்ளலாம். எல்லோரும் திரு திருவென விழித்துக்கொண்டு அலைந்தார்கள். அச்சுக்கூட முதலாளியோ, இவ்வாறு கவர்னர் விஜயம் செய்யும்படியான கௌரவம் தமக்கு ஏன் கிடைத்தது என்று ஒன்றும் புரியாமல், தாழ்ந்து வணங்கி கவர்னரை வரவேற்றார். கவர்னருடன், டிலாவேர் நகரிலிருந்து தளபதி பிரெஞ்சு என்ற நண்பர் ஒருவரும் வந்திருந்தார்.

“அச்சடிக்கும் பிராங்ளின் என்பவனைப் பற்றி விசாரித்துப் போகவே நான் வந்தேன். தயவு செய்து அவனை இங்கே கொண்டுவாருங்கள்!” என்றார் கவர்னர்.

அதைக் கேட்டதும் அச்சுக்கூட முதலாளியின் விழிகள் இரண்டும் வெளியே பிதுங்கிவிட்டன என்றே சொல்லலாம். அப்போது நஞ்சிட்ட பன்றிக்குட்டியைப் போலவே அவர் வெறித்துப் பார்த்தார் என்று பெஞ்சமினே பின்னொரு சமயம் அது பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்.

பதினெட்டு வயது நிரம்பிய வாலிபரை இழுத்து வந்து கவர்னர் முன் நிறுத்தியதும், அவர் பெஞ்சமினை மரியாதையுடனும் முகமனுடனும் நடத்தினார். தெருமுனையிலுள்ள பானக சாலைக்கு வருமாறு அழைத்தார். அங்கே ஏதாவது உற்சாகமாக அருந்திக்கொண்டே உரையாடலாம்!

“நீ புத்திசாலியான பையன். நீயே சொந்தமாக அச்சுத் தொழில் நடத்தி ஏன் சம்பாதிக்கக்கூடாது? அரசாங்கத்தில் எங்களுக்கு நல்லவிதமான அச்சடிப்புத் தேவைப்படுகிறது. உனக்கு ஆர்டர்கள் கிடைக்கும்படி நான் கவனித்துக்கொள்வேன்!” என்றார் கவர்னர்.

“நீங்கள் எனக்குப் பெருத்த கௌரவமளிக்கிறீர்கள். ஆனால்—ஐயா, அச்செழுத்துக்களோ அச்சு யந்திரங்களோ வாங்க என்னிடம் காசு இல்லையே!” என்றார் பெஞ்சமின்

"தொழில் துவங்கத் தேவையான பணத்தை ஒருவேளை உன் தகப்பனாரே கொடுப்பார்!" என்றார் கவர்னர்.

பெஞ்சமின், தாம் வீட்டைவிட்டு ஓடி வந்ததையோ, தம் தமையனின் கீழ் சுற்றுக்குட்டி வேலை ஒப்பந்தத்தை முறித்துக் கொண்டதையோ அவரிடம் சொல்ல விரும்பவில்லை. அதோடு, பிலடெல்பியா பட்டினத்தில் தாம் இருக்கிற விஷயமே தம் தந்தைக்குத் தெரியாதபோது, அப்பட்டினத்திலே தம்மைத் தொழிலில் அமர்த்தி வைப்பாரா என்று பெஞ்சமினுக்கு அவ்வளவாக நம்பிக்கையும் இல்லை.

"என் தந்தை இதற்கு என்ன சொல்லுவாரோ என்று எனக்குத் தெரியவில்லை!" என்றார் பெஞ்சமின் ஒரு கணம் கழித்து.

"நானே அவருக்குக் கடிதம் எழுதுகிறேன். அதை எடுத்துக் கொண்டு நீ போஸ்டன் நகருக்குப் போய், அவரை வற்புறுத்தலாம்!" என்றார் கவர்னர்.

"நிரம்பச் சரி! நீங்கள் எவ்வளவோ நல்லது செய்கிறீர்கள்" என்றார் பெஞ்சமின்.

"இதைப் பற்றி நீ யாரிடமும் ஒன்றும் வெளியிடாமலிருப்பது தான் புத்திசாலித்தனமாகும். இல்லையெனில், உன்னை வேலைக்கு வைத்திருக்கும் முதலாளி உனக்குத் தெரியாமலே ஏதாவது வத்தி வைக்கக்கூடும்!" என்றார் கவர்னர்.

பிரமிப்புடனும் இந்த இரகசியத்துடன் பெஞ்சமின், வேலைக்குத் திரும்பிச் சென்றார்.

அது நடந்து சில நாட்களுக்குள்ளாகவே, பெஞ்சமினின் தந்தைக்கு விலாசமிட்டுக் கவர்னர் ஒரு கடிதம் அனுப்பினார். அதில் பெஞ்சமினை நிறையப் பாராட்டி, பெஞ்சமின் தொழிலில் பிரவேசிக்க மூலதனம் கொடுக்குமாறு பெஞ்சமினின் தந்தைக்கு வற்புறுத்திக் கூறியிருந்தார்.

இவ்வாறு பெஞ்சமின் பிராங்ளின், போஸ்டன் நகரைவிட்டுத் துயரத்தோடு வெளியேறி ஏழுமாதம் ஆவதற்குள்ளாகவே, மறுபடி அங்கே திரும்பிப் போனார். இந்தச் சமயம் அவர் உச்சி முதல் உள்ளங்கால்வரை ரம்மியமான புத்தாடைகள் தரித்திருந்தார். சட்டைப் பைகள் நிறைய வெள்ளி நாணயங்கள் சல்சலத்தன. அவர் ஓர் கடிகாரமும் கொண்டு வந்திருந்தார். எல்லாவற்றிற்கும் மேலாக பென்ஸில்வேனியா காலனியின் கவர்னரிடமிருந்தே ஓர் கடிதமும் கொண்டுவந்திருந்தார்.

பெஞ்சமின் ஊரைவிட்டு ஓடியதிலிருந்து அவரைப் பற்றி ஒரு தகவலும் அவருடைய குடும்பத்தினருக்கு எட்டவில்லை.

(அவருடைய மைததுனரான காபடன் ஹோலடஸோ இனனும கடலிலே அலைநதுகொணடிருநதாா) அதனால பெஞசமினைக கணடதும அவருடைய நாசுககான தோறறததைக கவனித ததுமே, அவருடைய குடுமபததினா உணமையிலே மலைததுப போய விடடாாகள அவருடைய தமையனை ஜேமஸைத தவிர மறறெலலோரும அவனை உறசாகததுடன வரவேறறாாகள

பெஞசமினுககோ உடனே ஜேமஸின அசசகததிறகு ஓடிபபோய தம செலவ போககததை யெலலாம காடடிவிட வேணடும எனறு ஏறபடும துடிபபைப பொறுககுககொண டிருகக முடியவிலலை அசசுககூடததில அவருடைய பழைய சகத தொழிலாளாகளெலலாம அவனைக குமபலாகச சூழநது கொணடாாகள பெஞசமினின புததாடைகளை விரல நுனியால தடவிப பாாதது, பிலடெலபியா படடினததைப பறறி விசாரிகக லானாாகள ஆனால ஜேமஸோ, அதில பஙகு கொளளாமல உதாசீனமாய எரிசசலுடன தளளி நினறாா

"அது அறபுதமான படடினம! அஙகே என வாழககை மிகவும ஆனநதமாக இருககிறது அஙகே திருமபிப போகாமல இஙகே எனனால அதிக நாள தஙகியிருககக கூட முடியாது!" எனறாா பெஞசமின

"உனனை அவாகள விரடடிவிடுவாாகள எனபதில எனககுச சநதேகமேயிலலை எவவளவு சீககிரமாக இஙகே நீ திருமபி வருகிறாயோ அவவளவுககு நலலதாயிருககும!" எனறாா ஜேமஸ ஒரு மூலையிலிருநது

"பெனஸிலவேனியா படடினததிலுளள மனித சகவாசம மிகவும இணககமானது இநத இடததைவிட அதைப பறறி நான எவவளவோ பெருமையாகப பேசலாம!" எனறாா பெஞசமின

கறறுககுடடி வேலையாடகளில ஒருவன, "அது பெரிய பணககாரப படடினமாக இருககவேணடும அஙகே எலலோ ரிடமுமே காசு பணம இருககுமெனறு நினைககிறேன!" எனறான.

"ஆமாம, ஆமாம, நிசசயமாக!" எனறு பெஞசமின கூவிக கொணடே, சடடைப பையிலிருநது கை நிறைப வெளளி நாணயஙகளை வெளியே எடுததாா கறறுககுடடி வேலையாட களின கணகள ஆசசரியததால வெளியே பிதுஙகின போஸடன நகரில காகித நாணயததைததான உபயோகிபபது வழககம வெளளி நாணயஙகளைக கணணால காணபதுகூட வெகு அபூாவம!

"உங்களுக்கெல்லாம் ஜோராக ஒரு விருந்து தர விரும்புகிறேன்!" என்று பெஞ்சமின் கம்பீரமாக ஒரு நாணயத்தைத் தூக்கிக் கீழே விட்டெறிந்தார்.

தமையனார் ஜேம்ஸோ தம் பற்களை நற நறவென்று கடித்தார். ஆனால் எல்லாக் கற்றுக்குட்டி வேலையாட்களும் அச்சாளர்களும் குதூகலத்துடன் ஏற்றுக்கொண்டார்கள்.

"நல்லது. நான் போயாகவேண்டும். எனக்குச் சொந்த வியவகாரம் ஒன்றிருக்கிறது!" என்று பெஞ்சமின் தம் சட்டைப் பையிலிருந்து தம் கடிகாரத்தை எடுத்து மணி பார்த்தார்.

அந்த நாட்களில் கடிகாரம் என்பது குடியேற்ற நாடுகளிலே மிகவும் அபூர்வமான ஒரு சரக்கு. சொந்தமாக ஒரு கடிகாரம் வாங்க முடியுமென்ற நம்பிக்கையுள்ள மனிதன் அந்த வட்டாரத்திலே ஒருவனும் இருந்திருக்க மாட்டான். ஆதலால் பெஞ்சமினின் கடிகாரத்தை எல்லோரும் வியப்புடன் வெறித்துப் பார்த்தார்கள். அந்த அழகான விளையாட்டுச் சாமானைக் கையால் தொட்டுப் பார்க்கவும் ஆசைப்பட்டார்கள்.

தமையனாருக்கு அதுதான் கடைசி அடி. தம் வேலைக்காரர்களின் முன்னிலையிலே பெஞ்சமின் இவ்வளவு பெருமையாகக் காட்டிக்கொண்டதை ஜேம்ஸ் மன்னிக்கவே இல்லை. சகோதரர்களிடையே சமாதானம் செய்து குடும்பத்தில் அமைதியுண்டாக்க அவர்களின் தாயார் முயன்றபோது, மன்னிக்க முடியாதளவு தூரத்திற்குப் பெஞ்சமின் தம்மை அவமானம் செய்துவிட்டதாக ஜேம்ஸ் கூறினார். ஆனால் பெஞ்சமினுக்கோ, தாம் தமையனாரிடமிருந்து வாங்கிய அடி உதைகளுக்கும் மோசமான நடத்தைகளுக்கும் பதிலுக்குப் பதில் செய்வதாயப் பட்டதே தவிர, வேறொன்றும் அதிகமாகச் செய்துவிடவில்லை என்ற உணர்ச்சிதான் ஏற்பட்டது.

கவர்னரிடமிருந்து வாங்கி வந்த கடிதத்தைப் பெஞ்சமின் தம் தந்தையிடம் காட்டியதுமே, அவர் அக் கௌரவத்துக்கு எவ்வளவு அதிகமோ அவ்வளவு தூரம் சீறினார்.

"சின்னஞ்சிறு பயலுக்குத் தொழில் அமர்த்திக் கொடுக்க வேண்டுமென நினைக்கிறீரே, இவர் என்னய்யா மனுஷர்!" என்று கேட்ட அவர், பெஞ்சமினிடம், "நீ பெரியவனாக வளர இன்னும் மூன்று வருஷத்திற்கு மேலாகுமே?" என்றார்.

"நல்லது! ஆனால் அவரோ கவர்னர்! அவருக்கு அது தெரிந்துதானே இருக்கும்!" என்றார் பெஞ்சமின் சன்னமான குரலில்.

பெஞ்சமினின் தந்தையோ, பெரும்பாலான அமெரிக்கக் குடியேற்ற நாடுகளின் பிரஜைகளைப் போலவே, சுயேச்சையான

போககுளளவா. பெரிய பெரிய பட்டம பதவிகளேக கண்டு தமமீது எவரையும ஏறி மேய விடக கூடியவரலல

"நான உன் தகப்பனா! அநதக கவானரைவிட எனககுத் தான் உனனைப பறறி நன்ருகத தெரியும!" எனறு விளமபினா அவா

"ஆமாம, ஐயா" எனறு கூறிய பெஞ்சமின் தமமுடைய ரோஜா நிறக கறபனைமேக மணடலததைவிட்டுப பூமிககு இறஙகி வநதார

"இன்னும உனககு நிறைய அனுபவம வருமவரை காததிரு! பிறா பணததைதக கையாடும பொறுபபுகளை ஏறறுக் கொளவதறகு இனனும வயது வராத சிறுவன நீ!" எனறு பெஞசமினின் தநதை ஆலோசனே கூறினா

கவானா வருததத திடடததில தம தநதை விழுநதுவிட மாடடாா எனபதைப பெஞ்சமின கணடுகொணடதும, மறுபடியும பிலடெலபியா படடினததிறகே திருமபிப்போயவிடத தயாரானா பெஞசமின அதை அவருடைய தநதை தடுக்க விலலே ஆனால எபபடியெலலாம நடநதுகொளவது எபபடி யெலலாம பணததைச சேமிபபது எனபது பறறி ஒரு பெரிய பிரசஙகமே பொழிநது தளளிவிடடாா தமமுடைய மகன சொநதமாகத தொழில நடதத இன்னும போதுமான வயதும அனுபவமும அடையவிலலே எனறு நினைபபதாகக கவான ருககும கடிதமும எழுதிவிடடாா

அநதக கடிதததை கவானா வாசிததபோது பெஞசமினிடம அவா, "உன் தநதையோ அளவுககு மீறி அதி ஜாககிரதையாக இருககிருா நானே, இது போனற விஷயஙகளுககு வயது முககிய மலல என்ற அபிபபிராயம உளளவன! அதனால நீ கலஙகாதே இநதக குடியேறற நாடடில நலலதோா அசசாளனே ஏறபடுதத நான தீாமானிததுவிடடேன் நானே உனனை அவவாறு ஆககி விடுகிறேன்!" எனருா

அதன் பினனா கவானா, அசசாலேககுத தேவையான சாமானகளுக்கு ஒரு படடியல தயாரிககுமபடி பெஞசமினிடம கேடடாா, அவறறை விலேககு வாஙகி வர இஙகிலாநதிறகு யாததிரை கிளமபுமபடியும யோசனே கூறினா

"தேவையான மூலதனம நான் கொடுககிறேன் உனககு லாபம வருமபோது அநதப பணததை நீ திருபபித தரலாம!" என்ருா கவானா

இது 'கனஜோா' என்று பெஞ்சமின் கருதினர் ஆனால, கவானரிடம அதறகுத தேவையான பணம இலலே என்பதைக்

காலங் கடந்துதான் புரிந்துகொண்டார். கவர்னர் கருணையுள்ள கண்ணிய புருஷர்தாம், எல்லோருமே தம்மை விரும்ப வேண்டும் என்றும் ஆசைப்படுபவர்தாம், ஆனால் அவரிடம் அவ்வளவு அதிகமான பணம் இல்லாததால், காப்பாற்ற முடியாத வாக்குறுதிகளைக் கணக்கு வழக்கில்லாமல் வழங்குவதில் மட்டும் கருத்துடையவராய் இருந்தார்!

பெஞ்சமினோ தமக்குத் தேவையான பணமும் கடிதங்களும் அனுப்பக் கவர்னர் தவறிவிட்டார் என்பதைக் கண்டுபிடித்த போது, அச்சிடும் யந்திரங்களும் அச்செழுத்துக்களும் வாங்க இங்கிலாந்திற்குக் கப்பலில் போய்க் கொண்டிருந்தார். அமெரிக்காவுக்குத் திரும்பி வர பிரயாணச் சீட்டு வாங்கவும் அவரது கையில் போதுமான காசு இல்லை. அதனால் இங்கிலாந்திலுள்ள ஓர் அச்சுக்கூடத்தில் வேலை பார்க்கலானார். அது கெட்ட காலந்தான் என்றாலும் அதனால் நன்மையும் கிடைக்காமல் போகவில்லை. ஏனெனில் கடைசியாக அவர் தாயகம் திரும்பியபோது, அச்சுத் தொழிலைப் பற்றி அமெரிக்காவிலுள்ள எவரையும்விட அதிகம் கற்றறிந்தவராயிருந்தார். அதைக் கஷ்டமான வழியில்தான் கற்றுக்கொண்டார்.

லண்டன் மாநகரிலுள்ள அச்சுக் கூடங்களில் பெஞ்சமின் ஒன்றரை வருஷம் வரை வேலை செய்தார். அதன் பின்னர் சொந்த ஊருக்குப் போக வேண்டுமென்ற ஏக்கம் அவருக்கு அதிகம் உண்டாயிற்று. அப்போது பிலடெல்பியா நகர வாசியான டென்ஹாம் என்ற பெயருள்ள ஒரு வியாபாரி, பிலடெல்பியா பட்டினத்திலுள்ள வாட்டர் வீதியில் தாம் திறக்கும் ஓர் கடையில் பெஞ்சமினுக்கு ஒரு வேலை தருவதாகச் சொன்னார். பெஞ்சமின் உடனே சம்மதித்து விட்டார். அவருடைய கப்பற் பயணத்திற்குத் தேவையான பணத்தையும் முன் அச்சாரமாகக் கொடுத்தார். பிலடெல்பியா பட்டினத்திலுள்ள டென்ஹாமின் பலசரக்குக் கடையில் பெஞ்சமின் வேலை செய்தபோது அங்கே எப்படிச் சாமான்களை விற்பது, எப்படிக் கணக்குகள் வைத்துக் கொள்வது என்பதையெல்லாம் பெஞ்சமின் நன்றாகக் கற்றுக் கொண்டார். ஆனால் சில காலத்திற்குள்ளாகவே அவருக்கும் முதலாளிக்கும் கடுமையான பாரிச நோய் உண்டாகி, ஸ்ரீமான் டென்ஹாம் மாண்டுபோனார்! மறுபடியும் பெஞ்சமின் கையில் தம்பிடியில்லாத பராரியாகி, பழைய அச்சுக்கூட முதலாளியான கெய்மெரிடம் தமக்குப் பழைய வேலையைக் கொடுக்கும்படி கேட்டுக்கொண்டார்.

அந்த வேலையிலிருந்து பெஞ்சமின் விரைவில் விலக்கவும் பட்டார். அச்சுக்கூடத்தில் பயிற்சி பெறாத வேலைக்காரர்களின் குழுவிற்குப் பெஞ்சமினைத் தலைவராக அமர்த்தி, அவர்கள்

பெஞ்சமினிடமிருந்து வேலையைக் கற்றுக்கொண்ட உடனேயே, பெஞ்சமினை வெளியேற்றிவிட முதலாளி திட்டம் தீட்டினார். முதலாளி தம் சொந்த லாபம் ஒன்றிற்காகத்தான் பெஞ்சமினை உபயோகப்படுத்திக் கொண்டார். ஏனெனில் பெஞ்சமின், அச்சிடும் கலையில் மகா நிபுணராயிருந்தார்!

ஒருநாள் அச்சுக்கூட ஜன்னலடியில் உரத்த கூச்சலொன்று தெருவில் கேட்டது. வேலை செய்துகொண்டிருக்க வேண்டிய பெஞ்சமின் வெளியே என்ன நடக்கிறது என்று பார்ப்பதற்காகத் தலையைச் சற்று வெளியே நீட்டிவிட்டார். அங்கே அவர் முதலாளியைப் பார்த்தார், முதலாளி தொழிலாளியைப் பார்த்தார்.

அவ்வளவுதான், "உன் வேலையை நீ பாரடா!" என்று முதலாளி ஆத்திரமாகப் பெஞ்சமினை நோக்கிக் கத்தினார். தம் வேலைக்காரன் வேலை செய்யாமலிருந்ததற்காகக் கடுமையாகக் கண்டிக்க மாடிப்படிகளில் தட தட வென்று ஓடிவந்தார். அதே சமயம் இளைஞரான பெஞ்சமினுக்கு, இன்னும் சில வாரத்தில் வேலையை விட்டு நீங்கிவிட வேண்டுமென்று அறிவிப்பும் கொடுத்துவிட்டார்.

"இந்த க்ஷணமே வெளியேறிவிடுகிறேன்!" என்று பெஞ்சமின் காவற்றோடு கூவினார். தொப்பியைத் தொப்பென்று தலையில் அமுக்கிக்கொண்டு கடையைவிட்டு நடையைக் கட்டிவிட்டார், அங்குள்ள தம் சாமான்களைக் கூட எடுத்துக் கொள்ளாமல்!

அன்றிரவு கெய்மர் அச்சுக்கூடத்தில் கற்றுக்குட்டிகளாக வேலை பார்க்கும் வாலிபர்களில் ஒருவனான ஹ்யூ மெரிடித் என்பவன், அச்சுக்கூடத்தில் கிடந்த பெஞ்சமினின் சாமான்களை யெல்லாம் சேகரித்து வந்து பெஞ்சமினிடம் கொடுத்தான். பெஞ்சமினோ மிகவும் மனந்தளர்ந்து போயிருந்தார். மறுபடியும் தம் பிறந்த ஊரான போஸ்டனுக்கே திரும்பிப் போய் வேலை துவங்கலாமா என்றுகூட நினைக்கத் தொடங்கினார். ஆனால் ஹ்யூ என்ற வாலிபனோ தன் நண்பரான பெஞ்சமினை இழந்துவிடுவதைப் பற்றி நினைப்பதைக்கூட வெறுத்தான். அதனால் அவன், "நாமிருவரும் ஒன்று சேர்ந்து ஏன் அச்சுத் தொழிலில் பிரவேசிக்கக்கூடாது?" என்று கேட்டான்.

"ஆனால் என்னிடம் பணம் இல்லையே!" என்றார் பெஞ்சமின் பெருமூச்சுடன். விபரம் தெரிந்த நாள் முதலாகப் பணமில்லாத குறை ஒன்றுதான் அவரது நெஞ்சை உறுத்தி வருவதாகத் தோன்றியது.

"சரி, என் அப்பாவிடம் பணம் இருக்கிறது. அவர் நமக்குக் கடன் கொடுக்கலாம். நான் நம் கூட்டுத் தொழிலில் என் பங்கிற்குப் பணம் வைக்கிறேன். நீ உன் பங்கிற்கு உன் மூளையை வை!" என்றான் ஹ்யூ மெரிடித்.

இந்த முகஸ்துதியான அழைப்பைப் பெஞ்சமினால் மறுத்தளிக்க முடியவில்லை. நண்பன் ஹ்யூவும் தன் தந்தையிடம் கேட்டான். அவர் அதற்குச் சம்மதித்ததும், அடுத்த படகிலே அச்சு யந்திரமும் அச்செழுத்துக்களும் வாங்க இங்கிலாந்திற்கு ஆட்கள் அனுப்பப்பட்டனர். ஆனால் அந்த நாட்களில் இங்கிலாந்திற்கு கப்பல் போக்கு வரவு என்றால் அதிக காலம் பிடிக்கும். ஆதலின் அவர்கள் அச்சுக்கூடம் ஆரம்பிப்பதற்குள் பல மாதங்கள் கூட ஆகிவிடும்.

இதற்கிடையில், பழைய அச்சுக்கூட முதலாளியான கெய்மர், ஏதோ நியூ ஜெர்சி காலனி நாட்டுக்குக் கொஞ்சம் காகித நாணயம் அச்சடித்துக் கொடுக்கும் சந்தர்ப்பம் கிடைத்தால், பெஞ்சமினுடைய பழையதை யெல்லாம் மன்னித்து மறந்துவிட்டு மறுபடி தம்மிடம் வேலைக்கு வரவேண்டுமெனக் கேட்டுக் கொண்டார். ஹ்யூகோ மெரிடித்தோ பரமானந்தமடைந்தான், ஏனெனில் அங்கே அவனுக்கு இன்னும் பல மாதத்திய கற்றுக் குட்டி வேலையிருந்தது. பெஞ்சமினோ சோப்பலாகவும் பணத் தேவையுள்ளவராகவும் இருந்தார். ஆகவே, மூன்றாவது முறையாக முதலாளி கெய்மரிடம் வேலை பார்க்கச் சென்றார் பெஞ்சமின்.

இந்த வேலையில் பெஞ்சமின் செய்த முக்கியமான காரியங்களில் ஒன்று என்னவென்றால், அமெரிக்காவிலேயே முதன் முறையாகத் தாமிரத் தகட்டின் மூலம் அச்சிடும் யந்திர முறையை உண்டாக்கியதுதான்! நியூ ஜெர்சி காலனியின் காகித நாணயப் பத்திரங்களுக்கு அவர் டிசைன்கள் தயாரித்து, அவற்றை அலங்கரிக்க அலங்காரங்களையும் தகட்டில் வெட்டி அச்சடித்தார். அவரும் முதலாளி கெய்மரும், நியூ ஜெர்சி சட்டசபை வழக்கமாகச் சபை கூடும் பர்லிங்டன் நகருக்குப் பிரயாணம் செய்து, அங்கே காகித நாணயத்தை அச்சடித்தார்கள். அந்த அச்சு முறையைக் கண்டு சட்டசபை மிகவும் அகமகிழ்ந்தது. இங்கே பெஞ்சமின் ஏராளமானவர்களைச் சிநேகிதம் செய்துகொண்டார். சட்டசபை அங்கத்தினர் விரைவில் அவரைத் தங்கள் வீட்டில் நடக்கும் விருந்துச் சாப்பாடுகளுக்கு அழைத்துப்போய் தங்கள் மனைவிமாரிடமும், குமாரிகளிடமும் அறிமுகப்படுத்த ஆரம்பிக்கலானார்கள்.

இந்த வேலை முடிந்த சில காலத்திற்குள்ளாகவே, நண்பனின் தந்தை ஆர்டர் கொடுத்திருந்த அச்சுயந்திரமும் அச்செழுத்து

ளும் இங்கிலாந்திலிருந்து பிலடெல்பியா பட்டினத்திற்கு வந்து சேர்ந்துவிட்டன. கூடிய சீக்கிரத்தில் பெஞ்சமினும் அவருடைய நண்பனும் பழைய முதலாளியான கெய்மெரிடம் கணக்குத் தீர்த்துக்கொண்டு, சந்தைக்கடை வீதியில் ஓர் வீட்டை வாடகைக்கு அமர்த்திக்கொண்டு, சொந்தமாக அச்சுக்கூடம் ஒன்று திறந்துவிட்டார்கள். அவர்களிடம் அச்சடிக்க வந்த முதல் வாடிக்கைக்காரன், ஏதோ அச்சடிக்க ஓரிடம் தேடித் தெருத் தெருவாய் அலைந்து திரிந்துகொண்டிருந்த ஒரு குடியானவன் ஆவான்! அவன் இந்தப் புது அச்சுக்கூடத்திற்குக் கொண்டு வரப்பட்டு அச்சுக் கூலிக்கு அவன் ஐந்து ஷில்லிங் காசு செலவழிக்க நேர்ந்தது. இந்தக் காசுதான் தாம் சம்பாதித்த அதியற்புதமான காசு என்று பெஞ்சமின் சொல்லியிருக்கிறார்.

பிலடெல்பியா பட்டினத்தில் அவர்களுக்குப் போட்டியாக இரண்டு அச்சாளர்கள்தாம் இருந்தார்கள். ஒருவர் ஆண்ட்ரூ ப்ராட்போர்டு, அவர் அரசாங்கத்திற்குத் தேவையான சகலவிதமான அச்சு வேலைகளையும் செய்து வந்தார். இன்னொருவர் கெய்மெர்—அவர்களின் பழைய முதலாளி. அவரை விட்டு அவர்கள் விலகிப் போனதும் அவர் கடனில் ஆழமாக மூழ்கி அதிக முன் கோபியாகவும் சண்டைக்கார ஆசாமியாகவும் மாறி விட்டார். கடைசியில் அவர் தம் செய்திப் பத்திரிகையையும் விற்றுவிட நேர்ந்தது. தம்முடைய அச்சுத் தொழிலையே விட்டு விட்டார். அவருடைய அச்சுக்கூடத்தைப் பெஞ்சமினிடம் அச்சுத்தொழில் கற்றுக்கொண்ட ஓர் இளைஞன் வாங்கிக் கொண்டான்.

பெஞ்சமினே தாமே செய்திப் பத்திரிகையை விலைக்கு வாங்கிக்கொண்டார். அதற்குப் '**பென்ஸில்வேனியா வர்த்தமான சஞ்சிகை**' என்றும் பெயரிட்டார். அந்தச் செய்திப் பத்திரிகையின் அச்சாளராக இருப்பதோடு, அவரே அதன் ஆசிரியராகவும், எழுத்தாளராகவும், நிருபராகவும், விளம்பர விற்பனையாளராகவும் இருந்தார். பென்ஸில்வேனியாப் பிராந்தியத்தில் வசிக்கும் ஜனங்களைப் பற்றிய உள்ளூர்ச் செய்திகளையும் அவர் பிரசுரித்ததுதான் அவர் செய்த முக்கியமான காரியங்களில் ஒன்றாகும். இது அன்றைய செய்திப் பத்திரிகைகளுக்கு அசாதாரணமானதொரு புதிய வழக்கமாகும்! பெஞ்சமினே சகலவிதமான செய்திகளையும் எழுதியோ, திருத்தி எழுதியோ வந்தார். ஆசிரியரான தமக்குத் தாமே கற்பனைப் பெயர்களில் கடிதங்கள் எழுதிக்கொண்டு, அவற்றிற்குத் தாமே பதிலளித்துக் கொண்டும் வந்தார். அவரே வேடிக்கையான ஹாஸ்யத் துணுக்குகளும் எழுதினார், அவரே விளம்பரங்களைக்கூட வரைந்து வந்தார். அதனால் மேலும் அதிகமான வாசகர்களும்

அதிகமான விளம்பரதாரர்களும் அவருக்குக் கிடைத்து வரலாயினர்.

அந்த வர்த்தமான சஞ்சிகை முக்கிய ஸ்தானம் பெற்றுத் தொடங்கியதும், அச்சுத் தொழிலில் அவருக்குப் போட்டியாளராக விளங்கிய ஆண்ட்ரூ ப்ராட்போர்டு என்பவர், 'எங்கே, பெஞ்சமின் தம் தொழிலையெல்லாம் விழுங்கிவிடுவாரோ' என்று கவலைப்படலானார். அவரே தபால் நிலையத் தலைவராக இருந்தமையால், பெஞ்சமினின் செய்திப் பத்திரிகையைத் தபால்காரர்கள் கொண்டுபோய்க் கொடுத்து வருவதை அனுமதிக்க மறுத்துவிட்டார். இது மிகவும் அநியாயம் என்று பெஞ்சமின் நினைத்தார். தபால் எடுத்துச் செல்பவர்களிடம் இரகசியமாக ஒப்பந்தம் செய்துகொண்டு அவர்களின் [illegible] கூலி கொடுக்கவும் அவர் தயங்கவில்லை.

அப்போது பெஞ்சமின் பிராங்ளின் நடத்திய பென்ஸில்வேனியா வர்த்தமான சஞ்சிகையிலிருந்துதான் **'சனிக்கிழமை மாலைத் தபால்'** (Saturday Evening Post) என்ற வாரப் பத்திரிகை வெளிவந்தது. அந்தப் பத்திரிகையை இன்றுங்கூட நீங்கள் பத்திரிகைக் கடைகளில் வாங்கலாம்.

அடுத்தபடியாகப் பெஞ்சமின் செய்த காரியம் என்னவென்றால், சட்டசபைப் பேச்சுக்கள் சிலவற்றைப் பணச் செலவின்றி அச்சடித்ததாகும். அவருடைய அச்சடிப்பானது ஆண்ட்ரூ ப்ராட்போர்டு முதலாளியின் அச்சடிப்பைவிட மிகவும் சிறந்து விளங்கியதால், சட்டசபை அங்கத்தினரால் அதைக் கவனிக்காமலிருக்க முடியவில்லை. இவ்வாறாக அவரும் அவரது நண்பனும் கூட்டுழைப்பில் தொழில் ஆரம்பித்து இரண்டு வருஷமே ஆனவுடனேயே, பென்ஸில்வேனியா குடியேற்ற நாடு முழுமைக்குமே அச்சாளராகப் பெஞ்சமின் ஆகிவிட்டார். அதன் பின்னர் சில காலத்திற்குள்ளாகவே, பெஞ்சமின் பெரும் பணம் கடன் வாங்கித் தம் நண்பனின் பங்கையும் விலைக்கு வாங்கிவிட்டார். கழுத்து நிறையக் கடன்பட்டு பெஞ்சமின் அந்த அச்சகத்தைத் தமக்குச் சொந்தமாகப் பட்டயம் வெட்டிக்கொண்டார்.

அதன் பின்னர் பெஞ்சமின் எவ்வளவு பாடுபட்டார் என்பது எவருக்கும் தெரிந்திராது. ஆனால் பெஞ்சமினே தம்மைப் பற்றிச் சொல்லுகிறார்: "நான் பொழுது போக்காக மீன் பிடிக்கவோ வேட்டையாடவோகூட ஒருபோதும் போனதே இல்லை!" அவருடைய அபூர்வமான புத்தகங்களைப் படிப்பதற்குக்கூட அவருக்கு அவகாசம் அற்ப நேரந்தான் கிடைத்தது. அவரே தம் செய்திப் பத்திரிகைக்குத் தேவையான காகிதம் வாங்கி வந்து, ஒரு சக்கர வண்டியில் வைத்து அதைத் தெரு

லெலலாம உருடடிககொணடு போவது வழககம அதனுல அவா, ஓா வணடியோடடியாகவும விளஙகிஞா அவா ஓா ஸடேஷனரி சாமான கடையும திறநதாா—அதனுல அவா ஓா வியாபாரி யாகவும விளஙகிஞா !

பெஞசமின பிராஙளிஞககு இருபததாறு வயதாகுமபோது, '**ஏழை ரிசசாடின பஞசாஙகம**' எனபதின முதற பிரதியை அவா அசசிடடாா ஏழை ரிசசாடைட பறறி இனறளவும ஜனஙகள பேசுகிருாகள '**கையுறை அணிநத பூனை எநதச சுணடெலியையும பிடிககாது**' '**சிறுகச சிறுக வெடடிஞல பெரும பெரும மரஙகளும சாயநதுவிடும**' எனபன போன்ற பழமொழிகளை நீஙகள கேளவியுறுமபோது, அவை முதன முதலில பெஞசமின பிராஙளினுலதான அநத விதமாக '**ஏழை ரிசசாடின பஞசாஙகததில**' எழுதபபடடன எனபது உஙகள நினைவிறகு வரும

'**ஏழை ரிசசாடின பஞசாஙகததை**' ரிசசாடு சாணடாஸ எனற புனைபெயரின கீழ பெஞசமின் முதன் முறையாக வெளிக கொணாநதபோது, குடியேறற அமெரிககாவில எலலாப புததகங களையும விட ஜனரஞசகமாய விளஙகியவை பஞசாஙகஙகளதாம அனேகமாக ஒவவொரு வீடடிலுமே—அசசிடட தாள வேறு எதுவுமே இலலாத வீடுகளிலகூட—ஒரு பஞசாஙகம காணப படுவது சகஜம !

பஞசாஙகஙகள எனபவை அநதக காலததிய வானிலை அறிககைகள—அதாவது, பருவ சீதோஷண நிலைகளை ஜோஸயம கூறுவது, சநதிர திசையின மாறுதலகளை நிாணயிபபது, காறறலைகளின ஏறறவிறககஙகளைக கணிபபது முதலானவை அவறறேடு, புதிாகள, வேடிககைத துணுககுகள, சினனஞசிறு கவிதைகள, பழமொழிகள, விசிததிரமான செயதிகள, மருநது முறை புளளி விபரஙகள, தோடட நடவு பறறிய யோசனைகள, மூடநமபிககைகள இனனும இநத ரக விஷயஙகளின நானு சஙகிரமும பஞசாஙகஙகளில அடஙகியிருககும அநதக காலததில பல குழநதைகள பஞசாஙகஙகளிலிருநதே படிககக கறறுக கொளவதுமுணடு காகிதம எனபது வெகு சிலரிடம வெகு அபூாவமாகவே தடடுபபடும வஸதுவாக விருநதபடியால, பஞசாஙகஙகளின அசசு ஓரஙகளிலதான தினசரி நடபபு முதலான ஞாபகக குறிபபுகளை யெலலாம ஜனஙகள எழுதி வைததுக கொளவாாகள பஞசாஙகம எனபது அநதக காலததில ஒவவொரு வீடடிறகும இன்றியமையாத ஒரு சரககு !

பெஞசமின புதிதாக ஒன்றும பஞசாஙகததைக கண்டு பிடிதது விடவிலலை அவருககு முனபே கெயமொா, பராட் போாட உடபட பலா பஞசாஙகஙகள அசசிடடு வநதாாகள

தொடர்ந்துவரும் வருஷத்திய பருவ நிலைகளைக் கணித்து பலன் கூறும் முறையிலே இலையுதிர் காலத்தில்தான் பஞ்சாங்கங்கள் வெளிவருவது வழக்கம். பெஞ்சமின் அச்சிட்ட **'ஏழை ரிச்சார்டின் பஞ்சாங்கமோ'** காலங் கடந்து வெளிவந்தது. அதன் முதல் இதழானது 1732 ஆம் வருஷம் டிசம்பர் மாதம் 19 ம் தேதியே அச்சு யந்திரங்களிலிருந்து வெளி வந்து பிரதியொன்று ஐந்து பென்ஸ் வீதம் விற்பனையாயிற்று. புது வருஷம் உருளுவதற்கு முன்பாகவே அது மூன்று தடவை அச்சுவாகனமேறி, பஞ்சாங்க வட்டாரத்திலே எந்தப் போட்டியையும் மிஞ்சும் வண்ணம் முன்னேற்ற மடைந்து விட்டது. இதற்குக் காரணம் பெரும்பகுதி பெஞ்சமினின் எழுத்தும் சிந்தனையுமாகும்.

'ஏழை ரிச்சார்டின் பஞ்சாங்கம்' அமோகமாய் வளர்ந்தது, அவ்வாறே பெஞ்சமினும் வளர்ந்தார். அவர் தம் கடன்களையும் தீர்த்துக்கட்டி பணக்காரராகவும் வெற்றிகரமான அச்சாளராகவும் மாறினார். ஒவ்வொரு வருஷமும் **'ஏழை ரிச்சார்டின் பஞ்சாங்கம்'** அதிகமாகப் பிரதிகள் விற்பனையால் பெருத்துக் கொண்டே போயிற்று— **'ஏழை ரிச்சார்டு'** என்ன சொல்லப் போகிறார் என்று தெரிந்துகொள்ள ஒவ்வொரு வருஷமும் பத்தாயிரம் ஜனங்கள் விரும்பி வாசிக்கும் வரை அது முன்னேறிவிட்டது!

'ஏழை ரிச்சார்டின் பஞ்சாங்கம்' பிரபலமடைந்தது போலவே பெஞ்சமின் நடத்திய பென்ஸில்வேனியா வர்த்தமான சஞ்சிகையும் பிரக்யாதி பெற்றது. முடிவாக, அமெரிக்கக் குடியேற்ற நாடுகளிலே அதி முக்கியமான செய்திப் பத்திரிகையாக அது வளர்ந்தோங்கி விட்டது. ஜனங்களுக்கு விரைவில் செய்திகள் கிடைக்க வேண்டும் என்பதற்காகப் பெஞ்சமின் குதிரைக்காரர்களைக் கூலிக்கமர்த்திக் கொண்டு அவர்களின் மூலம் பத்திரிகையை விரைவில் விநியோகம் செய்தார்.

பெஞ்சமின் பிராங்ளின் எவ்வளவோ வித விதமான மகத்தான காரியங்கள் செய்தவர் என்றாலும், அவர் எப்போதும் தம்மை ஓர் அச்சாளராகவே கருதி வந்தார். அவர் பிரான்ஸ் தேச ராஜாங்கத்திற்கு ஸ்தானிகராகச் சென்ற பிறகு தம் மரண சாஸனம் எழுதிய போது அதில், "நான், அச்சாளனாகிய பெஞ்சமின் பிராங்ளின் .... " என்றுதான் சாஸனத்தைத் துவங்குகிறார்.

அச்சிடுவதுதான் அவரது தொழில்!

6. நல்ல பிரஜை.

பெஞ்சமின் பிராங்ளின் தொழிலானது பணம் பண்ணத்

தொடங்கியதுமே, எல்லோரின் பொது நன்மைக்கும் தேவையான விஷயங்களைப் பற்றிக் கவனிக்கவும் தமக்கு அவகாசமிருப்பதை அவர் கண்டார். இந்தச் சமயம் அவர் தம் இன்னுயிராக காதலியான டிபோராவையே மணம்புரிந்துகொண்டு, பிலடெல்பியா பட்டினத்தையே தம் தாயகமாய்க் கொண்டுவிட்டார்.

அந்தக் காலத்திய பெரும்பாலான அச்சாளர்களைப் போலவே அவரும் சுறுசுறுப்பான சந்தை வெளியிலுள்ள தம் அச்சுக்கூடத்திலேயே வசித்துவந்தார். அவருடைய வீடு நிறைய அவருடைய குழந்தைகளும், உறவினரும் அச்சுக் கூடத்தில் அவருக்காக வேலைபார்க்கும் ஆட்களும், கூலிக் கமர்த்தப்பட்ட வேலைக்காரர்களும், சந்தர்ப்ப வசமாக வந்து தங்குவோர் சினேகிதர்களுமாக நிறைந்திருப்பார்கள். அது குதூகலமான வீடாக விளங்கியது. ஆனால் கூட்டிச் சுத்தமாக வைத்துக் கொள்வதற்கு மிகவும் கஷ்டமான வீடாகவும் விளங்கியது.

சந்தைக்கு வரும் ஊர் ஜனங்கள் எவ்வளவு சிரமப்பட்டுச் சகதியிலும் புழுதியிலும் நடந்து பல சரக்கு வாங்க வரவேண்டியிருக்கிறது என்பதைப் பெஞ்சமின் கண்முன்பாகக் கண்டார். கடைசியில் சந்தைக்கு நடுவே ஒரு நடைபாதையே வைக்கும்படி செய்துவிட்டார். பிறகு ஜனங்கள் சிரமமில்லாத கால்களுடன் நடக்கவேண்டும் என்பதற்காக, அவர் பேச்சுகள் மூலமாகவும், தம் வர்த்தமானப் பத்திரிகையில் தலையங்கங்கள் எழுதியும், வீதிகளில் கல் தளவரிசை பாவும்படி செய்தார். இதனால், தெருப் புழுதி வீடுகளுக்குள் இழுபடாமல் எவ்வளவோ காப்பாற்றப் பட்டது!

இவற்றையெல்லாம் செய்து முடித்தவுடனே, வண்டியொன்று வீதியில் வந்தால் சகதியை வாரி நடைபாதையில் தெளிப்பதைக் கண்டார். அந்தச் சகதியானது அப்புறம் ஜனங்களின் காலடிகள் வழியாக வீடுகளுக்குள் கொண்டு செல்லப் படுவதையும் கண்டார். பிராங்ளின் சுற்றுமுற்றும் பார்த்தார். ஓர் ஏழை ஆசாமியைக் கண்டுபிடித்தார். அவன் ஆறு பென்ஸ் காசு கூலி வாங்கிக்கொண்டு வாரம் இருமுறை வீதியைக் கூட்டிச் சுத்தப்படுத்தச் சம்மதித்தான். அந்தக் கூலிப் பணத்தை அந்தந்த வீதி நெடுகிலுமுள்ள வீடுகளிலிருந்து வசூலித்துவிடலாம்! பிராங்ளின் இதைப்பற்றி ஒரு லிகிதம் எழுதித் தம் அண்டை அயலவர் அனைவருக்கும் சுற்றறிக்கையாக அனுப்பினார். பிறகு அவர் வெளிக்கிளம்பி, இந்தக் காரியத்திற்காக வாரம் ஒருமுறை ஆறு பென்ஸ் பணம் சந்தா செலுத்தும்படி கேட்டுக் கொண்டார். இதுதான் அமெரிக்காவிலே முதன் முறையாகத் தெருக்கூட்டும் படலமாயிருந்திருக்கலாம்.

தெருக்களைக் கூட்டுவதோடு மட்டும திருப்தியடைந்து விடாமல், தெருவையும கூட்டி குப்பை கூளங்களைக் குவியலாகச் சேகரித்துச் சாக்கடைகளுக் கீழே கழித்துத் தள்ளிவிடவும ஓா கிழவியைக் கூலிக்குப் பெஞ்சமின் அமாத்தினா சகதியையும குப்பையும தெருவிலிருந்து அள்ளிச செல்லக குதிரைகள இழுக்கும தள்ளுவண்டிகளை உபயோகிகக வேண்டுமென்றும பெஞ்சமின் முடிவு கட்டினா இப்போது நமககெல்லாம அதியத்தியாவசியமாகவும மிகவும சாதாரணமாகவும தோன்று கின்றனவே சுகாதார இலாககாககளும சாககடையாளுபவா களும, அவற்றிற்கெல்லாம பெஞ்சமின் பிராங்ளினின இந்த முயற்சிதான் முன்னோடடமாக விளங்கியது !

பிலடெல்பியா பட்டினத்தின வீதிகளில கல பாவுவதறகாக முதன முதலாக வரி வசூலித்தவா பெஞ்சமின் பிராங்ளினே ஆவாா சந்தைத்திடலானது அதி சுத்தமாகவும சுகாதாரமாகவு மிருப்பதைக கண்டு குதூகலமடைந்து ஊா ஜனங்களும அதறகாக ஒரு வரியையும மனமொப்பிச செலுத்தினாாகள

பிலடெல்பியாவின வீதிகளிலே பெஞ்சமினதான் முதல முதலில தெரு விளககுகளைத துவககினா என்று சொலல முடியாது ஆனால அவற்றைச சீாதிருத்தி வளாத்தவா அவரே யாவாா ஒரே உருண்டையான கணணாடியுள்ள தெருவிளக கிறகுப பதில, நானகு புறமும நானகு சிறிய கணணாடிப் படடைகளை உடைய ஒரு புது ரகத தெரு விளககை அவாதான் கண்டுபிடித்தாா இந்தச சதுர விளககுகளை இப்போதும சில நகரங்களிலே நீங்கள காணலாம இவை விளககுத திரியிலிருந்து புகை சுலபமாகக கிளமபவும, விளககு நீடித்து சுத்தமாக விளங்கவும பிரகாசமாக எரியவும வசதியளித்தன அதோடு, அத்தகைய விளககுகளைப பழுது பாாபபதும வெகு சுலபம நானகு பககங்களில ஏதாவதொரு பககக கணணாடி உடைந்து போனால, அந்த விளககையே தூர எறிந்துவிடவேணடிய அவசியமில்லை அந்த ஒரு பககக கணணாடிககுப பதிலாக வேறொன்று போட்டுவிட்டால போதும !

நெருப்பணைககும யந்திரங்களோ, நீாத் திடடங்களோ, ஏணியும கொககியுமுள்ள வணடிகளோகூட இல்லாத அந்தக் காலத்தில எங்காவது நெருப்புப பற்றிககொணடால் அது எவ்வளவு பயங்கரமாய் இருந்திருககும என்று கற்பனை செய்து பாாககவும நமககு கஷ்டமாக விருககும பிராங்ளின் இளைஞராக இருந்தபோது, பிலடெல்பியா பட்டினத்தில எங்காவது ஏதாவது தீப் பிடித்துக்கொண்டால், அது தானாகவே எரிந்து அணைந்து போனால்தான உண்டு—ஆனால ஊரெங்கும எல்லாவற்றிலுமே தீயைப பற்றவைககாமல அது அணைந்துமபோகாது !

இது பெஞ்சமினுக்கு மிகவும் கிளர்ச்சியை உண்டாக்கியது. இது பற்றி 'ஒரு கிழப் பிரஜை' என்று தாமே கையெழுத்திட்டு ஆசிரியரான தமக்கே ஒரு கடிதம் எழுதிக்கொண்டு, அதைத் தம் பத்திரிகையில் பிரசுரித்தார். அந்தக் கடிதத்தில், நெருப்புத் தடுப்பிற்கு எண்ணற்ற விதிமுறைகளையும் வகுத்துக் கொடுத்தார். 'கணப்புத்தட்டு இறுக மூடியிருந்தாலொழிய ஓர் அறையிலிருந்து இன்னோர் அறைக்கு ஜனங்கள் நெருப்பெடுத்துச் செல்லக் கூடாது' என்றும் அந்த விதிகளில் ஒன்று கூறியது.

அப்புறம் அவர் போஸ்டன் நகரைப் பின்பற்றி பிலடெல்பியா பட்டினமும் நெருப்பணைக்கும் தொண்டர் குழுவொன்றை ஸ்தாபிக்கலாம் என்று ஆலோசனை கூறினார். இந்த விஷயமாக இதுபோலவே தம் பெயருக்குப் பல கடிதங்கள் எழுதி கிளர்ச்சி யெழுப்பியதின் மூலம் ஐக்கிய நெருப்பணைக்கும் குழுவொன்றை அவர் ஸ்தாபித்தார். அதில் முப்பது அங்கத்தினர் இருந்தனர். ஒவ்வொருவரிடமும் தோலால் செய்த வாளியும், சாமான்களை மூட்டை கட்ட உறுதியான கித்தான் பையொன்றும் சொந்தமாக இருந்தன. இதற்குப் பிறகு இது போன்ற நெருப்பணைக்கும் குழுக்கள் பல பல உண்டாகிவிட்டன. ஏனெனில், முதலாவது குழுவில் எண்ணிறந்த நபர்கள் உறுப்பினராகச் சேர்ந்து, அளவுமீறி கும்பலாகி அது பெருத்துப் போய்விட்டது.

விரைவிலே பிலடெல்பியா பட்டினத்தில் நெருப்பணைக்கும் தொண்டர் குழுக்கள் பலவற்றின் இணைப்புப் பின்னல் ஒன்று உண்டாகி, இந்த உலகிலே நெருப்பைப் பொறுத்தவரை பிலடெல்பியா பட்டினந்தான் மிகவும் பத்திரமான நகரமாக விளங்கியது. அனேகமாக அந்நகரில் சொத்துள்ள ஒவ்வொரு வருமே சொந்தமாக ஒரு தோல் வாளி விலைக்கு வாங்கிக் கொண்டு ஏதாவது நெருப்பணைக்கும் தொண்டர் குழு ஒன்றில் அங்கத்தினராகச் சேர்ந்திருந்தார். இந்தக் குழுக்கள் மாதாந்திரக் கூட்டம் நடத்தும்போது அங்கத்தினர் வரத் தவறினால் அவர்களிடமிருந்து சிறு அபராதத் தொகையும் வசூலித்து வந்தனர். ஏணி கொளுவிகளுள்ள வண்டிகள் வாங்குவதற்காக அந்த அபராதப் பணம் உபயோகப்படுத்தப்பட்டது.

பிலடெல்பியா பட்டினத்திலுள்ள போலீஸ் இலாகாவும் பெஞ்சமினுக்குத் திருப்தியளிக்கவில்லை. ஒருநாளிரவு வேடிக்கை யாக ஊரைச் சுற்றிப் பார்க்க அவர் உலாத்திக்கொண்டிருந்த போது, போலீஸ் காவற்காரர்களில் பெரும்பாலானவர் ஜனங்களைப் பாதுகாப்பதைவிட சாராயப் போத்தல்களின்மீதே அதிகம் ஈடுபட்டிருப்பதாக அவருக்குத் தென்பட்டது. தேவைக் கேற்றவாறு கான்ஸ்டபிள்களைத் தேர்ந்தெடுக்கும் முறையை நம்பிக்கொண்டிருப்பதைவிட, நிரந்தரமாகப் போலீஸ்காரர்களை

நியமித்து அவர்களுக்குச் சம்பளம் கொடுத்து வருவதுதான் நல்ல தென்று யோசனை கூறினார். சில வேளைகளில் அந்தக் கான்ஸ்டபிள்கள் துணைக்குக் கூலியாட்களாக அமர்த்திக் கொள்ளும் போவழிகளோ, அவர்கள் பிடிக்கமுயலும் திருடர் களையும், வழிப்பறிக் கள்ளர்களையும்விட அப்படியொன்றும் மேலானவர்களாகப் பெஞ்சமினுக்குப் படவுமில்லை!

பாலிய வயசிலிருந்தே பெஞ்சமின் புஸ்தகப் பிரியராக விளங்கி வந்தார். புஸ்தகங்கள் வாங்குவதென்றால் பெரும்பா லான ஜனங்களுக்கு எவ்வளவு சிரமம் என்பது அவருக்குத் தெரியும். இது பற்றி அவர் தீவிரமாகச் சிந்தித்த பிறகு, படிக்கப் பிரியமுள்ளவர்களுக்கு நிறையப் புத்தகங்கள் கிடைக்கக் கூடிய மார்க்கமொன்றைக் கண்டுபிடித்தார். ஜண்டோ என்று பெயரிட்டு சங்கம் ஒன்று ஸ்தாபித்தார். அங்கே அதன் அங்கத்தினர் அனைவரும் தங்கள் தங்கள் பங்குக்குத் தங்கள் புத்தகங்களைக் கொடுத்தார்கள். அந்தப் புத்தகங்கள் இரவல் கொடுத்து வாங்கப்பட்டன. சங்கத்திலுள்ள ஒவ்வொரு அங்கத் தினரும் ஒவ்வொரு புத்தகத்தையும் படித்து முடிக்கும்வரை அது இரவலாகச் சுற்றிச் சுற்றி வந்தது. ஆனால் அதற்குப் பிறகு அங்கத்தினர் இன்னும் அதிகமான புத்தகங்கள் வாசிக்க ஆசைப்பட்டார்கள். புத்தகங்கள் வாங்க சங்கத்தின் அங்கத்தினர் ஒவ்வொருவரும் ஒரு குறிப்பிட்ட தொகை பணம் சந்தா செலுத்தலாம் என்று பெஞ்சமின் ஆலோசனை கூறி, பிலடெல் பியா பட்டினத்தில் புத்தகம் படிக்க ஆசையுள்ள எவரும் அவ்வாறே செய்யலாமென எல்லோருக்கும் அழைப்பனுப்பினார். ஐம்பது போவழிகள் கையெழுத்திட்டு, லண்டனிலிருந்து புத்தகங்கள் வரவழைக்க ஒரு நீண்ட பட்டியல் தயாரித்து ஆர்டரும் கொடுத்தார்கள். புத்தகங்கள் வந்ததும் அவை ஜண்டோவின் சங்கக் கூட்டத்தில் அடுக்கிவைக்கப்பட்டன. அங்கே எவரும் வந்து அவற்றைப் படிக்கலாம். ஆனால் அங்கத் தினர் மட்டும்தான் புத்தகங்களை வீட்டுக்கு எடுத்துச் செல்ல முடியும். இதுதான் அமெரிக்காவில் 'சுற்று வரவு வாசகசாலை களின்' துவக்கமாகும்.

அந்த முதல் வாசகசாலை உண்மையிலே சுற்றோட்டமாகத் தான் விளங்கியது. ஏனெனில் புத்தகங்கள் ஒருவர் கையிலிருந்து ஒருவர் கைக்கு மட்டும் நகரவில்லை. அவை வெவ்வேறான இடங்களில்கூட அடுக்கிவைக்கப்பட்டன. சில சமயங்களில் அவை ஜண்டோவின் சங்கக் கூடத்திலும், அப்புறம் கூலி யில்லாமல் லைப்ரரியனாகத் தொண்டாற்றக்கூடிய பலவேறு அங்கத்தினர்களின் வீடுகளிலும் வைக்கப்பட்டன. புத்தகங் களுக்கெல்லாம் பெஞ்சமின் ஓர் அட்டவணை தயாரித்து, வாசகசாலையின் அங்கத்தினர்களுக்கெல்லாம் கொடுத்துவந்தார்

பெஞ்சமின் உண்மையில ஓா புததகப் புழுவாய விளஙகியது மட்டுமலல, கடிதம எழுதுவதிலகூட ஈடு இணையறறவராக விளஙகினா கடிதஙகள என்ருல அவருககு ஒரே ஆசை அமெரிககாவில அவா எழுதும கடிதஙகளுககுப பதில கடிதம வநது சோவதென்ருல, அதறகு வெகுநாள பிடிககும அது அவரை மிகவும வருததியது இநத வருததநதான, தபால திடடததில அவரது கவனததைச செலுததுமபடியும, மெயிலகள ஏன அவவளவு அறபமாயிருககின்றன என்று கண்டுபிடிகக முயலுமபடியும அவரைத் தூண்டியது

தபால பட்டுவாடாவில அவா கவனம செலுததியதானது, பிலடெலபியா பட்டினததுத தபால விஷயஙகளைக கண் காணிககும நிாவாகியாகவே அவரை ஆககிவிடடது. அவா அஙகுள்ள தபால போககுவரவு, கணககு வழககுகள அனைததையுமே திருததியமைததாா பிலடெலபியா படடினததிறகும நியூயாாக நகருககுமிடையே வாரம ஒருமுறை தபால போககு வரவு இருநததறகுப பதிலாக அதை வாரம மூனறு முறையாக மாறறியமைததாா பிலடெலபியா படடினததிலிருநது போஸடன நகருககு ஒரு கடிதம அனுபபி அதறகு மூனறே வாரததிறகுள பதில கிடைபபது சாததியமாகுமபடி செயதவுடனேயே அவா பெரும வெறறிபெறறுவிடடது போல பெருமிதம அடைநதாா

குடியேறற அமெரிககாவிலுள்ள தபால மாாககஙகள—கரடு முரடான நெடுநதூர மாாககஙகள—அனைததிறகும குதிரையின மீதே பெஞசமின பிரயாணம சென்ருா—ஆஙகாஙகே உள்ள தபால நிலையத தலைவாகளின கணககு வழககுகளைச செமமைப படுததிக கொடுககவும, அவாகளுககு எழும பிரசனைகள பறறி ஆலோசனை கூறவும—அவா சென்ருா குடியேறற நாடடுத தபால இலாகாத திடடததை அவா நான்கே ஆணடுகளுககுள இலாபகரமான அடிபபடையில மாறறியமைததுவிடடாா அதன மூலம குடியேறற நாடுகளும விரைவில இஙகிலாநதிறகுப பெரும ஊதியம அனுபபலாயின

குடியேறற நாடுகள தஙகள சுதநதிரததிற்காகப் போராடடம தொடஙகிய பிறகு, தேசியக காஙகிரஸ கூடிய சமயம், பெஞ்சமின பிராஙளின போஸட்மாஸடா ஜெனரலாகத தோந தெடுககபபடடாா அநத உததியோகததிறகாக அவருககுக் கிடைதத் வருஷாநதிரச சமபளமான ஆயிரம டாலர் பணததையும, போரில காயம பட்ட போாவீராகளின் நிதிக்கே நன்கொடையளிததுவிட்டாா அதறகுப் பிறகு இராஜபிரான் தபால இலாகா விரைவிலே நின்றுபோய், பிராஙளின புதிய தபால திடடததை நிலைநிறுததினாா அதுதான் தறபோது ஐக்கிய அமெரிக்காவில நடைமுறையில இருநதுவரும தபால

சேவையின் துவக்கம ஆகும முதன் முதலாகத தபால தலைகள அசசிடடு வெளியானபோது பெஞ்சமின் பிராஙளினின் முகம் ஐநது ஸெனட தபால தலையில காடசியளிததது

தபால நிலையததிறகு வநது தபாலகளை வாஙகிககொளளாத வாகளுககு அவாகளின வீடுகளுககே தபாலகளை அனுபபிப படடுவாடா செயயும முறையைப பெஞசமின பிராஙளினதான் ஆரமபிதது வைததாா இநதப பணிககாக சிறு கூலியும வசூலிக்கபபடடது விலாசதாா பெறறுககொளளாமல தஙகி விடும தபாலகளைப பறறி வாததமான சஞசிகையில பெஞசமின விளமபரபபடுததிப பாாததாா அபபோதும அவறறைப பெறறுககொளளும விலாசதாா இலலாமல போனால, மூனறு மாதஙகள கழிதது அததகைய தபாலகளெலலாம பிலடெலபியா படடினததிலுளள சேமிபபுக கிடஙகிறகு அனுபபபபடடன. இதுதான 'செதத தபால இலாகாவின (Dead Letter Office)' துவக்கம் ஆகும.

பிராஙளின முன்பெலலாம தம சொநதப பததிரிகையான வாாததமான சஞசிகையைக கூலிககு ஆள பிடிததுக குதிரை யோடடிகள மூலம அனுபபிவநதாா இபபோது அவவாறு அனுபபுவதை நிறுததிவிடடு, தபால மூலமாகவே பததிரிகைகளை அனுபபலானாா எலலாவறறிலும அதி முககியமானது என்ன வென்றால, போஸடமாஸடாகளையும, தபால எடுததுச செலலும அஞசறகாராகளையும தஙகளுடைய வேலையின முககியத துவததைப பறறியும, தபால ஒழுஙகாகப படடுவாடா செயவதின அவசியததைப பறறியும உணருமபடி செயதவா பெஞசமினே ஆவாா தபால இலாககாப பணியின வேகமும கவனமும அவவளவு அதிகமாகப பிரபலமடையச செயதன பதினமூனறு குடியேறற நாடுகளின தூரப பிராநதியஙகளை யெலலாம தபால இலாகாதான் வெகு அருகில நெருககிக கொணாநதது பெஞசமின பிராஙளினால சிததியான தபால இலாகா சேவைதான, சிதறிககிடநத குடியேறறப பகுதிகளை யெலலாம ஒரே நாடாக ஒடடியுறவாடச செயய உதவியது

அடுததபடியாக பெஞசமினைக கவலைபபடுததிய விஷயம, பிலடெலபியா படடினததில தறகாபபிறகுப போதுமான அளவு இராணுவமிலலாத நிலையாகும அதனால, இநதக காலததில 'குடிபபடைககு' ஊா ஜனஙகளை சோககிறேமே அதுபோல, அவா பிலடெலபியாப படடினதது ஜனஙகளைக குடிபபடை வீராகளாகச சோககலானாா பிரானஸ தேசததிலிருநதும ஸபெயின தேசததிலிருநதும கொளளைககாராகள கிளமபிவநது, நியூகாஸில நகா அருகிலும டிலாவொ நகா அருகிலும உளள இரணடு குடியேறறப பகுதிகளமீது படையெடுதத போதும,

மேற்கு இந்தீஸ் நாடுகளிலிருந்து வந்த கப்பலொன்றை வழி மறித்துக் கைப்பற்றிக்கொண்டு, அதன் கப்பற் தலைவனைக் கொலை செய்த போதும், இராணுவத் தற்காப்பின் தேவையைப் பெஞ்சமின் உணர்ந்தார்.

உடனே பிராங்ளின் தீவிரமானார். பாதுகாப்பிற்கும் துப்பாக்கிகளுக்கும் தேவையான பணத்திற்குச் சட்டசபையில் வாக்கெடுப்பு நடத்துமாறு வற்புறுத்த முயன்றார். ஆனால் சட்டசபையை ஆட்டி நிர்வகித்துவந்த குவாக்கர்கள் எனும் சமயவாதிகள் சமாதான விரும்பிகளாகவும் பிற தேசங்களோடு சச்சரவிட விரும்பாதவர்களாகவும் விளங்கினார்கள். அவர்கள் சம்மதிக்காததினால் பணக்கார வியாபாரிகளும் பணம் கொடுக்கத் தயாராக இல்லை. அந்த நெருக்கடியான நேரத்திலே பொறுப்புள்ள எவருமே அவ்வளவாக அக்கறையுள்ளவர்களாகத் தோன்றவில்லை. பெஞ்சமின் அதைப் பொதுஜனங்கள் முன் கொண்டுபோனார். அவர்கள் அக்கறை கொண்டார்கள்!

ராபாட்டின் காபி மாளிகை என்ற இடத்தில் பெஞ்சமின் நடத்திய முதல் பொதுக்கூட்டத்திலேயே, தற்காப்புச் சங்கத்தில் சேருவதாக 1,200 பேர்கள் கையெழுத்திட்டார்கள். அந்தச் சங்கமானது ஒவ்வொரு மாவட்டத்திற்கும் பரவியது. பத்தாயிரம் அங்கத்தினர்களும் சேர்ந்துவிட்டார்கள். அவர்களெல்லாம் பல குழுக்களாகப் பிரிந்துகொண்டு, ஒவ்வொரு குழுவும் பூரணமாகச் சிறகு விரிக்கும் குடிப்படையாக மாறியது. பெண்மணிகள் தங்களுக்குள்ளேயே பணம் வசூலித்துக்கொண்டு, பலவேறு பாதுகாப்புக் குழுக்களுக்குப் பலவிதமான பட்டுக் கொடிகள் தயாரிப்பது, அவற்றில் பின்னல் வேலை செய்வதோ, இலட்சிய முத்திரைகள் இடுவதோ, முதலானவற்றையும் செய்து கொடுத்தார்கள்.

பெஞ்சமின் தம் குடிப்படைக்கு நியூயார்க் நகரக் கவர்னரிடமிருந்து பீரங்கியை இரவல் வாங்கினார். பெஞ்சமினே அவரது குடிப்படைக்குத் தளபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தாலும், அந்தக் கௌரவப் பட்டத்தைப் பொருட்படுத்தாமல் சாதாரண ஒரு போர் வீரனைப் போலவே, பீரங்கிப் போரில் தம் தடவை வரும் போது தம் கையாலேயே பீரங்கியை முடுக்கி வந்தார்.

பெஞ்சமின் தொட்டதெல்லாம் பொன்னாகிறது என்ற எண்ணம் எங்கும் பரவத் தொடங்கியது. ஆகவே, தோமஸ் பாண்டு என்ற பெயருள்ள ஒருவர் தமக்கு உதவி தேவைப்பட்ட போது, பெஞ்சமினை நாடினார்.

அவர் பிலடெல்பியா பட்டினத்திலே, நோயாளிகளுக்கும் வைத்தியக்காரர்களுக்கும் ஒரு ஆஸ்பத்திரி கட்டிவிட வேண

மெனப் பெரும் பிரயத்தனம் செய்துவந்தார்! ஆனால் அவருடைய பிரயத்தனமெல்லாம் வீணாயிற்று. ஏனெனில் அதுபோன்ற ஸ்தாபனங்கள் அந்த நாட்களில் அமெரிக்காவிற்குத் தெரியாத விஷயங்கள்.

உடனே பெஞ்சமினின் நாட்டம் வைத்தியசாலைமீது பதிந்தது. எல்லா விதமான விஷயங்களிலுமே அவர் நாட்டங் கொண்டு விடுவது அவரது இயல்பாகும். ஆஸ்பத்திரி நிதிக்குத் தேவையான பங்குப் பணம் பெறுவதற்காக அவர் உடனே வர்த்தமான சஞ்சிகையில் கட்டுரைகள் எழுதி, தாமே பணத்திற்கு நன்கொடையும் கேட்டார். அப்புறம் அந்த விஷயத்தைச் சட்டசபைக்கே கொண்டுபோனார். இறுதியில் அரசாங்க நிதியும் நியமனப் பத்திரமும் வாங்கினார். 1755-ம் ஆண்டு திறக்கப்பட்ட அந்தப் புது ஆஸ்பத்திரியின் மூலைக் கல்லுக்குச் சிலாசாஸனம் எழுதும் பேரானந்தமும் கண்டார். அதன் நிர்வாகப் பீடத்திற்குத் தலைவருமானார். இதுதான் இன்றுள்ள மாபெரும் பென்ஸில்வேனியா வைத்தியசாலையின் ஆரம்பமாகும். பிச்சைக்காரச் சத்திரங்களையும் சிறைச்சாலைகளையும் தவிர, தங்கள் வீடுகளுக்கு வெளியே வேறெங்கும் கவனிக்கப்படாதிருந்த ஜனங்கள், தங்களுக்கு நோய் வரும்போது தங்களை நன்கு கவனிக்க ஒரு பொது இடத்தை இவ்வாறு பெற்றார்கள்!

பெஞ்சமின் பிராங்ளின் சாதித்த பல்பல காரியங்களைக் கேள்விப்படும்போது, அவற்றிற்கெல்லாம் அவருக்கு எப்படி அவகாசம் கிடைத்திருக்குமென்று ஆச்சரியப்படுவீர்கள். அதன் உண்மை என்னவெனில் அவர் தம் நேரத்தை ஒரு போதும் வீணாக்கியதே இல்லை. '**ஏழை ரிச்சர்டின் பஞ்சாங்கத்தில்**' அவர் எழுதி வைத்தாரே ஒரு பொன்மொழி, பின்வரும் அந்தப் பொன்மொழியின் பிரகாரமே அவர் தம் வாழ்க்கையை நடத்தியிருக்கலாம்!

"முன் தூங்கி முன் எழுதல், ஒருவனை ஆரோக்கிய வானாகவும், பணக்காரனாகவும், புத்திசாலியாகவும் ஆக்குகிறது!"

எது எவ்வாறாயினும், அந்த ரக மனிதராகத்தான் பெஞ்சமின் உருமாறினார்.

7. கண்டு பிடிப்பவர்

அமெரிக்கா அதிபால்ய தசையில் இருந்தபோது வாழ்ந்தவர்களெல்லாம் இந்தக் காலத்தில் மீண்டும் ஒருமுறை உயிர் பெற்றெழுந்து வர முடியுமேயானால், பெஞ்சமின் பிராங்ளின் ஒருவர்தாம் அமெரிக்காவைக் கண்டு சிறிதும் பிரமிப்படையாமல்

முன்பாகவே அவா பின்வருமாறு எழுதிவிடடுப போனா

"உணமையான விஞ்ஞான வளாசசியின் அதி வேகமான முன்னேறறததைக் காணுமபோது நான சீக்கிரமாகப பிறநது விடடேனே எனனும வருததநதான எனககுச சில சமயஙகளில உணடாகுகிறது! இன்னும ஆயிரம ஆணடுகளுககுள, ஜடப பொருளமீது ஆதிக்கம செலுததும மனித சக்தியின் வளாசசி யானது எவவளவு உசசததிறகு எடுததுச செலலபபடும என்று கறபனை செயது பாாபபதுகூட இபபோது அசாததியம!"

இபபோது கடலமீதும, நிலததினமீதும, பறககும ஆகாய விமானஙகளையோ, ஆடைகளை வெளுககும சலவை யநதிரங களையோ, மககளின ரோகஙகளைக குணபபடுததும பெனிசிலின மருநது முறையையோ, பெஞசமின் பிராஙளின காணபாரே யாகில, அவா சிறிதளவேனும ஆசசாியபபட மாடடாா.

பெஞ்சமின் கருததுச செலுததாத விஷயம ஏதாவது உணடு என உஙகளால கூறவும முடியாது எதிாகாலததில என்ன நடககும எனற விஷயததில மடடும அவா கவனம செலுததினா எனபதலல, அவருடைய காலததிலேயே வாழநத மககளின் வாழககைத தரததை வளாபபதறகுாிய வழி வகைகள என்ன எனபதைப பறறியும அவா சிநதிததாா

பிலடெலபியா படடினததில அதிதீவிரக குளிாகாலததின நிலையும அவா சிநதிதத விஷயஙகளில ஒனறுகும சில சமயங களில அவா புகை மயமான கணபபிடததிறகு முனபாக உடகாாநது கொணடு முகததிறகும முழஙகாலகளிறகும சூடேற றிககொணடிருககும சமயததிலேயே அவரது முதுகுப புறமானது குளிரால உறைநதுகொணடிருககும அபபோது சூடேறறும திடடஙகளை வளாசசியுறச செயய வேணடுமென அவருககுத தோனறும உஷணபபடுததபபடட காறறு மேலே எழுமபிச செலவதையும அதன இடததுககுக குளிாநத காறறு உடபுகு வதையும அவா கவனிததாா அநதக்காலததிய கணபபடுபபு களோ சிறிய திறவைகளுடன் உஷணததைவிட காறறு வீசசுககே அதிகமாக இடமளிபபதாய இருநதன, மேலே கூறிய விஞ்ஞான உணமையைப பயனபடுததிககொளளுவனவாக விளஙகவிலலை ஆகவே, குறைவான எரி சாதனததுடன அதிகமாக உஷணம தரக்கூடிய திறமையான ஒரு ஸடவ அடுபபிறகுப பெஞசமின திடடமிடடாா

இந்தப் புதுமையான ஸடவ அடுபபை பிராஙளின் தம சொநத வீடடில வைததுப பாாததாா அவருடைய குடுமபத தினா அனைவருக்கும—முககியமாக எநத நேரமும வீட்டிலேயே

தங்கி கணபபருகிலேயே அமாநதிருக்கக்கூடிய பெண்கள அனைவருககும—குறைவாகவே ஜலதோஷம பிடிப்பதையும், அதிகமாகப பலவலிகள வராமல இருபபதையும, அவா விரைவிலேயே கணடுகொணடாா

அவருடைய நலல நண்பாகளில ஒருவரான ராபாட கிரேஸ என்பவருககு ஓா இருமபு வாாபபட்டறை இருநதது அவரிடம பெஞசமின தாம கண்டுபிடிதத ஸடவ அடுபபை மாதிரி காண்பிததாா

"நீா ஏன் வேலை செய்து இதுமாதிரி சில ஸடவ அடுபபுகள தயாா செய்து ஜனஙகளுககு விறககககூடாது?" என்று கேடட பெஞசமின், "இநத உபாயமான சாதனததை என் வீட்டி லுள்ள பொதுச சலலாபக கூடததில நான உபயோகபபடுததி வருகிறேன இநதப புது அடுபபு பழையதைவிட இரணடு மடஙகு உஷணம தருகிறது இதை எரிய விடுவதறகு கால பஙகு விறகுதான செலவாகிறது!" என்றாா

"இது மாதிரி அடுபபு என்னால செய்யமுடியும ஆனால அதை நான் எபபடி விறக முடியும? நான வெறும இருமபுக கொல்லன் தானே?" எனறாா அநத இருமபுத தொழிலாளி

"வாததமான பததிரிகையில இதைப பறறி ஒரு குறிபபு எழுதுகிறேன!" எனறாா பெஞசமின

உடனே பெஞசமின உடகாாநது அநத ஸடவ அடுபபைப பறறி மிக நீளமாக ஒரு வாணிபபு எழுதினாா இநதப புது ஸடவ அடுபபானது எவவளவு அதிகமாக கூடததை கதகதபபாகவும சௌகரியமாகவும ஆககுகிறது என்றும, பழைய கணபபு களிலோ கதகதபபிறகாக ஜனஙகள எவவளவு அதிகமாக தீயை எரியவிட வேணடி இருககிறது எனறும, அவவளவு பெரிய தீ எவவாறு அவாகளின மேனிததோலகளை காயவைதது வறற லாககி விழிகளையும மஙகச செயது கிழடடுத தனமான தோற றததையும உணடாககிவநத தெனறும, அநதக கடடுரை பிரசாரம செயயத தொடஙகியது பிராஙளின கணடுபிடிதத புது ஸடவ அடுபபினாலோ இது போனற கேடுகள விளைவதிலலை என்றும கடடுரை குறிபபிடடது (இதைப படிததும பிலடெலபியா படடினததிலுள்ள ஒவவொரு பெணமணியும, பிராஙளின் ஸடவ அடுபபையே வாஙக ஆசைபபடடாள!)

எவவாறு அநத ஸ்டவ அடுபபு வேலை செயகிறது எனபதை ஆணகள புரிநதுகொளள வேண்டுமென்பதறகாக அது பறறி கடடுரையின எஞ்சிய பகுதியில ஒரு விளககமும கொடுத திருநதாா அதோடு அநத ஸடவ அடுபபின் நன்மைகளைபபறறி

ஒரு படியலே தயாரித்துச் சோதித்து ஏதாவது எதிர்க் கேள்விகள் வந்தால் அவற்றிற்கு முன் கூட்டியே பதிலும் அளித்திருந்தார். அதன் பிறகு புதிய ஸ்டவ் அடுப்பை எவ்வாறு எந்தக் கண்டுபிடித்திலும் பொருத்தி வைப்பது என்பதற்கு ஆதியோடந்தமாக வழிமுறைகளும் கொடுத்திருந்தார்.

மேலும் தம் வார்ப்புப் பட்டறை நண்பருக்குப் பேருதவியாக, அவருடைய இரும்புப் பட்டறையானது பிலடெல்பியா பட்டினத்தில் இராமல் செஸ்டர் பிராந்தியத்தில் இருந்ததை முன்னிட்டு, தாம் போஸ்ட்மாஸ்டராக இருக்கும் தபால் நிலையத்திலேயே சில ஸ்டவ் அடுப்புகளை இருப்பு வைத்துக்கொண்டார்.

பிறகு வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடுவதற்குப் பதில் துண்டுப் பிரசுரமாகவே தம்முடைய வியாசத்தை வெளியிட்டு அதைச் சுற்றறிக்கையாக விடுக்கலானார். அந்தத் துண்டுப் பிரசாரமானது ஏராளமாகப் பொதுஜனக் கவனத்தைக் கிளர்ந்தெழச் செய்தது. இப்போது பென்ஸில்வேனியா குடியேற்ற நாட்டுக்குத் தலைவராக விளங்கிய கவர்னர் தோமாஸ், அந்த அடுப்பைப் போல வேறு எவரும் தயார் செய்து விற்கத் தடி 'வியாபார உரிமையை' பெஞ்சமினுக்கு அளித்தார். ஆனால் பெஞ்சமின் அதை ஏற்க மறுத்துவிட்டார். நாம் மற்றவர்களின் ஆராய்ச்சிக் கண்டுபிடிப்புகளின் மூலம் எவ்வளவோ பெரும் பயன்களையெல்லாம் அனுபவித்து வருவதுபோலவே நம்முடைய கண்டுபிடிப்பின் மூலமும் மற்றவருக்குச் சேவை செய்யச் சந்தர்ப்பம் கிடைத்திருப்பதைக் கண்டு பேரானந்தம் கொள்ள வேண்டும் என்றும் அவர் கூறினார்.

பல நீண்ட வருஷங்களுக்குப் பிறகு, சூடேற்றும் முறையில் உள்ள முதலாவது வளர்ச்சி பிராங்ளின் ஸ்டவ் அடுப்பே ஆகும். அந்த அடுப்பின் மூலம் சூடேற்றிக்கொள்வதில் அதிக சௌகரியமும் அதே சமயம் குறைவான செலவும் ஏற்படுவதைக் கண்டு பொதுமக்கள் பெருமகிழ்ச்சியடைந்தார்கள். இவ்வாறு 'பிராங்ளின் ஸ்டவ் அடுப்புகள்' விரைவிலே நவீன சாதனமாகக் கருதப்பட்டு குறுகிய காலத்திற்குள் பொதுஜன உபயோகத்திற்கும் வந்துவிட்டது (இந்தக் காலத்திலகூட பிராங்ளின் ஸ்டவ் அடுப்புகளைக் காணலாம்). அத்தகைய அடுப்புகள் குடியேற்ற நாட்டுப் பிரஜைகளின் தேகாரோக்கியத்தைப் பெருக்கின என்பதிலும், இனி வருங்காலத்தில் வரப்போகும் ஸ்டவ் அடுப்புகளின் புது வளர்ச்சிக்குப் பெரிதும் மூலகாரணமாய் அவை விளங்கின என்பதிலும் எள்ளளவும் சந்தேகமே இல்லை! அவை ஐரோப்பா முழுவதும் மிகவும் பாராட்டப்பட்டு இங்கிலாந்திலும் அவற்றிற்கு நகல்கள் தயாரிக்கப்பட்டன.

டஸ்கனி நாட்டு மாபெரும் கோமகனான லியோபால்டு என்பவருக்கு இரண்டு ஸ்டவ் அடுப்புகள் மாபெரும் பரிசுகளாக அனுப்பப்பட்டன என்றும் சரித்திரம் குறித்து வைத்திருக்கிறது.

இன்னும் நன்றுக்ச் சூட்டேற்றும் சாதன முறைகளிலே பெஞ்சமினுக்கு ஒருபோதும் நாட்டம் குன்றியதே கிடையாது. அவர் செளகரியத்தை விரும்புவர். புகை போக்கிகள், இன்னும் நன்றாக வேலை செய்ய ஏதாவது செய்தாக வேண்டும் என்று அவர் புகை போக்கிகளுக்குள் முகத்தை சதா நீட்டிக்கொண்டே இருப்பார். '**புகைபோக்கிகளில் புகையடைவதற்குரிய காரணமும் சிகிச்சை முறையும்**' என்பது பற்றி பெஞ்சமின் படுகிழவரான பிறகு தம் விஞ்ஞான நண்பர்களில் ஒருவருக்கு நீண்ட கடிதம் ஒன்று எழுதினார். 1771ம் வருஷத்திய கார் காலத்தில் அவர் லண்டன் மாநகரில் வசித்தபோது கரிகளை எரிக்க புதியதோர் ஸ்டவ் அடுப்பைக் கண்டுபிடித்தார். அவர் லண்டனில் இருந்தபோதும், பிறகு தம் சொந்த ஊரான பிலடெல்பியா பட்டினத்திற்கு வந்தபோதும் அந்த ஸ்டவ் அடுப்பையே அவர் உபயோகித்து வந்தார். பிரான்ஸ் தேசத்திற்கு அவர் ராஜதூதராகச் சென்றபோது அந்த அடுப்பையும் கூடவே எடுத்துக்கொண்டு போனார்.

பெஞ்சமின் பிராங்ளின் கண்டுபிடித்த சாதனைகளெல்லாம் ஆழ்ந்து கவனித்ததின் விளைவாக விளங்குவதுதான் வழக்கம்—அதாவது, அவர் காணும் எதையும் கூர்ந்து கவனித்து அதை இன்னும் நல்ல முறையில் செய்ய முடியுமா என்று ஏதாவது கண்டுபிடிக்க முயல்வதேயாகும். அவருடைய ஆராய்ச்சி முடிவுகளில் பல, அவருடைய வாழ்நாளுள் சொந்த சாதனைகளாகவோ அல்லது வேறெவரின் சாதனைகளாகவோ உருவாகவுமில்லை. அவர் சிந்தித்தது அனைத்தையும் செய்துகாட்டிவிடலாம் என்பதற்கோ அவருக்கு அவ்வளவு அவகாசமும் இல்லை. அவருடைய சிந்தனைகள் பல அவர் வாழ்ந்த யுகம் சற்றும் கேட்டறியாத விஷயங்களாகும்—இப்போது நாம் அறிந்திருக்கிறோமே விஞ்ஞான உலகம், இது பற்றி பொதுமக்களிடையே அறியாமையும் மூடநம்பிக்கைகளும் மலிந்திருந்த யுகமாகும் அது!

ஒருநாள் பெஞ்சமின் வெளியே உலாவி வரும் சமயம், ஓர் வயலைக் கூர்ந்து கவனித்தார். அங்கேயுள்ள புல் சில இடங்களில் மற்ற இடங்களைவிட அதிகப் பசுமையாக இருப்பதைக் கண்டார்.

"ஏன் இப்படி என்று எனக்கு ஆச்சரியமாகயிருக்கிறது?" என்று பெஞ்சமின் தம்மையே வினவிக்கொண்டு, அதை உடனே கண்டுபிடிக்கும் வேலையை மேற்கொண்டார்.

வயலில் சில இடங்களில் சிலாசத்தைக் (Gypsum) கொண்டு ஏதோ சில எழுத்துக்கள் வரையப்பட்டிருந்ததைக் கண்டார். சிலாசத்து விழுந்த இடங்களில் புற்கள் அதிகப் பசுமையாக விளங்குவதையும் கண்டுபிடித்தார்.

“பயிர் வகைகளின் விளைச்சலை வளப்படுத்த வயல்கள்மீது சிலாசத்தைத் தெளிக்க வேண்டும்!” என்று பெஞ்சமின் கூறினார். அதைக் கேட்ட பலர் அவருக்குப் பைத்தியம் பிடித்து விட்டது என்று கருதினர். செயற்கை உரத்தைப்பற்றி அவர்கள் அதுவரை கேள்விப்பட்டதே இல்லை. அந்தக் காலத்தில் அதுபோல் எதுவும் இருந்ததுமில்லை. ஆனால் இந்தக் காலத்திலோ நமக்கு செயற்கை உரம் எவ்வளவு அத்தியாவசியம் என்பது மிக மிக நன்றாகத் தெரியும்!

சூறாவளி, விஷப்பூச்சிகள் முதலானவற்றிற்கு எதிராகப் பயிர்கள்மீது ‘ஆபத்து சகாய நிதியாக’ இன்சூரன்ஸ் செய்து கொள்ளக்கூடியவர்களாய் உழவர்கள் விளங்க வேண்டுமென்று கூறியவரும் பெஞ்சமினேயாவார். அதுமாதிரியாக அவர் ஆலோசனை கூறியதைக் கேட்டதுமே அந்தக் காலத்திய ஜனங்கள் அரண்டு அருவருத்துப் போனார்கள். ‘அது இயற்கைக்கு எதிராக ஆண்டவன் முகத்திலே அடிப்பது போலாகாதா?’ என எண்ணினார்கள். ஆனால் இந்தக் காலத்தில் அதுபோன்ற ‘இன்சூரன்ஸ்கள்’ வெகு சகஜம்!

வெளியே உலாக்கிளம்பி நடப்பது என்றால் பெஞ்சமின் அதிலே மகா நிபுணர். அப்போதுதான் அவருக்கு ஏகப்பட்ட யோசனைகளும் உதிக்கும். ஒரு நாள் ஒரு நீரோடை வழியாக அவர் உலாவப் போய்க் கொண்டிருந்தபோது, ஓலைகளால் பின்னிய பழைய கூடை ஒன்று நீரோடையில் கிடப்பதைக் கண்டார். கூடையின் கீற்றுகள் தண்ணீருக்குள் முளைவிட்டு சின்னஞ்சிறு தளிர்கள் விடுவதையும் கண்டார். உடனே, “இந்த ஓலைக் கூடைக்கு உயிர் இருக்கிறது!” என்று பெஞ்சமின் கூவினார். அதன் முளைகளில் இரண்டை வீட்டிற்கு எடுத்துப் போய் அதை முளை கிளம்ப வைத்தார். இது ஒரு பிரமாதமான ஆராய்ச்சி சாதனை அல்லதான். ஆனாலும் அமெரிக்கக் கண்டத்தில் அலரி போன்ற மரவகைகளின் ஆரம்பம் இதுவேயாகும்.

பிலடெல்பியா பட்டினமானது கோடை காலத்தில் உஷ்ணமாயிருக்கும். பெஞ்சமின் தம் சொந்த சௌகரியத்தின் மீது நாட்டம் செலுத்தவே, அது தீவிரமான பரிசோதனைகளில் அவரைக் கொண்டுபோய் ஈடுபடுத்தியது. ஒரு வயலில் அறுவடை செய்பவர்களைக் கவனித்ததிலிருந்து, உடம்பில்

'நீராவியாகும் வியர்வை உடம்பை ஜில்லென்று குளிர்மை யாக்கும்' என்று முடிவு கட்டினார். இதை வைத்துக்கொண்டு அவர் ஓர் பரிசோதனையும் நடத்தினார். வெந்நீர், தேன், காபி— இவற்றைக் கொண்டு கொதி ஆவி கிளம்ப ஒரு பானகம் தயாரித்து, தர்மாமீட்டர் நூறு டிகிரி உஷ்ண அளவு காட்டும் போது அந்தப் பானகத்தைக் குடித்தார். இது வியர்வையைக் கிளர்ந்தெழச் செய்தது. ஆனால் ஜில்லென்ற குளிர்ச்சியான உணர்ச்சியை அவருக்குத் தந்தது.

இரண்டு நிறத்துணிகள் மீது வெய்யில் உஷ்ணத்தினால் ஏற்படும் விளைவுகளையும் அவர் பரீட்சை செய்து பார்த்தார். இந்தப் பரிசோதனையை அவர் குளிர்காலத்தில் செய்தார். கறுப்பு, இருள் நீலம், மெல்லிய நீலம், வெள்ளை முதலான நிறத் துணிகளைச் சதுரம் சதுரமாகச் சில துண்டுகளாக வெட்டி, தரையிலிருக்கும் உறைபனிமீது சூரியகிரணங்களுக்கு நேர் கீழே அந்தத் துண்டுகளை வைத்தார். கறுப்புத் துணி சீக்கிரமாகப் பனியில் உருகி அமிழ்ந்துவிட்டது. கருநீல நிறத் துணியும் அதைவிடக் கொஞ்சமாகப் பனியில் உருகிப் புதைந்து போயிற்று. மெல்லிய நீலநிறத் துணியோ மெதுவாகத்தான் பனியை உருகச் செய்தது. ஆனால் வெள்ளைநிறத் துணியோ பரிசோதனை முடியும் வரையில் உறைபனி மீது உருகாமலே கிடந்தது. இதன் மூலம் 'மெல்லிய வர்ணம் உஷ்ணத்தை எதிர்த்து நிற்கிறது' என்பதையும், 'மெல்லிய நிற வெள்ளை ஆடைகள்தாம் உஷ்ணமான காலத்தில் உடுத்திக்கொள்ளப் பொருத்தமானவை' என்பதையும் பெஞ்சமின் முடிவு கட்டினார்.

சௌகரியத்தின்மீது அவர் நாட்டம் சென்றது போலவே, தேகாரோக்கியத்தின் மீதும் அவரது கருத்துப் பதிந்தது. இந்த தேகாரோக்கிய விஷயமாக அவரிடம் ருசிகரமான கருத்துகள் ஏராளமிருந்தன. குறிப்பிட்ட சில உலோகப் பொருள்கள் மத்தியில் வேலை செய்யும் தொழிலாளிகள்—உதாரணமாக, அச்செழுத்துத் தயாரிப்பவர், ஈயவேலைக்காரர், பானை செய்யும் குயவர், வர்ணக்காரர்—அனைவருக்கும் அடிக்கடி ஒரே மாதிரியான நோயே உண்டாவதைக் கவனித்தார். இந்தத் தொழிலாளிகளெல்லாம் வெள்ளை ஈயத்தைக் கையாள்பவர்கள் என்பது அவருக்குக் குறிப்பாகப் பட்டது. ஆதலால் ஈயம் என்பது விஷத்தன்மை வாய்ந்தது என்றும், ஈயத்தை வைத்துக்கொண்டு நெடுங்காலம்வரை வேலை செய்பவர்கள் அதன்மூலம் ஒருவித விஷத்தால் பீடிக்கப்படுகிறார்கள் என்றும் தீர்மானித்தார். பெஞ்சமின் ஓர் மருத்துவ வைத்தியராக இராது போனாலும், ஈயம் விஷமாகும் என்பதை முதன் முதலில் ஆராய்ந்து கண்டுபிடித்தவர் அவரேயாவார்!

அவர் படு கிழவராகி, கண்பார்வை தடுமாறியபோது அவருக்கு இரண்டு ஜோடி மூக்குக் கண்ணாடிகள் தேவை எனக் கண்டுபிடித்தார் படிப்பது, மற்றும் கண்ணருகே பார்த்து வேலை செய்வது முதலான சமீப பார்வைக்கு ஒரு கண்ணாடியையும், வெளியே உலாவச் செல்லும்போது தூரப்பார்வைக்கு இன்னொரு கண்ணாடியையும் உபயோகித்துக்கொண்டார் ஆக அவர் ஓயாமல் இரு ஜோடிக் கண்ணாடிகளையும் கூடவே தூக்கிக் கொண்டு திரியவேண்டியிருந்தது படிப்பதற்கு உபயோகப் படுத்தும் கண்ணாடியையே சாப்பிடும்போதும் கண்ணில் மாட்டிக் கொண்டார் ஆனாலும், சாப்பாட்டு மேஜைக்கு எதிர்ப்புற வரிசையிலுள்ளவர்களின் முகங்களை அவரால் பார்த்து நிதானிக்க முடியவில்லை இது அவருக்கு மிகவும் அலுப்பாயிருந்தது அதனால் தம்முடைய இரு ஜோடிக் கண்ணாடிகளையும் 'லென்ஸ்' கள் செய்பவரிடம் எடுத்துச் சென்று, இரு ஜோடிக் கண்ணாடிகளின் லென்ஸ்களையும் இரு பாதியாக வெட்டும்படி செய்தார் ஒவ்வொரு கண்ணாடியின் பாதியும் மூக்குக் கண்ணாடி விளிம்புகளின் கீழ்ப் பகுதியில் பொருத்தப் பட்டது இப்போது அவர் கீழ்நோக்கிப் பார்த்தால் சாப்பிடுவதை சமீப பார்வையில் பார்க்க முடியும் மேல்நோக்கிப் பார்த்தால் எதிரேயுள்ளவர்களின் முகங்களைத் தூரப் பார்வையில் பார்க்க முடியும் இந்தக் காலத்தில் நமக்கெல்லாம் நன்கு தெரியுமே, இரட்டைப் பார்வைக் கண்ணாடி, அதன் ஆதித் துவக்கம் இதுதான்!

பெஞ்சமின் பிராங்ளினுக்கு ஏராளமாக ஜலதோஷம் வரும் அதனால் ஜலதோஷங்களின் காரணங்களைப்பற்றிய ஆராய்ச்சியில் அவர் கருத்துச் செலுத்தினார் அவர் கூறுகிறார் "கடுமையான குளிர்காலங்களில் நான் பிரயாணம் செய்யும் போது, சில சமயங்களில் அப்படியே ஜில்லிட்டு உறைந்துபோகும் படியான அளவுக்கும் குளிரால் அவஸ்தைப் படுவேன் ஆனால் அப்போதும் எனக்கு ஜலதோஷம் பிடிப்பதில்லை ஈரத்தைப் பொறுத்தளவோ, நான் ஒவ்வொருநாள் மாலை நேரத்திலும் ஆற்று ஜலத்தில் இரண்டு மூன்றுமணி நேரம்வரை சேர்ந்தாற் போல் பதினைந்து நாட்கள்கூட கிடப்பேன்-- ஈரம் சுவர்ந்து ஜலதோஷத்தை வலிய வரவழைத்துக்கொண்டு விடுவேனோ என்றுகூட யாரும் நினைக்குமளவிற்கு ஆற்று ஜலத்தில் கிடப்பேன்—ஆனால் அப்படி ஒரு ஜலதோஷ விளைவும் எனக்கு ஏற்பட்டதே கிடையாது நான் நீண்ட காலமாகக் கவனித்து வந்ததின் மூலம் முடிவு கட்டியிருப்பதாவது, ஜனங்கள் நெருக்கமான அறைகளுக்குள்ளும், கோச்சு வண்டிகளுக்குள்ளும் ஒன்றாக அடைபட்டுக் கிடக்கும்போதுதான் ஒருவரிடமிருந்து ஒருவர் ஜலதோஷத்தை ஒட்டிக்கொள்கிறார்கள்!"

அசுத்தமான படுக்கைகள், பழைய துணிமணிகள், பழைய புஸ்தகங்கள், அழுகிப்போன மிருகக் கொழுப்புகள்—முதலான வற்றிலிருந்தெல்லாம் ஜனங்கள் ஜலதோஷத்தை ஒட்டிக்கொள் கிறார்கள் என்று தாம் நம்புவதாகவும் சொல்லலானார். ஜலதோஷக் கிருமியைப் பற்றியோ அல்லது விஷ நீரைப் பற்றியோ அவர் கேள்விப்பட்டிருக்கவே முடியாதென்றாலும், இந்தக் காலத்தில் பொதுவாக ஜலதோஷத்தைப் பற்றி நாம் தெரிந்து வைத் திருக்கும் அளவு பெஞ்சமின் தாமாகவே கண்டுபிடித்திருந்தார்.

பிராங்ளின் தம் வாசகசாலையின் உயரமான புஸ்தகத் தட்டுகளின் மீது புஸ்தகங்களை அடுக்கும் போதெல்லாம் தம்முடைய கைகள் இன்னும் நீளமாக இருந்திருக்கக்கூடாதா என்று எண்ணுவார். அதன் பின்னர் சீக்கிரமாகவே, முனையில் ஓர் கம்பி இடுக்கியுடன் கூடிய கம்பைக் கொண்டு செய்த கருவி யொன்றை அவர் புதிதாகக் கண்டுபிடித்தார். உயரமான தட்டுகளிலிருந்து கோதுமைப் பெட்டிகளை உங்களுக்குக் கீழே எடுத்துக்கொடுக்க இதுபோன்ற கருவியை உங்கள் பலசரக்கு வியாபாரிகள் உபயோகித்து வருவதை இன்றளவும் நீங்கள் காணலாம்.

அதே சமயத்தில் பெஞ்சமின், மேலே ஏறி உட்கார்ந்து கொள்ள ஏணிப் படிகளுடன் கூடிய குறிச்சியொன்றைச் செய்ய வேண்டுமென்றும் எண்ணமிட்டார்! உங்கள் அம்மாவின் சமையலறையில் ஏணிப்படியுள்ள குறிச்சி ஏதாவது தென் பட்டால், அதன் மூதாதை இதனைக் கண்டுபிடித்தவர் பெஞ்சமின் பிராங்ளின்தான் என்று தெரிந்துகொள்வது உங்களுக்குச் சுவாரஸ்யமாயிருக்கலாம்!

அட்லாண்டிக் கடலில் அங்குமிங்குமாக அவர் அடிக்கடி பிரயாணங்கள் செய்தபோது, பலவித விஷயங்களையும் கூர்ந்து கவனிக்க அவருக்கு நிறைய அவகாசம் கிடைத்தது. இங்கிலாந் திற்குப் போய்ச் சேர்வதென்றால் பல வாரங்கள் பிடிக்கும். அப்போது பெஞ்சமின் ஆராய்ச்சி செய்வதற்கு அவருக்குக் கப்பலொன்றுதான் இருந்தது. பனிமூட்டத்தால் அவரது கப்பல் வழி தடுமாறி நிற்க நேரிடும்போது, அவர் ஈரப் படலத் தைப் பற்றிக் குறைகூறமாட்டார். கலங்கரை விளக்குகளின் அத்தியாவசியத்தையும் பெருமதிப்பையும் பற்றியே சிந்திப்பார். அமெரிக்காவில் இன்னும் எவ்வளவு அதிகமாகக் கலங்கரை விளக்கங்கள் எப்படிக் கட்ட முடியும் என்றும் சிந்திப்பார்.

முன் காலங்களில் புயலடிக்கும் போது கடலலைகளை அடக்கிச் சலனமற்றதாக்க கிரேக்க வீரர்கள் கடலின் மீது எண்ணெயை ஊற்றினார்கள் என்று அவர் எப்போதோ ஒருமுறை படித்திருந் தார். ஒரு முறை அவர் லண்டனுக்குப் போகும்போது, காவற்

படையைச் சேர்ந்த கப்பல்களில் ஒன்றின் போக்கை மட்டும் உற்றுக் கவனித்தார். அது செல்லும்போது மற்ற கப்பல்களை விட அமைதியான (அலைக்கொந்தளிப் பில்லாத) வழிச்சுவடுகளை விட்டுச் சென்றது. அதற்குக் காரணம் சமையலறையிலுள்ள கிரீஸை யெல்லாம் கப்பலின் வழிச்சுவடு வழியாகச் சமையற்காரன் வெளியேற்றியதுதான் என்று அந்தக் கப்பற் தலைவர் கூறினார்.

இந்தச் செய்தி பிராங்ளினைப் பெரிதும் கவர்ந்தது. அவர் ஓர் மூங்கில் பிரம்பு செய்து வைத்திருந்தார். அதில் எண்ணெய்க் குப்பி ஒன்று அடங்கியிருக்கும். அவர் தம் தோழர்களோடு ஏரிப் புறம் உலாவச் செல்லும்போது அந்தப் பிரம்பை வைத்துக் கொண்டு ஒரு வேடிக்கை காட்டுவார். ஏரியின் அலைகளைத் தம்மால் அடக்கிவிட முடியும் என்று முதலில் பந்தயம் கூறுவார். எல்லோரும் எதிராகப் பந்தயம் கட்டி விடுவார்கள். உடனே பெஞ்சமின் தம் கையிலுள்ள மூங்கில் பிரம்பை எடுத்து, ஜலத்தின் மீது மாய மந்திரங்கள் செய்வதுபோல் சில வார்த்தைகளைச் ஜெபித்து விட்டு, ஆகாயத்தை நோக்கி மூங்கிலை மூன்று தடவை ஆட்டுவார். உடனே அங்குள்ள நீர் அலைகள் படிப்படியாக ஜலத்திற்குள்ளே மூழ்கி அடங்கிப் போய், ஜலத்தின் மேல்பரப்பு அமைதியாகி விடும்! இந்த அதிசயம் எதனாலென்றால், பிரம்பின் மூட்டுக்குள் அவர் மறைத்துக் கொண்டு வந்தாரே எண்ணெய், அதன் பசைதான் உண்மையிலே அலைகளை அடங்கச் செய்ததாகும்.

அட்லாண்டிக் கடலில் அவர் செய்த பிரயாணங்களின் போது, கடலின் ஒரு நீரோட்டப் பாதை மற்ற பகுதியைவிட நிறத்தில் வேறு பட்டிருப்பதைக் கவனித்தார். ஐக்கிய அமெரிக்காவின் கீழ்த்திசைக் கடற்கரைகளை வெது வெதுப்பாக்கி வரும் கல்ப் ஸ்ட்ரீம் எனும் குடாக்கடல் நீரோடை (Gulf Stream) தான் அது என்று இப்பொழுது நமக்குத் தெரியும். அந்த அதிசயமான நீரோட்டத் தோற்றத்தை, எந்த விஞ்ஞானியும் கேள்விப்பட்டிராத முன்பே, பெஞ்சமின் ஆராய்ந்தார்.

அதைக் கொண்டு மாலுமிகளுக்கு ஒரு கடல் வழிப்படமும் தயாரித்துக்கொடுத்தார். கப்பலை வேகமாகச் செலுத்துவதற்கு அந்த நீரோட்டத்தின் வேகத்தைப் பயன்படுத்திக் கொள்ள அது அவர்களுக்கு உதவியது. இவ்வாறாக, ஆங்கிலேயக் கப்பற் தலைவர்களைவிட அமெரிக்கக் கப்பற் தலைவர்கள் சுருங்கிய காலத்தில் அதிவேகமாகக் கப்பலைச் செலுத்தக் கூடியவர்களாக விளங்கினார்கள். ஏனெனில் நாட்கணக்காக நீரோட்ட வேகத்தை எதிர்த்து கப்பலைச் செலுத்துவதற்குப் பதில் நேராகக் குடாக்கடல் நீரோட்டத்தின் குறுக்கே செலுத்திச் சென்றார்கள்.

கடலைக் கடந்து செல்லும் போதெல்லாம் குடாக்கடல் நீரோட்டயை பெஞ்சமின் கூர்ந்து கவனித்தார் அதில் திமிங்கலங்கள் இல்லை என்பதைக் கண்டு பிடித்தார் அது மற்ற கடல் பகுதியை விட நிறத்தில் மிகவும் வேறு பட்டிருப்பதையும் அங்கே பூண்டுகள் அதிகமாக முளைத்து வருவதையும் குறிப்பாகக் கவனித்தார் அந்த நீரின் மேற்பரப்பு இராக்காலத்தில் மினு மினுவென்று பிரகாசிக்காமல் இருப்பதையும் கண்டார் அந்த நீரோட்டமானது அதைச் சுற்றியுள்ள மற்ற கடற் தண்ணீரைவிட சீதோஷ்ண ஸ்திதியில் வேறுபட்டிருப்பதையும் அறிந்து கொண்டார் இந்த உண்மைகளை யெல்லாம் ஒன்று சேர்த்துப் பார்க்கும்போது உண்மையிலே அந்த நீரோட்டம் ஒரு நதிதான் என்றும், காய்ந்த நிலத்தின் வழியாக ஓடுவதற்குப் பதில் கடல் வழியாக ஓடுகிறதென்றும், அவர் தீர்மானித்தார் இந்த விஷயங்களை யெல்லாம் அவருக்கு முன் வேறு யாருமே கவனித்ததில்லை

1776-ம் வருஷத்தில் பிரான்ஸ் தேசத்திற்குப் பெஞ்சமின் போய்க்கொண்டிருந்தபோது குடியேற்ற நாடுகள் ஏற்கனவே யுத்தத்தில் இறங்கியிருந்தன பெஞ்சமின் பிரயாணம் செய்த ரிப்ரைசல் என்னும் கப்பல் பிடிபட்டிருக்குமேயானால் துரோகி என்ற குற்றம் சாட்டப்பட்டு, அவர் தூக்கிலிடப்பட்டிருப்பார் ஆனால் அதைப் பற்றி பெஞ்சமின் கலவரப்படவோ கவலைப் படவோ இல்லை குடாக்கடல் நீரோட்டத்தின் சீதோஷ்ண ஸ்திதியை அளவெடுப்பதில்தான் அவர் அதி சுறு சுறுப்பாக முனைந்திருந்தார்

அந்தக் காலத்தில் இதர விஞ்ஞான சாதனையாளர்களுக்கும் பெஞ்சமின் பெரும் ஆதரவாக விளங்கியிருக்க வேண்டும் ஏனெனில் அத்தகைய ஆராய்ச்சியாளர்களெல்லாம் கொஞ்சம் சித்தப் பிரமையுள்ளவர்கள் என்று பொதுஜனங்களாலும், அவர்களின் குடும்பத்தினராலும், அவர்களின் நண்பர்களாலும் அடிக்கடி கருதப்பட்டு வந்த காலம் அது! பெஞ்சமினோ எந்த சாதனையும் அசாத்தியமென்று கருதியவரல்ல அதிகாரமும் செல்வாக்கும் படைத்த மாபெரும் மனிதரென்று உலகெங்கும் பெஞ்சமினைப் பற்றித் தெரிந்திருந்தபடியால், ஆராய்ச்சியாளர்களின் சாதனைகளில் அவர் கொண்டுள்ள கருத்தானது அவற்றிற்குப் பொதுஜன முக்கியத்துவம் அளித்தது முதன் முதலாகப் பிரான்ஸ் தேசத்திலேயுள்ள பாரீஸ்மாநகரிலே காஸ் பலூன் பறக்கவிடப்பட்டபோது அந்தச் சம்பவத்தைப் பார்வையிடக் குறித்த நேரத்தில் பெஞ்சமின் அங்கே பிரசன்னமாயிருந்தார்

அந்தப் பலூன் பட்டுத் துணியால் செய்யப்பட்டு, முழுவதும் காஸ் அடைக்கப்பட்டு விளங்கியது அது போலவே ஜனங

களின் வையாணடிககும 'இடியிடி' யென்ற பரிகாசச சிரிபபு களுககும அது ஒரு கேலிக கூததுப பொருளாகவும விளஙகியது அதைப பாாதது ஏளனம செயவதறகாக சுமாா ஐமபதினாயிரம ஜனஙகளுககு மேல வநது கூடியிருநதாாகள ஆனால கொடடும மழையில ஜனஙகள சிரிததுக கொககரிததுக்கொணடிருநத போதே காஸபலூன ஜிவவென்று வானததில கிளமபி ஆரஞசுப பழததின அளவாகத தோனறுமவரை உயர உயரச சென்று கடைசியில மேகபபடலஙகளுககுள மறைநதுவிடடது

ஜனக குமபல ஆசசரியததால ஸதமபிததுப போயிறறு ஆனால அவாகள தஙகளுடைய தவறை ஒபபுககொளளத தயாராக இலலை

"அது மேலே பறநதுபோகிறது எனபது உணமைதான ஆனால அதனால யாருககு என்ன பிரயோஜனம ?" என்று யாரோ சொனனாாகள

"புதிதாகக குழநதை பிறககிறதே, அநதக குழநதையால என்ன பிரயோஜனம ?" என்று கேடட பெஞசமின, "அது பெரிதாக வளரும வரை நீஙகள காததிருகக வேணடும்!" என்றாா

ஆகாய வழியாகப பறககககூடிய கபபலகள என்றாவது ஒருநாள பொதுஜன பிரயாணததிறகுரிய சாவ சாதாரணமான விமான வசதிகளாக மாறி, ஜனஙகளைத தெருவின கல தளவரிசை மீது குலுககிபபோடும கஷடததிலிருந்து நிவாததிககும என்று பெஞசமின அபபோதே தீாகக தரிசனம கூறினாா அது அவா வாழகாலததிறகுள நிறைவேறிடும என்றலல, என்றாவது ஒருநாள அது நிறைவேறியே தீரும என்றுதான ! அது போன்ற பறககும கபபலகள வரககூடிய காலததில யுததததின தீமைகளை அவை விளககிக காடடி தேசஙகளிடையே சமாதானததை உணடு பணணும என்றும அவா கூறினாா ஏனெனில ஆகாயத் தாககுதலுககு எதிராக ஒரு தேசததை யாரும பாதுகாகக முடியாது இராணுவஙகள முழுவதையும பலூனகள மூலமாகவே கொணடு போகும காலம ஒன்று வரும என்றும, அநத வழியில ஒரு தேசததின மீது படை எடுககச செலவு மிகவும குறைவாகத தான பிடிககும என்றும அவா கூறினாா இபபடியாக இன்றுளள பாரசூட படையைப பறறி பிராஙளின அபபோதே தீாகக தரிசனம கூறினாா எனபதை நீஙகள காணலாம ஆனால அவா ஜோசியம கூறி எதிாபாாததபடி யுததததின தீமையைத தேசஙகள உணாநது தஙகளுககுளளே சமாதானமாக முடிய விலலை எனபது துரதிஷடமேயாகும !

இதர விஷயஙகளைப பறறிய ஆராயச்சியில அவா அதி தீவிரமாக மூழகியிராத சமயஙகளில அவா சஙகீதம கேடகவும

ஆசைப்படுவார் முன்னொரு காலத்தில் மிகப் பிரபலமாக விளங்கிய ஒரு வாத்தியக் கருவியை அவர்தாம் புதிதாகக் கண்டு பிடித்தார் என்று கேள்விப்பட்டாலும் நீங்கள் ஆச்சரியப்பட மாட்டீர்கள் அது இசை லோலனக் கண்ணாடிகளின் ஓர் அடுக்குள்ள கருவியாகும் ஒவ்வொரு கண்ணாடியையும் நடுவில் ஒரு துவாரத்துடன் ஆழ்ந்த கோளமான உருவில் அடித்து வைத்தார் அவற்றில் அதிக அகலமான கண்ணாடி குறுக்கே ஒன்பது அங்குல அளவும் அதிகச் சிறிய கண்ணாடி மூன்று அங்குல அளவும் உள்ளதாய் இருந்தன

இத்தகைய கண்ணாடிகள் முப்பத்தேழை எடுத்து, அந்தக் கண்ணாடிப் பட்டைகளைத் தேய்த்து அவற்றின் ஸ்வரங்களைச் சரியாக அமைத்தார் பிறகு அந்தக் கண்ணாடிகளை ஓர் இரும்புக் கதிர்மீது ஏற்றினார் அதி அகலமான கண்ணாடிகளை இரும்புக் கதிரின் இருபுற மூலைகளிலும், அதிசிறிய கண்ணாடிகளை மத்தியிலும் வைத்தார் பிறகு நான்கு கால்களையுடைய ஒரு பெட்டிக்குள் அந்த இரும்புக் கதிரானது மட்ட வசமாக வைக்கப் பட்டது வாத்தியம் வாசிப்பவன் அந்த இரும்புக் கதிரின் முன் உட்கார்ந்துகொண்டு, அந்தக் காலத்தில் கதிர் சக்கரத்தில் காணப்படுவது போன்ற ஒரு கைப்பிடி மூலம் இரும்புக் கதிரைச் சுற்றிக்கொண்டே, நகரும் கண்ணாடிகளின் முனைகளைத் தன் விரல்களால் தொடுவான்

பிராங்ளின் அந்த இசைக் கருவியைப் பற்றிக் கூறியதாவது: “இந்தப் புதிய இசைக் கருவியின் நன்மைகள் என்னவென்றால், இதன் ஸ்தாயிகளை வேறெந்த இசைக் கருவியையும் விட, விரல்களை மிருதுவாகவோ பலமாகவோ அமுக்குவதின் மூலம் இஷ்டப்படி யெல்லாம் கூட்டிக் குறைக்கலாம் இந்தக் கருவியில் ஒரு முறை நன்றாக ஸ்ருதி கூட்டி வைத்தால், மறுபடி ஸ்ருதி கூட்ட வேண்டிய தேவையே இல்லை!”

பிராங்ளின் அந்தப் புதிய இசைக் கருவிக்கு ‘ஆர்மோனிகா’ என்று பெயரிட்டார் அது காலக்கிரமத்தில் ஹார்மோனிகா என்று வழங்கப்பட்டது அது அந்தக் காலத்தில் மிகப் பிரபலமடைந்து மகா மகா வித்வான்களெல்லாம் அதில் சங்கீதக் கச்சேரிகள் வழங்கினார்கள் மோஸார்ட், பீத்தோவன், என்ற இரு பிரபல சங்கீத வித்வான்களுமே பிராங்ளின் இசைக் கருவிக்காக இசை மெட்டுகள் கட்டிக் கொடுத்தார்கள் மற்றும் பல வாத்தியங் களைப் போலவே ஹார்மோனிகா வாத்தியத்தையும் பிராங்ளின் அழகாக வாசிப்பார் அவரும் அவருடைய மகள் சாலியும் ஜோடி இசை பாடி அடிக்கடி களிப்பேருவகை அடைவார்கள். ஹார்ப்ஸி கார்டு என்னும் இன்னொரு வாத்தியத்தை வாசித்துக் கொண்டே சாலி பாடுவாள் பெஞ்சமின் ஹார்மோனிகா வாத்தியத்தை வாசிப்பார்

மின்சாரத்தைப் பற்றி பெஞ்சமின் முதன் முதலாக 1746-ம் வருஷந்தான் கேள்விப்பட்டார். அப்போது அவர் போஸ்டன் நகருக்கு விஜயம் செய்திருந்த சமயம். அங்கே டாக்டர் ஸ்பென்ஸ் என்பவரைச் சந்தித்தார். அவர் அப்போதுதான் ஸ்காட்லாந்து தேசத்திலிருந்து பரிசோதனைகள் நடத்த சில கருவிகளுடன் வந்திருந்தார். பெஞ்சமின் வீடு திரும்பியதும் மின்சாரத்தைப் பற்றித் தாமே பரிசோதனைகள் நடத்தத் தொடங்கும் அளவிற்கு அது பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்டுவிட்டார். டாக்டர் ஸ்பென்ஸ் என்பவர் பிலடெல்பியா பட்டினத்திற்கு வந்து சேர்ந்தபோது அவருடைய ஆராய்ச்சி உபகரணக் கருவிகளைப் பெஞ்சமினே விலைக்கு வாங்கிக்கொண்டார்.

இந்தப் பூலோகத்தில் மின்சாரம் என்ற அதிசயமான புதிய விஷயத்தைச் சுற்றிலும் எழுந்த பரபரப்பை இப்போது கற்பனை செய்து பார்ப்பதுகூடச் சிரமம். பெஞ்சமின் அதைத் தவிர வேறெதைப் பற்றியும் சிந்திக்கக்கூட முடியாத அளவிற்கு அதன் கவர்ச்சிக்கு ஆளாகிவிட்டார். வீட்டிலுள்ள சாமான்களின் துண்டு துணுக்குகளை வைத்துக்கொண்டு — ஓர் உப்பு உறை, ஓர் காடிக் குப்பி, ஒரு துப்புக் குழாய் கைப்பிடி, ஒரு புஸ்தகப் பைண்டிங்கிலிருந்து எடுத்த தங்கம், இவற்றை வைத்துக்கொண்டு — தம் முதல் பரிசோதனைகள் நடத்துவதிலேயே தம் நேரத்தின் பெரும் பகுதியையும் செலவிட்டார். மின்சாரப் பொறிகளைப் பிடித்து அடைப்பதற்காக அவர் தாமாகவே சின்னஞ்சிறு யந்திரங்கள் செய்து, தம் நண்பர்களுக்கு அவற்றை முடுக்கி வேடிக்கை காட்டினார். உடனே அந்த அதிசயத்தை வெறித்துப் பார்க்க ஜனங்களெல்லாம் அவர் வீட்டிற்கு விரைந்து வந்து கும்பல் கூடினார்கள். பெஞ்சமினுக்கோ வேறெதற்குமே அவகாசம் இல்லை.

உள்ளூரைச் சேர்ந்த கண்ணாடி உருவாக்குகிற ஒரு தொழிலாளி, டாக்டர் ஸ்பென்ஸ் என்பவரின் மின்சார உபகரணங்களுக்கு நகலும் தயாரித்து விட்டார். உடனே பெஞ்சமின் நண்பர்களில் பலர் தங்கள் தங்கள் வீடுகளிலே பரிசோதனைகள் செய்யத் தொடங்கிவிட்டார்கள். இது ஸ்ரீமதி பெஞ்சமினுக்கு ஒரு நிவாரணமாயிருந்திருக்கும். ஏனெனில் வீட்டில் வந்து அடையும் கும்பலின் பாரம் கொஞ்சம் குறைந்ததல்லவா?

பெஞ்சமினே, ஒரே வருஷத்திற்குள் அதிக முக்கியமான இரு பேருண்மைகளைக் கண்டு பிடித்துவிட்டார் — அதாவது, மின்சாரம் என்பது தனியான ஒரு திரவப் பதார்த்தம் என்று அவர் கருதியது ஒன்று, மின்சார ஓட்டமானது 'நெகட்டிவ்' 'பாசிட்டிவ்' என்னும் இரு தன்மைகளை உடையது என்று

அவர் கண்டுபிடித்தது மற்றொன்றும் மின்சார மின்னல் மின் பகுதிகளை உள்ளிழுக்கவும் எரியவும் கூடாமையான பொருள்களுக்குள்ள சக்தியைப் பற்றியும் அவர் அடிக்கடி பேசி வந்தார். இதுதான் புகழ்பெற்ற இடிதாங்கித் தடியின் ஆதித் துவக்கமாகும்.

அவர் தம் ஆராய்ச்சிகளிடையே பல தவறுகளும் செய்தார் என்பது உண்மைதான். ஆனால் அவற்றையெல்லாம் அவர் தாராளமாக ஒப்புக்கொள்ளவே செய்தார். அவருடைய பரிசோதனைகளெல்லாம் ரசாயனச் சாலைகளில் நடத்தப்பட்டவை அல்ல. அவருடைய வீட்டின் சாதாரணமான பொதுக் கூடத்திலே நடத்தப்பட்டன. மேலும் அவர் ஆராய்ச்சி வேலை செய்வதற்கு அனேகமாக அவருக்கு ஒன்றும் கிடைக்காது. ஜன்னல் கண்ணாடியிலிருந்து எடுத்த பதினொரு கண்ணாடிப் பட்டைகள், மெல்லிய ரயக்கட்டுகள் சில, கொஞ்சம் பட்டு நூல்கள், ரயக்கம்பி, இவற்றை வைத்துக்கொண்டே சரித்திரத்திலேயே முதலாவது மின்சார பாட்டரியை உற்பத்தி செய்து விட்டார் பெஞ்சமின். புதிதாகக் கண்டுபிடித்த இது எவ்வளவு இன்றியமையாத சாதனமாக மாறும் என்று அவர் யூகித்தறிவதற்குக்கூட வழியில்லாத காலம் அது.

மின்சாரம் சம்பந்தமாக அவரை அதிகம் தொல்லைப் படுத்திய ஒரு விஷயம் என்னவென்றால், மின்சாரத்தை எந்த விதத்திலாவது ஜனங்களுக்கு உபயோகப்படியாகச் செய்ய ஒரு வழியும் கண்டுபிடிக்க முடியவில்லையே என்ற கவலையே. யாரும் அது என்னவோ வேடிக்கை பார்ப்பவர்களுக்கு இடை வெட்டுக் காட்சி போன்ற ரகமாக விளங்குவதற்குப் பதிலாக, மனித ஜாதிக்கு ஏதாவதொரு வகையில் மின்சாரம் பயன்பட வேண்டும் என்ற உணர்ச்சி பெஞ்சமினுக்கு உண்டாயிற்று. பெஞ்சமின் மட்டும் தம் மின்சாரப் பரிசோதனைகளைத் தொடர்ந்து நடத்தியிராமல் இருந்திருப்பாரேயானால், இப்போது நமக்கு நூறுயிரம் வகைகளில் தொண்டுபுரிகிறதே மின்சாரம், அந்த மின்சாரத்தையே இப்போது உபயோகித்துக் கொண்டிருக்க மாட்டோம்!

அந்த ஆதி வருஷங்களிலே மின்சாரம் என்பது அனேகமாக ஒரு புதிய வேடிக்கை விளையாட்டைப் போல ஒரு பிரதாகத் தானிருந்தது. அதன் சக்திகளை யாரும் உணரவே இல்லை. பெஞ்சமின்கூட உணரவில்லை. அதன் அபாயங்களை அறியாமலே, அதை வைத்துக்கொண்டு பெஞ்சமினும் அவரது நண்பர்களும் வேடிக்கை காட்டினார்கள். கோடை காலத்தில் மட்டும் அவர்கள் மின்சார வேடிக்கையைப் பொருட்படுத்துவதில்லை. ஏனெனில் அப்போது அவர்கள் செய்வதற்கு வேறு பல

விஷயஙகளிருககும உஷண பருவம வநதவுடனே, கடைசியாக ஒரு மினசார உலலாசப பிரயாணம நடததிவிடடு, தஙகள பரிசோதனைகளை அநதப பருவம வரை நிறுததிககொளளத தீரமானிததாரகள

ஷூலகில எனனும நதியின கரையிலே ஓரிடததை அவரகள தேரநதெடுததாரகள அஙகே தஙகள ஆராயசசிக கருவிகளை அமைதது அவரகள மினசாரப பொறியினால வானகோழி ஒனறைக கொனறு மினசாரக குபபியில உணடாககபபடும நெருபபிலே மினசாரத தடடில அதை வாடடுவதெனறு திடடமிடடிருநதாரகள பெஞசமின அநதப பரிசோதனைக காடசியை நடததிககொணடிருநதார வானகோழியை மினசாரப பொறியினால கொலலபபோகும சமயததில, தாம எனன செயகிறோம எனபதிலே கணணும கருததுமாயிருககத தவறிவிடடார ஏனெனில அபபோது அஙகிருநத எலலோரும பேசிககொணடும சிரிததுககொணடும இருநதாரகள

திடீரெனறு துபபாககி வேடடுபபோல ஒரு சபதம கேடடது பயஙகரமான நெருபபுப பொறி தெறிததது அதன அதிரசசி முழுதும பெஞசமினின உடல வழியாகப பாயநதேறியது நலல வேளையாக, அநத மினசாரப பொறி ஒரு வான கோழியைக கொலலுவதறகுப போதுமான சகதியுளளதாக இருநதாலும, மனிதனைக கொலலககூடிய அளவு சகதி அதறகு இலலை! உசசநதலையிலிருநது உளளஙகாலவரை பலமான ஒருபெரும அடி விழுநதவரைப போல பெஞசமின பிரகஞை தடுமாறி கீழே தளளபபடடார மினசாரததை இயககும சஙகிலியை அவர கை பிடிததுககொணடிருநததாலே, அநதக கை நிறம மாறி வெளுதது உணரசசியறறு மர மரததுப போயவிடடது அனறைககு இரவு முழுதும அவர உடல பூராவுமே மரததுபோல இருநதது அமமாதிரி மினசாரம பாயநது அதறகுப பலியாகும படியான நிலையை அவர சமீபிததது அநத ஒரே தடவைதான

மினனலும மினசாரமும ஒரே மாதிரியானவையே எனறு பெஞசமின சஙகையுறறதறகு பனனிரெணடு விதமான காரணஙகளும இருநதன! மினனலும மினசாரமும—இரணடுமே வெளிசசம கொடுததன இரணடுககும ஒரே மாதிரியான நிறம. நேராகச செலலாமல இரணடும கோணல கோணலாகவே பாயநதன இரணடும வெகு வேகமாக இயஙகுபவை இரணடும உலோகஙகளின மூலம ஊடுருவிப பாய வைககககூடியவை. வெடிககுமபோது இரண்டும பெரிய சபததை உணடாககின. தணணீரிலோ, பனிககடடியிலோ இரணடும தஙகககூடியன வாகப புலபபடடன இரணடும பாயுமபோது அவை பாயநது செலலும பொருளகளை ஊடுருவிச சென்றன இரணடும—உயிரப

பிராணிகளைக் கொன்றன, உலோகங்களை உருக்கின, சீக்கிரம் நெருப்புப் பிடித்துக்கொள்ளக் கூடிய பொருள்களைத் தீப்பிடிக்கச் செய்தன, கந்தக வாசனையை உண்டாக்கின.

இருந்தாலும் அவை இரண்டும் ஒன்றுதான் என்று நிரூபிக்கத் தகுந்த தம்மிடம் போதிய ஆதாரங்கள் இல்லையென்று பெஞ்சமின் கருதினார். கூரிய முனைகளால் மின்சாரம் ஈர்க்கப்படுகிறது. மின்னலும் அதே போலக் கூரிய முனையால் ஈர்க்கப்படுகிறதா என்று கண்டுபிடித்துவிட வேண்டுமென்று அவர் தீர்மானித்தார். இது பற்றி அநேக கட்டுரைகள் எழுதினார். அவற்றில் பல கட்டுரைகளில், கட்டிடங்களுக்கு உயர்ந்த கூரிய முனையுடைய சிகரங்கள் தேவை என்பதையும், அந்தச் சிகரங்களைப் பூமியுடன் தொடர்பு படுத்தும் அடிக் கம்பிகள் அவசியம் என்பதையும் விளக்கி எடுத்துக் கூறினார். இந்த நம்பிக்கையின் விளைவே, முடிவில் அவர் இடிதாங்கியைக் கண்டுபிடிப்பதற்குக் காரணமாக இருந்தது. ஆனால் இந்த வழியிலே சிந்தனையைச் செலுத்தும் புதிய ஆராய்ச்சிகளை ஜனங்கள் நடைமுறையில் பின்பற்றுவது என்பது தம் வீட்டு முற்றத்தில் பரிசோதனைகள் நடத்திக் காட்டுவதைவிட அதிகச் சிரமமான காரியமாக இருந்தது. ஆதலால் அவர் சொன்னவைகளில் ஜனங்கள் அதிக அக்கறை காட்டவில்லை.

மின்னல் என்பது மின்சாரமேயாகும் என்பதை நிரூபிக்க மின்னலொன்றையே மேகத்திலிருந்து கீழே இழுத்துக்கொண்டு வந்து காட்ட வேண்டுமென்று பெஞ்சமின் நினைத்தார். ஆனால் இதை எவ்விதம் நடத்துவது என்று அவர் தீவிரமாக ஆலோசிக்கத் தொடங்கினார். எவ்விதமாகவோ ஏதோ ஒரு வழியில் ஆகாயத்திலே உயரமாகக் கூரிய முனை ஒன்றை அவர் செலுத்த வேண்டும்—ஒரு வேளை மாதா கோவிலின் கோபுர உச்சியின் மீது அந்தக் கூரிய முனையை நிறுத்திவைக்கலாம். ஆனால் அதன் பின்னர் அதைவிடச் சுலபமான முறை ஒன்றைப் பற்றி எண்ணமிட்டார். அதாவது காற்றாடி ஒன்றை ஆகாயத்திலே பறக்க விடுவதென்று முடிவு செய்தார்.

இந்த மாபெரும் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த சம்பவம் நடந்த தேதியோ நேரமோ யாருக்கும் தெரியாது. பெஞ்சமினும் தம்முடைய கட்டுரைகள் எதிலும் இது பற்றிக் குறிப்பிட்டதும் கிடையாது. வசந்த காலத்தில் காற்றும் புயலும் கலந்து வீசிய ஒருநாள் பிற்பகலாகத்தான் அது இருந்திருக்கும். பெஞ்சமினும், அவருடைய மகன் வில்லியமும்-வில்லியமுக்கு அப்போது இருபத்தோரு வயதுதானிருக்கும் (பெரும்பாலான சித்திரங்களில் காணப்படுவது போல அவர் அப்போது சிறுவரில்லை) இருவரும் கையில் காற்றாடியை எடுத்துக்கொண்டு வயற் காடுகளைத் தாண்டிச்

சென்றார்கள். இருண்ட வானத்தின் கீழே, தொந்திரவு ஏற்படாத இடத்திலே, ஜனங்கள் விசித்திரமாகப் பார்க்கும் வழிகளுக்கு எட்டாத தூரத்திற்கு, அவர்கள் காற்றாடி பறக்கவிடச் சென்று விட்டார்கள். இருவருமே காற்றாடி பறக்கவிடும் பருவத்தைத் தாண்டியவர்கள். ஆகவே யார் கண்ணிலும் படாமல் காற்றாடிக்கும் தீங்கு ஏதும் நேராமல் அவர்கள் மறைந்து செல்ல வேண்டியதாயிற்று. பரிசோதனையும் மிக இரகசியமாகவே நடத்தப்பட்டது. அசட்டுத்தனமான எதையும் கண்டு ஜனங்கள் நையாண்டி செய்யக்கூடியவர்களாயிற்றே என்று பெஞ்சமின் அஞ்சினார். அந்தக் காற்றாடியானது—தேவதாரு மரத்துக் குச்சிகள் இரண்டைக் குறுக்காக வைத்துக் கட்டி அதன் மீது ஒரு பட்டுக் கைக்குட்டையைப் போட்டு இறுக்கமாக விரித்து முடியப்பட்டிருந்தது. அந்தக் காற்றாடிக்கு ஒரு வால், வளையம், ஒரு நூல்பந்து ஆகியவையும் பொருத்தப்பட்டிருந்தன. இரண்டு குறுக்குக் குச்சிகளில் மேல் நோக்கி நேராக நின்ற குச்சியின் மேல் முனையில் கூரிய முனையுடைய கம்பி ஒன்றும் இணைக்கப்பட்டிருந்தது. குறுக்குச் சட்டத்திற்கு மேலே அந்தக் கம்பி ஓர் அடி உயரம் எழும்பி நின்றது. காற்றாடியைக் கட்டி அதைப் பிடித்துக் கொண்டிருக்கும் நூலின் ஒரு முனையில் உலோகச் சாவி யொன்றையும் பட்டு ரிப்பன் மூலம் இணைத்திருந்தார் பெஞ்சமின். பெஞ்சமின் ஆகாயத்தை நோக்கி நிமிர்ந்து, இடிகளை முழக்கிப் பயமுறுத்தும் கருமேகங்களை உற்றுப் பார்த்த வண்ணம், காற்றாடியைத் தம் மகன் வில்லியத்திடம் கொடுத்தார். "காற்றாடியின் நூலைப் பிடித்துக்கொண்டு புல் தரை மீது ஓடு, மகனே, இந்த விசித்திரமான கருவியைக் காற்றிலே பறக்க விடுவோம்!" என்றார்.

ஒரே ஓட்டமாகத் தாவிக் கிளம்பினான் வில்லியம். சீக்கிரத்திலே பட்டுக் காற்றாடியானது இருண்ட மேகங்களை நோக்கிப் பறக்கத் தொடங்கிவிட்டது. இடிகளை முழக்கும் கருமேகங்கள் பலவற்றினிடையே அவர்கள் அதைப் பறக்கவிட்டுப் பார்த்தார்கள். ஆனாலும் ஒன்றும் நடைபெறவில்லை. பெஞ்சமினுக்குப் பெருத்த ஏமாற்றமாகப் போய்விட்டது. தூற்றலில் நனைந்தது தான் மிச்சம். வீட்டுக்குப் போய் வேறு காய்ந்த உடைகளையாவது அணிந்துகொள்ளலாமென்று நினைத்து, காற்றாடியை இறக்கி விடுவதற்காக நூல் கண்டைச் சுற்றவிருந்தார்.

திடீரென்று அவரது கையில் பிடித்துக்கொண்டிருந்த நூலின் பிசிறுகள் மிரண்ட நாய்க்கு மயிர்க் கூச்செடுத்து முதுகில் குத்திட்டு நிற்கும் ரோமங்களைப் போல விறைத்து நிமிர்ந்து நிற்கத் தொடங்குவதைப் பெஞ்சமின் உணர்ந்தார்.

"இங்கே பார்" என்று வில்லியத்தை நோக்கிப் பெஞ்சமின், "இது வேலை செய்யத் தொடங்குகிறது!" என்று கூவினார்.

அதே சமயம் அவரது கையில் பிடித்திருந்த சாவியிலிருந்து 'கிலு கிலு' வென்ற மின்சார அதிர்ச்சி ஒன்று அவரது உள்ளங் கையில் கிச்சுக் கிச்சு மூட்டியது அப்படிப்பட்ட சமயத்தில் ஒருவருக்கு ஏற்படும் உணர்ச்சி வேகங்களை யாரால்தான் வர்ணிக்க முடியும்? வெற்றியின் பெருமிதம், பிரமிப்பு, ஆச்சரியம், பயப்பிராந்தி முதலான உணர்ச்சிகளெல்லாம் பெஞ்சமினுக்கு ஏற்பட்டிருக்கலாம் ஆனால் அதை நாம் அறிவதற்கு வழி ஏதுமில்லை அவர் சாதித்த சாதனைகள் அனைத்திலுமே இதுதான் சிறப்பான சிகரத்தை எட்டிவிட்டதெனலாம்

மழை பெய்யத் தொடங்கியவுடன், நூல் நனைந்துவிடவே, மின்னலின் மின்சாரம் தடையில்லாமல் சாவியின் மூலம் பாயத் தொடங்கியது பெஞ்சமினுக்கு எப்பவும் காரியத்திலேயே கண் பரிசோதனைகளுக்குத் தேவைப்படலாம் என்று நினைத்துக் கையோடு செய்துகொண்டு வந்திருந்த கண்ணாடிப் புட்டியை எடுத்து உடனே மின்சாரப் பொறிகளை அதற்குள் பிடித்து அடைத்து விடுவதில் முனைந்தார்

மின்சாரத்தின் சரித்திரத்திலே இது மாபெரும் முக்கியத் துவம் வாய்ந்த ஒரு சம்பவமாகும் பெஞ்சமினே அளவற்ற ஆச்சரியத்திலே மூழ்கிப்போயிருக்க வேண்டும் ஏனெனில், இதைப் பற்றி அவர் அதிகமாக ஒன்றும் சொன்னதே இல்லை அவர் மற்றபடி எதேதோ விஷயங்களைப் பற்றியெல்லாம் எவ்வளவோ பேசியிருக்கிறார் ஆனால் இதை அவர் கண்டு பிடித்ததின் விவரங்கள் வெகு வருஷங்கள்வரை வெளி வரவே இல்லை!

அவருடைய பரிசோதனை விவரம் வெளியே தெரிந்த வுடனேயே ஹார்வார்டு, ஏல் பல்கலைக்கழகங்களும் வில்லியம் மேரி கல்லூரிகளும் பெஞ்சமினுக்குக் கௌரவப் பட்டங்களை அளித்தன

அடுத்தது என்ன நடக்குமென்பது யாருக்குத்தான் தெரியும்! அழுக்குக் கவர்ச்சி என்று நீங்கள் சொல்வீர்களே, அந்த அழகிய தோற்றம் உடையவரல்ல பிராங்ளின். வார்ப்படமிடாத அப்பட்டமான, காடுகள் நிறைந்த, ஏழை நாட்டின் பிரதிநிதியான அவர், குவேக்கர் சமயவாதிகளைப் போலவே பழுப்பு நிற கோட் ஒன்றை அணிந்திருந்தார். கப்பல் பிரயாணத்தின்போது, கடற் காற்றுகளிலிருந்து தம்முடைய வழுக்கைத் தலையைக் காப்பாற்றுவதற்காக அவர் பழையதொரு கம்பளித் தொப்பியை அணிந்துவரும் வழக்கம் ஏற்பட்டிருந்தது. அந்தத் தொப்பி சற்று பெரிதாகவும் இருந்தது. அதனால் அந்தத் தொப்பி அவரது முன் நெற்றிவரை, அநேகமாக அவருடைய மூக்குக் கண்ணாடி வரை கூட விழுந்து தொங்கிக்கொண்டிருந்தது.

மற்றொரு விஷயம் மூக்குக் கண்ணாடி அணிந்து கொள்ளாமல் அவர் எதையும் சரியாகப் பார்க்க முடியாது. எதையும் சரியாகப் பார்க்காமல் விட்டுவிடவும் அவரால் பொறுக்க முடியாது. ஆகவே அவர் எந்த நேரமும் மூக்குக் கண்ணாடியை அணிந்துகொண்டேயிருந்தார். பொது இடங்களில் மூக்குக் கண்ணாடி அணிவது என்பது பதினெட்டாம் நூற்றாண்டிலே ஒரு புதுமை, சம்பிரதாய விரோதம்! மக்கள் வெளியே அரைக் குருடாய்த் திண்டாடினாலும் திண்டாடுவார்களே தவிர, வீட்டுக்கு வெளியே பிறர் காணக் கண்ணாடி அணிந்திருக்க மாட்டார்கள்!

அவருடைய கம்பளித் தொப்பியின் அடியிலிருந்து பெஞ்சமினுடைய சொற்பமான, நரைத்துச் சாயம் பூசாத தலைமயிர் எட்டிப் பார்க்கும். கனவான்கள் வழக்கமாக அணிந்து கொள்ளும் கத்திக்குப் பதிலாக அவர் சாதாரணக் கைத்தடி ஒன்றையே எடுத்துச் சென்றார். இவ்விதம் ஆயுதமில்லாமல் அந்தப் பெரிய மனிதர் பிரயாணம் செய்வதைப் பிரெஞ்சுப் பத்திரிகைகள் பெரிய விஷயமாகப் பிரமாதப்படுத்தின. பவுடரும், வாசனைத் தைலங்களும் பூசி, பட்டுக் காலுறைகளுடனும் பின்னல் வேலைப்பாடமைந்த கோட்டுகளுடனும், அலங்காரமான கைக்குடைகளுடனும் பிரமுகர்கள் சஞ்சரித்த அந்த யுகத்திலே உண்மையிலேயே ஓர் அதிசயப் பாத்திரமாகத் தான் விளங்கினார்!

பிரயாணம் அதன் முடிவுக் கட்டத்தை நெருங்கி, வளைந்து வளைந்து கோணலாகச் செல்லும் பழைய பாரீஸ் பட்டினத்துக் குறுகிய வீதிகளிலே கோச் வண்டி ஓடியபோது, வரவேற்பு அதன் உச்சிக் கட்டத்தை அடைந்து பூத்துக் குலுங்கியது. ஒவ்வொரு கடை ஜன்னல்களிலும் டாக்டர் பிராங்ளின் உருவப் படங்கள் அலங்காரமாகத் தொங்கவிடப்பட்டிருந்தன. விரைவிலே பெஞ்சமினின் களங்கமற்ற முகம் நகரிலுள்ள

ஒவ்வொரு வீட்டின் கண்பப்பறைப் பலகையிலும், விழிக்கத் தொடங்கியது. பணக்காரன், ஏழை, புகழுடையவன், இகழுடையவன், வயதானவன், சிறுவன் என்று வித்தியாசமில்லாமல் பாரீஸ் நகர ஜனங்களனைவரும் பெஞ்சமினைத் தங்கள் உற்சாகமான உள்ளங்களிலே ஏற்றுக்கொண்டு விட்டனர்.

அவர் ஒரு ஹோட்டலுக்குச் சென்று தங்கினார். ஆனால் ஒவ்வொரு முறையும் அவர் வீதியில் தோன்றிவிட்டால் போதும், போக்குவரத்து தடைப்பட்டு விடும். அவரைச் சுற்றி ஜனங்கள் சூழ்ந்து கொள்வார்கள். அவருடைய கோட்டின் துணியைப் பிடுங்கி இழுப்பார்கள், அவரைப் பெயரைச் சொல்லி வாழ்த்துவார்கள், கேள்விகள் கேட்பார்கள். அவர் வெளியே வருவதை எதிர்நோக்கி, ஹோட்டல் வாசலில் கும்பல் கூடி நிற்பார்கள். இம்மாதிரியே நடந்து கொண்டிருந்தால் அவரால் ஒரு வேலையுமே செய்ய முடியாதென்பது விரைவில் அவருக்குத் தெளிவாகி விட்டது.

அவருடைய நண்பர்களில் லா ரே டி சௌமான்ட் என்ற பணக்காரப் பிரஞ்சுக்காரர் ஒருவர் இருந்தார். அவர், பெஞ்சமினையும் அவருடைய பேரப் பிள்ளைகளையும், பாரீஸ் நகருக்கு வெளிப்புறத்தில் பாஸி என்ற கிராமத்திலிருந்த தம்முடைய பண்ணைக்கு வந்து விடுமாறு அழைத்தார். அமெரிக்காவிலிருந்து வந்திருக்கும் விருந்தாளிகள் அவரது பண்ணையின் தோட்டத்திலுள்ள சிறிய வீட்டில் சௌகரியமாகத் தங்கலாம்.

ஆகவே மூட்டை முடிச்சுகளுடன் பாஸிக்கிராமத்தை நோக்கி பெஞ்சமின் நகர்ந்து அங்கே தங்கினார். பாரீஸ் நகர வீதிகளிலிருந்து அவர் மறைந்த விஷயமானது அவரை மேலும் மர்மமான மனிதராகத் தோன்றச் செய்து விட்டது. அவரைப் பற்றிய மக்களுக்கு இருந்த ஆச்சரியத்தை அது மேலும் அதிகமான அளவிலே கிளறியும் விட்டது. சீக்கிரத்திலேயே பிரஞ்சு மக்கள் பாஸிக் கிராமம் வரை பிரயாணம் செய்யத் தொடங்கி பெஞ்சமினுக்குக் குறிப்புகளையும் கடிதங்களையும் எழுதித் தோட்டச் சுவருக்கு அப்பால் விட்டெறியலாயினர். இந்தக் கடிதங்களெல்லாம், "தோட்டத்திலுள்ள பிராங்ளின் பிரபுவிற்கு" என்று விலாசமிடப்பட்டிருந்தன. போர் வீரர்கள், தீரபுருஷர்கள், வியாபாரிகள், சுதந்திரத்திற்காகப் போராட விரும்பும் கொந்தளிப்புள்ள இளைஞர்கள், பிரஞ்சுப் பள்ளிக்கூடச் சிறுவர்கள், அவருடன் சகவாசம் ஏற்படுத்திக்கொள்ள ஆசைப்படும் மாதர்கள் ஆகியோரிடமிருந்து வந்தவையே அந்தக் கடிதங்கள். கடிதங்களை எழுதுவதோடு திருப்தியடைந்து விடாமல் அவர்கள், தோட்டச் சுவரின் மீது ஏறி உள்ளே குதித்து, வீட்டை முற்றுகையிடவும் தொடங்கி விட்டார்கள். எல்லோரிடமும் கருத்துச் செலுத்தக் கூடிய பிராங்

ளின், தம்மைப் பார்க்க விரும்பும் எல்லோரையும் பார்க்கும் வழக்கத்தை மேற்கொண்டு விட்டார். இது அவருடைய வேலை களைப் பெரிதும் பாதித்து, வேலையைப் பின் தங்கும்படி செய்து விட்டது.

அவ்வளவு தூரம் பெஞ்சமினைப் பிரசித்தி பெறச் செய்யும் படியாக அவரிடம் என்ன இருந்தது என்பதைச் சொல்லுவது கடினமாகும். அவர் மிகவும் சகஜமான போக்குள்ளவர். அவர் ஓர் விஞ்ஞானி எனப் பிரசித்தி பெற்றிருந்தாலும், அவரைவிட நன்குப் படிக்கும் சந்தர்ப்பங்களைப் பெற்று அறிவாளிகளாக விஞ்ஞானத்தைப் பற்றி அதிகம் அறிந்து கொண்டிருந்தவர்கள் அநேகம் பேர் இருந்தனர். இந்தச் சமயத்தில் பெஞ்சமின் படிப் பதைக் காட்டிலும் அதிகம் எழுதி வந்தார். ஆகவே, அவர் அவ் வப்போது வெளிவந்த புத்தகங்களைப்பற்றி அவ்வளவு சுலபமாகப் பேச முடிவதில்லை. ஆனால் அவர் நேர்மையானவர். பேசும் போது அவர் ஒரு போதும் பொய்யாகவோ அப்பட்டமாகவோ எதையும் சொல்லுவதில்லை. "அது இதைப்போல இருக்கு மென்று நினைக்கிறேன்" என்றோ, அல்லது "இந்த விதமாகத் தான் அது இருக்குமோ வென்று நான் அபிப்பிராயப்படுகிறேன்" என்றோதான் சொல்லுவார். புத்தகங்களைவிட மக்களைத்தான் அவர் நன்கு அறிந்திருந்தார். மிருதுவான பணிவுள்ள அவ ருடைய குரலை எல்லோரும் விரும்பிக் கேட்கலாயினர்.

பெஞ்சமினுடன் நன்குப் பழகி அவரை அறிந்து கொண்ட பிரெஞ்சு மக்களிலே பலர், பிரான்ஸ் பகிரங்கமாக அமெரிக்கக் குடியேற்ற நாடுகளுடன் சேர்ந்து கொண்டு இங்கிலாந்துடன் சண்டையிட வேண்டுமென்று விரும்பினார்கள். ஆனால் பிரெஞ்சு அரசாங்கமோ அவ்வளவு தூரம் சண்டையில் இறங்கமுடியாத நிலையில் இருந்தது.

பாரீஸ் நகரில் ஸீலாஸ் டீன் மற்றும் ஆர்தர் லீ என்னும் இருவ ருடனும் கூடி பெஞ்சமின் அமெரிக்கக் குடியேற்ற நாடுகளுக்காக வேலை செய்தார். பிரெஞ்சுத் தலை நகருக்கு வந்து சேர்ந்ததும், அவர்கள் மூவருக்கும் பிரெஞ்சின் அயல் நாட்டு மந்திரியும் வெர ஜினஸ் பிரபுவுமான சார்லஸ் கிரேவியரின் பேட்டி கிடைத்தது.

பிரான்ஸ் நடு நிலைமை வகிக்கத்தான் வேண்டுமென்று மந்திரி அவர்களிடம் சொன்னார். ஆயினும் பெஞ்சமினிடம் அவரது அமெரிக்க இலட்சியத்தில் தமக்கு அனுதாபம் இருப்பதாகவும், தமக்கு எப்போது முடிகிறதோ அப்போது உதவுவதாகவும் அந்தப் பிரெஞ்சு மந்திரி தெரிவித்தார்.

ஒருநாள் பெஞ்சமின் அவரோடு பேசிக்கொண்டிருக்கும் போது, "பிரபுவே! அரசாங்கப்படை வீட்டிலிருந்து பல பீரங்கிகளை

எடுத்துச் சென்று இரகசியமாகக் கப்பல்களில் ஏற்றுகிறார்கள்" என்று கூறினார்

"நிஜமாகவா? அந்தக் கப்பல்கள் எங்கே போகின்றன வாம்?" என்று கேட்டார் மந்திரி

"யாருக்கும் தெரியாது போலிருக்கிறது!" என்றார் பெஞ்சமின்

"அப்படியா, நல்லது! இதைப்பற்றி நானும் எதுவும் கேள்விப் படவில்லை" என்றார் மந்திரி

"நானும் எதுவும் சொல்லவில்லை" என்றார் பெஞ்சமின்

"இந்தக் கப்பல்கள் என் கண்ணெதிரே கடத்திச் செல்லப்பட வேண்டியிருந்தால் நான் மறுபுறம் திரும்பிப் பார்த்துக் கொண்டிருப்பேன்!" என்றார் மந்திரி இந்தவிதமாகத் தந்திர மான முறையிலே பெஞ்சமின், வாஷிங்டன் இராணுவத்திற்குத் தேவையான பீரங்கிகள், மருந்து, உணவுப் பண்டங்கள் ஆகிய வற்றை எல்லாம் பெற்று விட்டார் இந்தத் தளவாடங்கள் இல்லா திருந்தால் அமெரிக்கச் சுதந்திரப் போராட்ட ராணுவம் உயிர் தரித்திருக்க முடியாமல் போயிருக்கலாம் மந்திரி வெர்ஜீனஸ்டம் பெஞ்சமின் கொண்டிருந்த நட்பானது வார்ஸேல்ஸில் பிரெஞ்சு மன்னரும் மகாராணியும் வசித்து வந்த அழகிய அரண்மனைக்கு அவரை அடிக்கடி அழைத்துச் சென்றது அங்கேதான் அவர் பிரெஞ்சு மன்னரான பதினாறாம் லூயியையும், மகாராணி மேரி அந்தோனெட்டையும் பேட்டி கண்டார்

முதல் தடவையாகப் பெஞ்சமின், அரசர் பெருமான் திரு முன் சென்றபோது அவருடைய நாட்டு மக்கள் இருபது பேர்கள் அவருடன் சென்றனர் அவர்களில் இரண்டு அல்லது மூன்று பேர்கள் அதிகார உடைகளும் அணிந்திருந்தார்கள் பிராங்ளினோ பழுப்பு சிவப்பு நிற வெல்வெட் அங்கியையும், வெண்பட்டுக் காலுறைகளையும் அணிந்திருந்தார் அவருடைய கையிடுக்கில் ஓர் வெள்ளைத் தொப்பியையும் வைத்துக்கொண்டு நின்றார் நரைத்து நீண்ட தலை மயிர் அவருடைய தோள்பட்டைகள் மீது தொங்கிக் கொண்டிருந்தது அப்போதும் அவர் மூக்குக் கண் ணாடியை மாட்டிக்கொண்டுதானிருந்தார்

பெஞ்சமின் பிரெஞ்சு மன்னரிடம் என்ன சொன்னார் என்ப தைப் பற்றிக் குறிப்பு ஏதும் இல்லை ஆனால் மன்னர் அளித்த பதில் பெஞ்சமினுக்கும் அவருடைய நாட்டுக்கும், காருண்ய முள்ள தாகவே இருந்தது பெஞ்சமினின் நடவடிக்கைகளையும் அரசர் பாராட்டிப் போற்றினார்.

அதுமுதல் ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் பெஞ்சமின் மற்ற எல்லா நாட்டு ராஜதந்திரிகளுடனும் அரச சபைக்குச் சென்று வந்தார். பெஞ்சமினுடைய அந்தஸ்து பட்டம் இன்ன தென்பது நிச்சயமாய்ச் சொல்வதற்கில்லை. பிரெஞ்சுக்காரர்கள் அவரை இராஜாங்கத் தூதர் (Ambassador) என்று அழைத்தனர். ஆனால் அமெரிக்கர்களோ அவரை ஆணையாளர் (Commissioner) என்றே அழைத்தனர்.

லூயி மன்னரைப் பெஞ்சமின் பல தடவைகளில் சந்தித்தார். அவர்கள் இருவருக்கும் நட்பு ஏற்பட்டது. பிராங்ளின் எப்போதும் அரசரைப் பற்றிக் குறிப்பிடும்போதெல்லாம் அன்பு மிகுதியால் 'அந்த இளைஞர்' என்று சொல்வார். லூயி மன்னருக்கு அப்போது இருபதை நிரம்பிய இளமைப் பருவம். சதை பெருத்த உருவம். பெரும் பையனைப்போன்ற தோற்றம். சதா யந்திரங்களைத் தட்டிக்கொட்டிக் கொண்டிருப்பார்—பூட்டுகள், கடிகாரங்கள் போன்ற கருவிகளை நோட்டம் பார்ப்பதிலே பிரியம் உள்ளவர். அதனால் அமெரிக்க விஞ்ஞானியிடத்தில் லூயி மன்னருக்கு ஒரே இன உணர்ச்சி தென்பட்டது.

பிரெஞ்சு அரண்மனையிலும் அரசாங்கத்திலும் தமக்கு ஏற்பட்ட நெருங்கிய நட்பின் மூலம் பெஞ்சமின், அமெரிக்கக் குடியேற்ற நாடுகளுக்கு நாலரை கோடி 'லிவர்' எனும் பிரெஞ்சு நாணயங்களைக் கடனாகப் பெற்றார். இதோடு, அவர் லூயி மன்னரிடமிருந்து தனியாக ஒரு கோடி லிவர் நாணயங்களை நன்கொடையாக பூரண உரிமையுடன் பெற்றார்.

பிரான்ஸ் தேசத்து மன்னர் சார்பாகப் பேசும்போது அயல்நாட்டு விவகார மந்திரி வொர்ஜின்ஸ் பிரபு பின்வருமாறு கூறினார்: "டாக்டர் பிராங்ளினைப் பற்றி நம் அபிப்பிராயம் என்னவென்று யாராவது உன்னைக் கேட்டால், நீ தயக்கமின்றி, 'அவருடைய தேசபக்திக்காக நாம் பெரிதும் கொண்டாடுவது மட்டுமல்லாமல் அவருடைய நடவடிக்கை விவேகத்துக்காகவும் அவரைப் பெரிதும் பாராட்டுகிறோம். பெரும்பாலும் அதையே உத்தேசித்தும், டாக்டர் பிராங்ளினுடைய வாய்மையிலே நாம் கொண்டிருக்கும் நம்பிக்கையினாலுமே, காங்கிரஸின் கட்டளையின் பயனாக அவர் பிரவேசித்திருக்கும் பண சம்பந்தமான நெருக்கடியிலிருந்து அவரை விடுவிக்க நாம் தீர்மானித்துள்ளோம்' என்று சொல்லலாம்!" மேலேயுள்ள சம்பிரதாய வாசகங்களைச் சாதாரணப் பேச்சில் மொழிபெயர்த்துச் சொன்னால் பெஞ்சமின் மட்டும் பிரெஞ்சு நாட்டிற்குப் போகாதிருப்பாரேயாகில் பிரெஞ்சு நாடு ஒருபோதும் அமெரிக்காவிற்குப் பணத்தைக் கொடுத்திருக்காது என்றுதான் அர்த்தமாகும்.

இதைத் தவிர, பிரெஞ்சு அரசாங்கத்தில் எவ்விதமான சம்பந்தமும் இல்லாதிருந்த சாதாரண ஜனங்களில் பலர்கூட பிராங்ளினுடைய கட்சிக்காகப் பணம் கடன் கொடுக்க ஆசைப் பட்டார்கள்!

அவருடைய முக்கிய நண்பர்களில் ஒருத்தியான ஹெல்விடியஸ் அம்மாள் என்ற அதிப் பணக்காரச் சீமாட்டி "என்னுடைய செல்வம் அனைத்தையும் உத்தமரான அந்தப் பிராங்ளினுக்கே கொடுத்துவிடப் போகிறேன்!" என்று சொன்னாள்.

பெஞ்சமின் தம்முடைய வேலைகள் எல்லாவற்றையும் வேறு ஆள் உதவி இல்லாமலே நடத்தி வந்தார். அமெரிக்காவிலிருந்து வந்த உதவியாளர்களுக்கு அவரை ஏன் பிடிக்கவில்லை என்பதைப் புரிந்து கொள்வதும் சுலபமாகும். பெஞ்சமின் ஒரு மாபெரும் இலட்சிய வீரராய் விளங்கினார். ஆனால் அவருடைய உதவியாளரைப் பற்றி யாரும் கேள்விப்பட்டதில்லை. அவர்களுடைய பெயரை யாரும் பிரஸ்தாபிப்பதும் இல்லை. இது அவர்களுக்குத் தாங்கள் முக்கியஸ்தர்கள் அல்ல என்ற உணர்ச்சியை உண்டாக்கியது — இது கௌரவம் பாராட்டுகிற கர்விகளான பேர்வழிகளுக்குப் பிடிக்காத ஒரு விஷயமாகும்!

பெஞ்சமினின் பேரன் வில்லியம், இன்னும் சிறு பையனாக இருந்தாலும், அவருடைய காரியதரிசியாகப் பணியாற்றிவந்தான். ஆனால் இன்னொரு பேரன் பெஞ்சமின் பாச்சியோ மிகவும் சிறு பிள்ளையாதலால் பள்ளிக்கூடம் போவதைத் தவிர வேறு எதுவும் செய்ய முடியவில்லை. பிராங்ளினுக்கு வரும் ஏராளமான கடிதங்களோ, வேறு எவருக்கும் அவற்றைவிட அதிகமாக வருவது அபூர்வமே. அத்தனை கடிதங்களுக்கும் பதிலளித்தாக வேண்டுமென்றும் அவர் உணர்ச்சி வசப்படுத் தவிப்பார். அவரைப் பல ரகமான விருந்துகளுக்கும் கேளிக்கைப் பொழுது போக்குகளுக்கும் வருந்தியழைக்க ஆரம்பித்து விட்டார்கள். அவைகளுக்குச் செல்ல வேண்டும் என்றும் அவர் சிந்திப்பார். ஏனெனில் அமெரிக்காவிற்கு உதவ முன்வரக்கூடிய பேர்வழிகள் எவரையாவது எங்கே எப்போது சந்திப்போம் என்று அவருக்குத் தெரிய வராது! பிரான்ஸ் தேசத்திலுள்ள மாபெரும் சித்திரக்காரர்களெல்லாம் பெஞ்சமினின் திருவுருவத்தை வர்ணம் தீட்ட விரும்பினார்கள். அவர்களில் பலருக்கு உருவப் படம் எழுதுவதற்காகப் பெஞ்சமின் உட்கார்ந்திருக்கவும் செய்தார். பல பல உருவ அமைப்பு முறைகளில், அவர் சாத்தியம் என்றே கருதியிருக்க முடியாத வகைகளிலெல்லாம் அவருடைய உருவச் சிலைகள் வார்த்தெடுக்கப்பட்டன. பெண்களின் புருச்களிலே, கங்கணங்களிலே, கழுத்தில் அணியும் மாலைகளின் பதக்கங்

களிலே, பெட்டிகளின் உச்சிகளிலே, பாத்திரங்களின் பக்க வாட்டங்களிலே, சுவரில தொஙகவிடக்கூடிய சட்டஙகளிலே, வர்ணச சேலைகளிலே, மாாபளவுச சிறபஙகளிலே, அவருடைய திருமுகம தரிசனம தநதது

"எஙகே எநதபபுறம திருமபினுலும அஙகே உஙகளைப் பாாககிறேன, அபபா! அவவிதம அடிககடி உஙகளையே பாாததுக கொளளுவதால உஙகளுககு அலுபபுத தடட விலலையா?" என்று ஒரு சமயம அவருடைய பெண் ஸாலிபாசசி அவரைக கேடடாள அதறகுப பெஞசமின, "அதில ஒரு விசேஷம அடஙகியிருககிறது! அது எனனை நலலவனுககுகிறது!" என்று சொனனா

"இது உஙகளுககு காவததைத அளிததுவிடும!" என்று கிண்டலாக அவள கூறினுள

"இலலை! இது எனனை நனனெறியிலேயே செலுததும்! இனிமேல நான சுலபமாக எநதத தவறுன செயலையும செயய முடியாதபடி ஆககிவிடடது!" எனறுா பெஞசமின

"ஏன்?"

"ஏன் எனறுல, எனனுல ஓடிப்போயவிட முடியாது! என்னுடைய முகம எலலோருககும தெரிநதுவிடடது ஆகவே, போலீசாா எனனை உடனேயே பிடிததுவிடுவாாகள!" என்றுர் தநதை தம மகளிடம

பிரான்ஸின் மாபெரும மனிதாகள அனைவரும அவரைச் சநதிகக விருமபினுாகள பிரெஞசுத தததுவ ஞானியான வாலடோ அவரைத தம வீடடுககு வருமபடி அழைததாா பிராஙளின் தமமுடன் விலலியததையும அழைததுககொண்டு செனறுா அவாகள வருவதையறிநது கோயுற்றுக கிடநத கிழவரான வாலடோ, ஒரு அறையில ஓா மாபெரும நாறகாலியில அரியணை ஏறியபடி சாயநதிருநதாா.

பெஞசமினும அவரது பேரனும அறையை அடைநததும அவாகள பககம திருமபி வாலடோ தலை தாழததி வணஙகினுா பிறகு அவா ஆஙகிலததில, "ஓ சுதநதிரமே! சுவாககப பிரகாசத் துடன் விளஙகும தேவதையே!" எனறு கூறினுா

"இவன என பேரன், விலலியம பிராஙளின்! இவனைத் தாஙகள ஆசீாவாதம செய்வீாகளா?" என்று பணிவாக வேண்டினுா பெஞசமின்

"ஆண்டவனும் சுதந்திரமும்! இதுதான் திருவாளர் பிராங்க்ளினின் பேரனுக்குப் பொருந்தக்கூடிய ஒரே அருள்பதம்!" என்றார் வால்டேர்.

இதைப் பற்றி வால்டேர் எழுதும்போது, அங்கு பிரசன்னமாகியிருந்த அனைவரும் உள்ளம் உருகி அன்புக் கண்ணீர் உகுத்தனர் என்று கூறியிருக்கிறார்.

ஒரு கதை உண்டு. சிறுபிள்ளையான பெஞ்சமின் பாரிசில் பள்ளிக்கூடத்தில் வாசித்து வந்தான். வார முடிவில் விடுமுறைக்காக வீட்டிற்கு அவன் வரும்போது அவனையும் ஒருமுறை அழைத்து வந்து காட்டலாமாவென்று வால்டேரிடம் பெஞ்சமின் கேட்டார்.

"எனக்கு மற்றொரு பேரன் உண்டு. அவனுக்கும் உங்களுடைய ஆசீர்வாதத்தை அளிக்க முடியுமா?" என்று பெஞ்சமின் கேட்டார்.

"ஏன், நிச்சயமாக!" என்று பதிலளித்தார் வால்டேர். பெஞ்சமின் தம் பெயரையே தாங்கிய பேரனை அழைத்து வந்த போது, வால்டேர் அந்தக் குழந்தையைத் தூக்கி முத்தமிட்டார்.

பிறகு, "சுதந்திரமும் சமத்துவமும்!" என்று ஆசீர்வதித்தார்.

இதுதான் பிரெஞ்சுப் புரட்சியின் வெற்றிக் கோஷமாகக் கிளம்பிய "சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்" என்னும் சொல்லமைப்புக்கு மூலாதாரமான துவக்கம் என்றும் நம்மவர்கள் ஆனால் உண்மை யாருக்குத் தெரியும்? இது ஒரு கதைதான்! தம்மிடம் அன்பு காட்டிய நண்பர்களுக்குத் திருப்பி விருந்து விழாக்கள் செலுத்தப் பெஞ்சமினுக்குப் போதிய பணமோ இடவசதியோ கிடையாது. எனினும், உபசார உள்ளம் படைத்த ஆத்மா அவர்! தம்மால் கூடியவரையிலும் நண்பர்களை வரவேற்றுப் புடை சூழவே இருந்தார்.

அவரால் அளிக்கப்படும் கோஷ்டி விருந்துகள் வழக்கமாக அயல் நாட்டுத் தூதுவர்கள், தம் சுதந்திரத்திற்கேற்ப அளிக்கும் விருந்துகளைப் போல் இருப்பதில்லை. இன்று அமெரிக்கக் குடும்பங்களில் நடக்கும் சாதாரணமான விருந்துகளைப் போலவே இருக்கும். ஜனங்கள் சுற்றி உட்காராது பேசிக்கொண்டே இருப்பார்கள்.

பார்க்கப் போனால் உலாவிக் கொண்டே உண்ணும் பல்வகை விருந்து முறையை (Buffet Supper) பெஞ்சமின்தான் கண்டுபிடித்திருப்பார் என்று தோன்றுகிறது. பாஸியிலுள்ள அவருடைய சிறிய வீடு ஏராளமான எண்ணிக்கையுள்ள விருந்தினர்

களைக் கொள்ளக் கூடியதாக இல்லை. ஆனதாலே பிராங்ளின் விருந்துவான வசந்த காலத்திலும் வேனிற்காலத்திலும் அவர் தோட்டத்தில் கற்ற சட்டங்களையோ அல்லது மரக்கால்களையோ நிறுத்தி அவற்றின் மீது பலகைகளைப் பொருத்தி மேஜை விரிப்பால் அதை மூடி வைப்பார். இந்த மேஜைகள் மீது உணவு வகைகள் வைக்கப்பட்டிருக்கும். பிறகு அரசியல் தூதுவர்களின் வட்டாரங்களிலே காணப்படும் சம்பிரதாய மரியாதைகள் சிறிதும் இல்லாத முறையிலே விருந்தினர்கள் தங்களுக்கு வேண்டிய உணவு வகைகளை பலகை மேஜையிலிருந்து தாங்களாகவே எடுத்துக்கொண்டு, அவர் அவர் சௌகரியம் போல பூந் தோட்டங்களில் சுற்றி உட்கார்ந்து கொண்டோ நின்று கொண்டோ சாப்பிடுவார்கள். இதனை ஒரு விசித்திரமான அமெரிக்கப் பழக்கம் என்றே பிரெஞ்சுக்காரர்கள் கருதினார்கள். அந்தக் காலத்திய கடிதங்கள் பலவற்றில் இதைப்பற்றிய குறிப்புகளும் காணப்படுகின்றன.

பிராங்ளின் சம்பிரதாயமான விருந்தொன்றையும் ஒரே ஒரு சமயம் நடத்தியிருக்கிறார். 1778-ம் வருஷம் ஜூலை மாதம் நான்காம் தேதி அவர் அமெரிக்கச் சுதந்திரத்தின் இரண்டாவது பிறந்த தின விழாவை ஐம்பது பிரமுகர்களுக்கு விருந்து வைத்துக் கொண்டாடினார். பிராங்ளினுக்கு உதவியாக வேலை செய்யப் பாரீஸ் மாநகருக்கு அனுப்பப்பட்ட ஜான் ஆடம்ஸ் இந்த விருந்து வைபவத்திலே பிராங்ளினுக்குக் கூட்டாளியாக விருந்து நடத்தினார். அதனால்தான் அது அதிகச் சம்பிரதாய விவகாரமாக இருந்தது. ஜான் ஆடம்ஸ் சம்பிரதாயத்தை முற்றிலும் கடைப்பிடிக்கும் மனிதர், பெஞ்சமின் செய்வதை எல்லாம் அவர் சம்பிரதாய விரோதமாகக் கருதி நிராகரிப்பவர். அவர் ஒரு விருந்து அளிப்பதாக இருந்தால் அது சம்பிரதாயத்திற்குச் சரியாக அமைந்திருக்க வேண்டும்!

இந்தப் பிறந்ததின விருந்து விழாவிற்காகவுள்ள மேஜையானது பூக்களால் மூடப்பட்டிருந்தது. அமெரிக்கக் கொடியும், பிரெஞ்சுச் சுதந்திரத்தின் தொப்பியும் மேஜையின் நடுவில் வைக்கப்பட்டிருந்தன. மேஜை மீதிருந்த பெரிய பூக் கூடையிலிருந்து ஒவ்வொரு விருந்தினருக்கும், 'புனித' வாசகக் கவிதையுடன் கட்டப்பட்ட ஒரு மலர் வழங்கப்பட்டது. விருந்துச் சாப்பாட்டிற்குப் பிறகு, குடியேற்ற மூல நாடுகளான பதின் மூன்றுக்கும், ஒவ்வொரு நாட்டிற்கும் ஒவ்வொன்றாக பதின்மூன்று முறை வாழ்த்துக் கூறி பானம் அருந்தப்பட்டது!

11 நண்பர்

பெஞ்சமின் பிராங்ளின் செய்த மாபெரும் காரியங்கள் அனைத்திலும் அதி முக்கியமான காரியம் அவர் நண்பர்களை உண்டாக்கிக் கொண்டதாகவே இருக்கும்.

ஒருவன நணபாகளை அடைய வேண்டுமென்றால, அதறகு ஒரே வழி, அவனும உண்மையான ஒரு நணபனாக இருபபது தான எனபது தெரிநத விஷயநதானே ! பிராஙளினுககு நூறறுக் கணககான நணபாகள இருநதனா அவாகள வாழககையின் பலதரபபடட நடைமுறைகளிலிருநதும வநதவாகள அவா பிரானஸ தேசததின இரணடு மகாராஜாககளுககு நணபராக இருநதது போலவே பணிவான ஏழைத தொழிலாளிகள பலருககும நணபராக இருநதிருககிறா அநதத தொழிலாளி களின பெயாகளெலலாம இபபோது மறநது போயவிடடன அபபடிபபடடவாகளிடையே கசாபபுக கடைககாராகள, ரொட டிக கடைககாராகள, மெழுகுவததிகள செயபவாகள, கபப லோடடிகள, காசுககடைககாராகள, கவானாகள, பிசசைக காராகள, மகாராணிமாாகள, அடிமைகள ஆகிய பல ரகத தினரும இருநதனா பிலடெலபியா படடினததில அவா தமமுடைய வீடடின முனனால தெருக கூடடும தோடடிக கிழவியுடன எவவளவு சகஜமாகப பழகினாரோ, அவவளவு சகஜமாகவே அவா விஞஞானிகளுடனும, அயலநாடடு ஸதானிகா களுடனும பழகி வநதாா

அவருடைய நீணடகால வாழககையில ஒருமுறைகூட அவருககு மககளிடம உளள அனபு குனறியதிலலை சூரியனைப போலவே அவா அவவளவு தூரம சமதாம ஜனநாயகவாதி அவருடைய அனபு எஙகெஙகும ஊடுருவிப பாயநது பரவியது ஒருவன மூாககமான கொடுமைககாரனாகவோ அலலது அநியாயககாரனாகவோ காடடிககொணடாலனறி வேறு எநத மனிதனையும அவா கீழாகக கருதுவதேயிலலை அவருடைய வாழககையில முதலிருநது கடைசிநாளவரை எபபோதும பிராஙளினுககு நணபாகள அதிகம இருநதிருககிறாாகள

நடபு சமபநதபபடட எலலா விஷயஙகளையும பெஞசமின் பிராஙளின நனறாகப புரிநது கொணடிருநதாா நடபில கொடுப பதும வாஙகுவதும அததியாவசியமாகும பிராஙளின தம நணபாகளுககு எனன தேவைபபடடாலும அவறறை அவா தாராளமாகவே கொடுதது வநதாா — தமமுடைய நேரம, தமமுடைய பணம, தமமுடைய உதவி, தமமுடைய நமபிககை, தமமுடைய அனபு மறறும தமமுடைய வாழவில ஓா பஙகையும அவாகளுககுக கொடுததாா அவாகள தமககு எதை எதைக் கொடுககத தீாமானிககிறாாகளோ அவறறை எலலாம அவா ஏறறுககொணடாா

அவருககு வருததமோ கஷடமோ ஏதேனும ஏறபடடால அவா உடனே நணபன ஒருவனிடம செனறு விடுவாா அமெ ரிககப புரடசிககு முனனதாக, இஙகிலாநதுககுப பெஞசமின்

சென்ற சமாதானத்தூது தோல்வியடைந்தவுடனே அவர் லண்டன் நகரத்தில் தமமுடைய கடைசி நாளைத் தனியாக ஜோசப பிரீஸ்டலி என்ற நணபருடனதான் கழித்தார் தாம தடுக்க முயன்றதையுமமீறி தலையெடுத்து வந்து கொண்டிருந்த யுத்தத்தைப பற்றி அவர் மிகவும கவலைப்பட்டார் குடியேற்ற நாடுகளைப பற்றிய கவலையின் பயமோ அவருக்குப பெரிதாகி விட்டது யுத்தம நீணடகாலம வருஷக் கணக்கில இழுத்துக் கொண்டு போகலாமென்று அவருக்குத் தோன்றியது அதனுடைய முடிவைக் காணுமவரை தாம உயிரோடிருக்க மாட்டோமோ என்ற உணர்ச்சியும அவருக்குத் தட்டியது அவரும பிரீடஸ்லியும நாள முழுவதும பேசிக் கொண்டிருந்தனர் அடிக்கடி கண்ணீரத் துளிகள பிராங்ளினின பார்வையை மறைத்துக் குருடாக்கும அப்போது அறிமுகம இல்லாதவர்கள சில சமயம பிராங்ளினை பராமுகமாக இருக்கிறார் என்று நினைப பார்கள , ஆனால் அதன உணமை அவருடைய நணபர்களுக்குத் தான நன்றாகத் தெரியும !

எத்தனையோ பெரிய பெரிய காரியங்களை அவர் சாதித்திருந் தாலும, பிராங்ளின் தலைப்பு முதல இறுதிவரையில எந்தச் சமயத்திலும, மனித இருதயம படைத்தவராகவே—ஆனந் தத்தையும, கேளிக்கைகளையும, நணபர்கள கூட்டுறவையும, இரசிக்கக் கூடியவராகவே—வாழ்ந்திருக்கிறார் பேசுவதற்கும, படிப்பதற்கும அவர் எவவளவு தூரம ஆசைப்பட்டாரோ, அவவளவு தூரம சதுரங்கம விளையாடுவதையும, செக்கர், கிரிப பேஜ முதலான ஆட்டங்களையும விரும்பினார் பொழுது போக்குச் சங்கமாகக் கூடுவதிலே அவர் ஆனந்தம அனுப வித்தார் நணபர்களை கோஷ்டி கோஷ்டியாகத் திரட்டி அவர்கள் தங்கள நட்பையும கருத்துக்களையும பரிமாறிக் கொள்ளக்கூடிய சங்கங்களை அவர் எப்போதும கூட்டி வந்தார

“ நஙகளுடைய நட்பின் மூலம் என்னைக் கௌரவிக்க விருப்பமுள்ள விவேகமும மதிப்பும வாய்ந்த மனிதர்களுடன் நான் விசாலமாய உரையாட விருமபுகிறேன !” என்றார் அவர்

பெஞ்சமின திரட்டிய நணபர் சங்கங்களில முதலாவது ஆரமபித்து வைத்தது, பிலடெல்பியா நகரிலுள்ள ‘ லெதர் ஏப்ரன கிளப ’ என்பதாகும. அது அவர் இளைஞராக இருந்த போது ஆரமபித்து வைத்தது பிறகாலத்தில ஜுணடோ என்று பிரசித்திபெற்ற அந்தச் சங்கம பெஞ்சமின் வாழ்க்கையிலே முன்னோடியான ஒரு மாபெரும விளைவை உண்டாக்கியது. ஜுணடோ அங்கத்தினர்கள் அவரால பரீட்சிக்கப்பட்ட உண்மையான நணபர்களிலே முதன்மையானவர்கள் அவரும அவர்களும உயிரோடிருந்த காலம வரையில அவர்கள உணமை

யான நண்பர்களாகவே இருந்து வந்தனர் இந்தச் சின்னஞ் சிறு வட்டக் கையில்தான் அவர் மனித சமுதாயத்தின் தலைவராக விளங்குவது பற்றி அனுபவ முறையிலே கற்றுக்கொண்டார் அங்கேதான் ஒருவரையொருவர் நம்பி ஒன்றாகக் கூடி வேலை செய்யும் மக்கள், தனி மனிதன் ஒருவன் தனியாக வேலை செய்வதைக் காட்டிலும் அதிகமான காரியங்களைச் சாதிக்க முடியும் என்று அவர் கண்டுபிடித்தார் இந்த நண்பர்களின் உதவி மூலம்தான் பிராங்ளின் வெகு சீக்கிரமாக முக்கியஸ்தராகப் பிரபலமடைந்தார் இல்லையெனில் அந்தப் பதவி இவ்வளவு சீக்கிரம் கிட்டியிருக்காது ஆனால் சங்கத்தை அவர் உருவாக்கியதின் நோக்கம் இதுவல்ல தாம் விரும்பும் மக்களுடன் கூடியிருக்க ஆசைப்பட்டுத்தான் அந்தச் சங்கத்தை ஆரம்பித்து வைத்தார்

அவருடைய வாழ்க்கையில் ஏற்பட்ட மாபெரும் சம்பவங்கள் பலவும், தேசத்தின் போக்கையே நிர்ணயித்த அதி முக்கிய சம்பவங்களில் பலவும், பிராங்ளின் நட்புகளின் மூலமே நிறைவேறினவாகும் மக்களைத் தம் வசம் திருப்ப அவர் உபயோகித்த திறமையானது அமெரிக்கச் சுதந்திர லட்சியத்திற்கு இன்னும் உதவியது

ஆரம்பம் முதலே அவருடைய நண்பர்கள் அவருக்கு வேண்டியவற்றைப் போதுமான அளவில் செய்ய முடியவில்லை வேலை பழகி வந்த காலத்தில், அவர் வெறுத்து வந்த அந்தக் கற்றுக்குட்டி வேலையிலிருந்து தப்பித்து ஓடுவதற்கு ஜான் காலின்ஸ் உதவி புரிந்தான் ஹ்யூ மெரிடித் என்பவனுடன் சேர்ந்து அவர் தொழிலில் இறங்கினார் அவருடைய நட்பைக் கண்டு அவன் பெரிதும் மகிழ்ந்தே அவன் தன் தகப்பனாரிடம் ஓர் அச்சகம் ஏற்படுத்துவதற்கு வேண்டிய மூலதனத்தைக் கடனாகக் கொடுக்கும்படி வற்புறுத்தினான் அவருடைய அச்சகத்திற்கு முதல் வாடிக்கைக்காரரை அவருடைய நண்பர்களே கொண்டு வந்தனர் அவருடைய அச்சகத்தொழில் அபிவிருத்தியடைய அவர்களே உதவினர்

பெஞ்சமினுக்கு அளிக்கப்பட்ட மாபெரும் கௌரவங்களில் அநேகம் அவரை அருமையாகக் கருதிய அவருடைய நண்பர்களாலே ஏற்பாடு செய்யப்பட்டனவாகும் இந்தப் பூலோகத்திலே உயிர் வாழ்ந்த மற்ற எவரையும்விட அவரே உண்மையான நண்பர்களை அதிகமாகப் பெற்றிருந்தார் அவர் எழுதிய புத்தகங்களின் மூலமும், எழுத்துக்களின் மூலமும் அவர் உண்டாக்கிக் கொள்ளும் நண்பர்களே அவரது புகழை இன்னமும் அழியாமல் தொடர்ந்து இருந்துவரச் செய்கின்றனர்

பிராஙளின் தமமுடைய எலலா நணபாகளையுமே உளளூர நேசிதது வநதாா ஆனால விசேஷமாக சிறுவா சிறுமிகள மீதுதான அவருககுப பிரியம ஜாஸதி தம சொநதக குழநதைகளையும தம வாழககையின நடுவே குறுககிடட மறற எலலாக் குழநதைகளையுமே அவா நணபாகளாககிக கொணடாா. இளைஞா குழுவிறகும அவரே நாயகமானவா அவா எபபோதும இளைஞாகளைக குதூகலததில ஆழததுவாா அவாகளை வேறு சடடியிலுளள குடடி மீனகளைப போலப பாவிககாமல வளாசசியுறற பெரிய மனிதாகளைப போலவே கருதி நடததுவாா கவானாகளும, பிரதம மநதிரிகளும பேசுமபோது காடடும அதே அககறையுடனேயே அநத இளைஞாகள எனன சொலகிறாகள எனபதையும கருததூனறிக கேடபாா அவாகளிடமிருநது பலவறறையும கறறுககொணடாா அதனாலே அவா எனபது வயதுககுமேல வாழநதிருநதும, உளளததிலும, எணணததிலும அவா கிழடுதடடிபபோய விடவிலலை

பிராஙளின கடமைகளின நிமிததம தாயநாடடை விடடு வெளியே இஙகிலாநதிலும பிரானஸிலும வசிகக வேணடிய நிாபநதம ஏறபடட போது, அவரைச சுறறிலும எபபோதும குழநதைகள கூடியிருபபாாகள ஏனெனில அநதக குழநதைகள இலலாவிடடால அவருககுச சநதோஷம இராது

இஙகிலாநதில ஜோனாதன ஷிபலே எனனும பாதிரியாா வீடடிறகு அவா அடிககடி விஜயம செயவாா அநதப பாதிரியாருககு ஒரு குமாரனும, ஐநது குமாரிகளும இருநதனா பெணகள வயதில பதினொனறு முதல இருபதது மூனறுவரை உளளவாகள அவாகள பெஞசமின பிராஙளினைப பெரிதும மதிததுப போறறி வநதாாகள

அவா ஒரு சமயம லணடன செலலுமபோது பதினோறு வயதுளள கிடடி ஷிபலே எனற சிறுமியையும தமமுடன் அழைததுச சென்றாா ஷிபலே சகோதரிகளுககுப பரிசு கொடுகக நினைதத அவா, சாமபல நிறம வாயநத அணிறபிளளை ஒனறு வேணடுமெனறு பிலடெலபியாவுககுத தகவல அனுபபினாா அநத அணில அவாகள வீடடிலே மிகவும செலலககுடடியாகிவிடடது ஸககு எனறு அழைககபபடட அநத அணில கடைசியாக ஒரு நாயினால கொலலபபடடுவிடடது. அபபோது பெணகளின வேணடுகோளுககிணஙக அநத அணிலுக்காக அவா ஒரு சரமகவி இயறறினாா மிகவும பிரசிததிபெறற அநதச சரமகவிதையின வாசகம இதுதான

"போாவையிலே உளள
மூடடைப பூசசி போலே,

இஙகே அடஙகிக கிடககிறது
ஸகக எனனும அணிறபிளளை ”

பிரான்ஸ தேசததின ராஜ சபைககு வநத அமெரிககத தூதுவராக பாஸிக கிராமததில அவா வசிதத போது பொழுதின் பெரும பகுதி அவா தம பேரப பிளளையான பெஞசமின் பாசசிலையத தமமுடைய மடியில போடடுக கொணடிருபபாா தாம எவவளவுதான வேலைகளில ஆழநதிருநதபோதிலும, அடிககடி சோாநத போதிலும, அவா தமமுடைய சினனஞசிறு பேரபபிளளையின நணபாகளை வாரததில ஒருநாள விருநதுககு அழைபபதுணடு எனறு அவரே தமமுடைய கடிதஙகளுள ஒனறில கூறியிருககிறாா அக குககிராமததிலுளள பிரெஞசு நணபாகளின குழநதைகளிடம அவா நனகு பிரபலம அடைந திருநதாா அக குழநதைகளில பெருமபாலானவை அவரை அனேகமாக ‘ அபபா ’ எனறே கூபபிடும

பிரெஞசுப பளளி மாணவாகள அவருககு நீளம நீளமாகக கடிதஙகளை எழுதுவாாகள அவரும அவைகளுககெலலாம பதில எழுதுவாா அவருடைய நணபாகளில ஒருவரான ஜானஜே எனபவா சில மாதஙகள அவருடைய வீடடுபபுறம வசிதது வநதாா அவருடைய ஒனறரை வயதுப பெண மேரியா எனபவள பிராஙளினிடம அதிகம பாசம கொணடாள சினனஞசிறு நாயககுடடி போல அவள அவரைச சுறறி சுறறியே பினதொடாநது வருவாள

அவருடைய இளம நண்பாகள வளாநது கலயாணம செயதுகொணடு சொநதமாக குழநதை குடடிகள பெறறுக குடுமபததைக வளாககத தொடஙகியதும, பெஞசமின அடுதத தலைமுறையான அவாகளுடைய சிறு குழநதைகளுடன விளையாடியும, தடடிக கொடுததும பரிகாசம செயதும பொழுது போககுவாா தமமுடைய வீடடில கோடடை காலததையோ, அலலது சோநதாறபோல பல வருஷஙகளையோ கூடக கழிககுமபடி மூனறு நானகு குழநதைகளுககு அழைபபனுபபும போது அவா வேறெதைப பறறியுமே சிநதிததுப பாாகக மாடடாா அவருடைய வீடடில எபபோதும அவருடைய சினனஞசிறு நணபாகளின கூசசலகள கும்மாள ஒலியடிததுக கொணடே இருககும

பெஞசமின பிராஙளினின அதியறபுதமான கடிதஙகளில சில குழநதைகளுககாகவே எழுதபபடடவை அவாகளை மகிழவிபப தறகாக அவாகளுககுக கொடுககககூடிய சிறு பரிசுகளைப பறறியும, விருநது வேடிககைகளைப பறறியுமே அவா என் றெனறும சிநதிததுக கொணடிருபபாா அவா தமமுடைய

மரண சாசனம் எழுதும் போது அந்த உயிலில் போஸ்டன் நகரத்து இலவசப் பள்ளிகளுக்கு ஒரு பணத்தொகை (நூறு பவுன்கள்) எழுதி வைத்தார். இந்தப் பணத்திலிருந்து கிடைக்கும் வட்டியானது பையன்களுக்குக் கௌரவப் பரிசுகளாக வெள்ளிப் பதக்கங்கள் வாங்க உபயோகப்படுத்தப்பட வேண்டும். இத்தகைய பதக்கங்கள் போஸ்டன் லத்தீன் பள்ளிக்கூடத்திலும், போஸ்டன் நகர உயர்தரப் பள்ளிகளிலும் இன்றும் கொடுக்கப் பட்டு வருகின்றன. நாளது தேதிவரையில் நாலாயிரத்திற்கு மேற்பட்ட பதக்கங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. ஆகவே அவருக்குப் பிறகும் குழந்தைகளிடம் உள்ள அவருடைய நட்பு உயிர் வாழ்ந்து கொண்டிருக்கிறது.

பிரான்ஸ் தேசத்தில் பிராங்ளினுக்குள்ள நண்பர்களின் எண்ணிக்கை ஏறக்குறைய அந்நாட்டின் ஜனத்தொகை எவ்வளவோ அவ்வளவு பேர் இருந்தனர். அந்த எண்ணிக்கையில் அரசன் அரசியிலிருந்து தாழ்ந்த வேலைக்காரன்வரை எல்லோரும் அடங்குவர்.

“இந்த மக்களின் அதி இனிமையான கூட்டுறவிலே நான் அனுபவித்த ஒன்பது வருஷ காலத்திய ஆனந்த வாழ்க்கையை ஒருபோதும் என்னால் மறக்கவே முடியாது!” என்று பிராங்ளினே கூறியிருக்கிறார்.

ஐக்கிய நாடுகளின் காங்கிரஸானது கடைசியாக அவருடைய ராஜீநாமாவை ஏற்றுக்கொண்டு ஊருக்குத் திரும்ப அவருக்கு அனுமதி கொடுத்தபோது, அவருக்கு வயது எண்பதுக்கு மேலாகி விட்டது. இது 1785ம் வருஷம் நடந்தது. 1783-ம் வருஷத்தில் அவர் பிரான்ஸுக்கும் இங்கிலாந்துக்குமிடையே ஒரு சமாதான ஒப்பந்தம் ஏற்படுவதற்கு முன்னின்று பேசி முடித்தார். வொர்ஸேல்ஸில் அது கையெழுத்தாவதையும் கண்டார்.

தம்முடைய வேலைப் பொறுப்பு பூரணமாக முடிந்துவிட்டதாக அவர் கருதினார். இனி அமெரிக்காவின் இளைஞர்கள்தாம் முன்வந்து அந்தப் பொறுப்பை மேற்கொள்ள வேண்டுமென்றும் அவர் கருதினார். பிரான்ஸில் உள்ள அவரது நண்பர்களால் அவருடைய பிரிவைத் தாங்க முடியவில்லை. அவர் ஒவ்வொருவரிடமும் விடைபெற்றுக்கொள்ளச் சுற்றிவரத் தொடங்கினார்.

பிரெஞ்சு மன்னரான பதினாறும் லூயியிடம் அவர் விடை பெற்றுக்கொண்டபோது, அவருக்கு மன்னர் ஓர் பதக்கம் பரிசளித்தார். அந்தப் பதக்கத்தில் மன்னரின் சொந்த திருவுருவம் அடங்கியிருந்தது. அந்தத் திருவுருவத்தைச் சுற்றி நானூறு வைரங்கள் பதிக்கப்பட்டிருந்தன.

“நீங்கள் போய்த்தானாகவேண்டுமானால், சமுத்திரக் கரையை அடையும்வரை தகுந்த சௌகரியங்களும் பாதுகாப்பும் அளிக்கிறேன். உங்கள் பல்லக்கை ராஜ பட்டக் குதிரைகள் இழுத்துச் செல்லும்” என்றார் லூயிமன்னர்.

இது எவ்வளவு மாபெரும் கௌரவம் என்பதை நீங்கள் கற்பனை செய்து பார்க்கலாம்!

பெஞ்சமின் தாயகத்துக்குப் புறப்பட்டபோது அரசாங்கக் குதிரைகள் இழுத்துவரும் பல்லக்கோடு வண்டிகளின் மாபெரும் ஓர் ஊர்வலமே கிளம்பியது. அந்த வண்டிகளில் பெஞ்சமினின் நண்பர்கள் டஜன்கள் கணக்கில் பாரீஸ் நகரத்தின் மாபெரும் வடகோடி கோட்டை வாசல்வரை சவாரி செய்தனர். அந்த வாசலை அடைந்ததும் ஒன்பது வருஷங்கள் அவரைத் தங்கள் விருந்தாளியாக வைத்திருந்த சௌமான்ட் பிரபுவும் அவருடைய பெண்ணும் திரும்பிவர முடியவில்லை. அதனால் அவர்கள் நெடுந்தூரம் சமுத்திரக்கரைவரை பிராங்ளினைப் பின்தொடர்ந்து வந்தார்கள்.

ஊர்வலம் மிகவும் மெதுவாகத்தான் முன்னேறியது. ஏனெனில் ஒவ்வொரு கிராமத்திலும், நகரத்திலும் நிறுவப்பட்டிருந்த வரவேற்புக் குழுக்கள் (Welcoming Comittees) வெளிப்போந்து குதிரைகளை வழிமறித்து நிறுத்தின. அப்போது அங்கேயெல்லாம் கண்ணீர் துளிகள் உதிர்ந்தன. பிரசங்கங்கள் நடந்தன. பெரிய பெரிய ரோஜாப் பூச் செண்டுகளும் சின்னஞ் சிறு பரிசுப் பொருள்களும், குழந்தைகளால் அவருடைய கையிலே திணிக்கப்பட்டன. வயதாகியும், நோய்வாய்ப்பட்டும், உடலெங்கும் வலியும் அசதியுமான பிராங்ளின் அவ்வளவையும் ஆண்மையுடன் பொறுத்துக்கொண்டார். பல்லக்கு மெல்ல அசையும் போக்கு, அவருக்குப் பெரும் வாதனையை உண்டாக்கியது. ஆனாலும் அவர் புன்முறுவல் பூத்தபடியே ஆங்காங்கே பல்லக்குப் பீடத்திலிருந்து கீழிறங்கி தம்மை நோக்கி நீட்டிய கைகளைப் பிடித்துக் குலுக்கி, அவர்கள் கூறியதையெல்லாம் கவனமாகக் கேட்டுவந்தார்.

பிரெஞ்சுப் பிரமுகர் ஒருவர் நடுவழியில் பெஞ்சமினைத் தடுத்து நிறுத்தித் தம் மாளிகையில் ஓர் இரவு தங்கவைத்து, அவருக்கு அத்தியாவசியமான ஓய்வு அளிக்கும்படி தம் வேலையாட்களுக்கு உத்தரவிட்டார். கடைசியாக அவர் இங்கிலீஷ் கால்வாயை அடைந்து இங்கிலாந்துக்குக் கப்பலில் பிரயாணமானார். அங்கே சில தினங்கள் தங்கியிருந்துவிட்டு, மீண்டும் ஒருமுறை அட்லாண்டிக் மகா சமுத்திரத்தைக் கடக்கும் கப்பற் பிரயாணத்தை மேற்கொண்டார்.

அவருடைய வாழநாளின் கடைசி வருஷஙகள அமைதி யாகக கழிநதன அமெரிககாவின கடசியிலிருநது விலகி எதிாக கடசியில சோநதிருநத தமமுடைய ஒரே மகனுடன அவருககு மீணடும சுமுகமான சமாதானம ஏறபடடது அவா வெளிநாடு களில கௌரவிககபபடடது போலவே கடைசி காலததில சொநத நாடடிலும கௌரவிககபபடடாா அவா பெனஸிலவேனியா காமனவெலததின தலைவராகத தோநதெடுககபபடடாா பிறபாடு மீண்டும மூனறு முறைகள அவா் தோநதெடுககப படடாா (அமெரிகக) ஐககிய நாடுகளின் அரசியல அமைபபுச சாசனததைத தயாாிபபதறகாக நியமிககபபடட சமமேள னததில ஓா பிரதிநிதியாகவும அவா நியமிககபபடடாா அநதச சாசனததை தயாாிபபதிலே அவா முககிய அஙகம வகிததாா அநத அரசியலமைபபுச சாசனததின பிரகாரநதான நாம இபபோது வாழநது வருகிறோம

இநத வருஷஙகளுககிடையே பெஞசமின தம மகள ஸாலி பாசசியோடும, அவளது கணவனோடும அவளது குடுமபததோடும வசிதது வநதாா எலலாவறறிறகும மேலாக, அவருடைய நணபாகள—பழையவாகளும புதியவாகளும—அவரைப புடை சூழநது கொணடு கூடடுறவு அளிதது வநதனா கடைசிக காலததில அவருககு ஏறபடட உதவேகமான முயறசிகளில இநதப பூலோகததை விடடே அடிமை முறையை ஒழிநது விடுவதும ஒனறுகும

இநத விஷயததில அனறைய காலப போககுககுப பெரிதும முறபோககானவராகி விடடாா ஏனெனில, அவருடைய காலததில, சுமாா ஒரு நூறறாணடுககுப பிறபாடுகூட அடிமை வழககமானது சகஜமாக இருநது வநதிருககிறது.

அவா மிகவும வயதாகி படு கிழவராய இருநத போதிலும தம அலுவலகளைக கவனிபபதை அவா நிறுததவிலலை எபபோதும சுறுசுறுபபாயிருகக வேணடுமெனற தீாமானததின பிரகாரம, தமமுடைய சநதுவாத நோயையும பொருட படுததாமல அவா நடமாடியதன காரணமாக அவா ஒரு சமயம மாடிப படிகளிலிருநது கீழே விழ நோநதது அதிலிருநது அவா உடல நலம தேறுவதறகு மிகவும காலதாமதமாயிறறு 1790ம வருஷம ஏபரல மாதம 17-ம தேதி ஒரு சிறு காயசசலுககுப பிறகு, அவா காலமானாா நாகரிக உலகம முழுவதுமே துககததில ஆழநது முரசுகள மநதமாக ஒலிததன தேசக கொடிகள பாதி இறககபபடடு பாதி மூடுபனியால தோயநது பறநதன. ஈமச சடஙகுகளுககான மரியாதைக குணடுகள, எஙகெலலாம மனிதாகள ஒனறுகூடி நினறிருநதனரோ அஙகெல லாம, முழஙகின பிரெஞசு சடடசபையானது பெஞசமினின

பழைய நண்பரான மிரபோவினால் பெஞ்சமின் மரணத்தைப் பிரஸ்தாபித்துக் கொண்டுவந்த தீர்மானத்தின் பேரிலும், அதை மார்க்விஸ் டி லாபயட்டி ஆமோதித்ததின் பேரிலும், மூன்று நாள் இழவுத் துக்கம் கொண்டாட வேண்டுமென்ப் பிரகடனம் செய்தது. அதுவரையில் சட்டசபைச் சம்பிரதாயம் அனேகமாகக் கேள்விப்பட்டேயிராத விஷயம் அது!

பிராங்ளினின் சவப் பெட்டியின் பின்னால் பிலடெல்பியா நகரத்திலுள்ள மாபெரும் பிரமுகர்கள் அனைவரும் நடந்து சென்றனர்.

அவர்களை இருபதினாயிரம் பேர்கள் துக்கம் கொண்டாடிப் பின்தொடர்ந்து வந்தார்கள். பிலடெல்பியா பட்டினத்திலே அதுவரை அவ்வளவு பெரிய கூட்டம் எப்போதுமே கூடியதில்லை. அப்போது வாழ்ந்த மாபெரும் எழுத்தாளர்கள் அனைவரும் சரம ஓலங்கள் எழுதினார்கள். மாபெரும் பேச்சாளிகளெல்லாம் பொதுக்கூட்டங்களில் பிரசங்கமாரி பொழிந்தனர். சாதாரண ஆட்களோ தெரு மூலைகளிலும் மதுச் சாவடிகளிலும் கூடி நின்று தங்களுக்குத் தெரிந்த சிறு சிறு புகழ்மாலைகள் பாடினார். பெண்களோ தெருக்களில் பகிரங்கமாக அழுது கொண்டு சென்றனர். சிறுவர்களோ திடீரென்று திசை தப்பித் தனியே விடப்பட்டவர்களாகத் தவித்தார்கள். மனிதனுடைய நண்பர் ஒருவர் இந்த உலகை விட்டுச் சென்றுவிட்டார்.

ஆனால் அத்தகைய மனிதனை ஒருபோதும் நிஜமாக இறந்து விடுவதில்லை. ஏனெனில் அவனுடைய செயல்களும், வார்த்தைகளும் அவனுக்குப் பிறகும் வாழ்ந்து வருகின்றன. பெஞ்சமின் பிராங்ளின் என்ன சொன்னார் அல்லது என்ன செய்தார் அல்லது என்ன நினைத்தார் என்று யாராவது ஒருவர் நினைக்காத நேரம் கணப்பொழுதுகூட இல்லை என்று சொல்லலாம். அவ்விதம் மற்றவர் ஒருவரைப் பற்றி நினைக்கும் தோறும் உயிர் வாழ்வதாகவே கருதவேண்டும். அவர் சிந்தித்து, கண்டறிந்து, கண்டுபிடித்து, கற்றறிந்த விஷயங்களாலேதான் இன்று நம் ஞானம் பெரிதும் விருத்தியடைந்திருக்கிறது. அதேபோல் அவர் செய்த காரியங்களால்தான் நாம் சிறப்பான வாழ்வு பெற்றிருக்கிறோம்.

12 அமெரிக்கா

பிறந்த நாட்டிற்காகப் பெஞ்சமின் செய்த காரியங்கள் அனைத்தையும் சொல்வதென்றால், இதைவிடப் பெரிய புத்தகமாகிவிடும். அவர் மட்டும் வாழ்ந்திராவிட்டால், இன்று ஐக்கிய அமெரிக்கா உலகினிலே வகிக்கும் அதி முக்கியமான ஸ்தானத்தை அது கைக்கொள்ள முடியாதிருந்திருக்கலாம்

அவருடைய வாழ்க்கை ஏடு முழுவதுமே அரும் பெரும் காரிய சாதனைகளின் ஓர் பட்டியலாகும் அவற்றுள் பெரும்பா லானவை தம் சொந்த நாட்டின் முன்னேற்றத்தை நோக்கிச் செலுத்தப்பட்டன

இதோ, பெஞ்சமின் பிராங்ளின் சாதித்த காரியங்களில் சில:

அவர், அமெரிக்காவில் காகித நாணய முறையை வற்புறுத்திக் கூறி, வாதாடி, வியாபாரம் வளர உதவினார்

சந்தா முறையில் புத்தகங்களைச் சுற்றவிடும் முதலாவது வாசகசாலையை அவர்தான் அமெரிக்காவில் ஸ்தாபித்தார்

பிலடெல்பியா நகரில் நெருப்பணைக்கும் தொண்டர்படையை அவர்தான் முதன் முதலில் உருவாக்கினார்

பென்ஸில்வேனியா நகரில் உள்ள முதலாவது வைத்திய சாலையின் ஸ்தாபகர்களில் அவரும் ஒருவராவார்

அவர் போஸ்ட் மாஸ்டராகி, தபால் முறையைத் திருத்தி யமைத்து, அது தானகவே திறம்பட இயங்கும் வகையில் திட்டப் படுத்தினார் தற்காலத்திய தபால் இலாகாத் திட்டத்திற்கு அவருடைய கருத்துகள்தாம் அடிப்படையாகும்

அமெரிக்கத் தத்துவஞான சங்கத்தை அவர்தான் துவக்கி வைத்தார் அது இன்றளவும் நடைமுறையில் இருந்து வருகிறது.

கற்கள் பாவி தெருக்கள் அமைப்பதை அவர்தான் முதன் முதலில் புகுத்தினார் தெருக்களைச் சுத்தம் செய்யும் திட்டம் ஒன்றையும் அவர்தான் நிலைநாட்டினார்

தெருக்களுக்கு விளக்கு ஏற்றும் முறையை அவர்தான் நிலைநிறுத்தினார்

உள்நாட்டுப் பாதுகாப்பை வற்புறுத்திக்கூறி, பென்ஸில் வேனியா குடிப் படையை அவர்தான் ஸ்தாபித்தார்

பிராங்ளின்தான் முதன் முதலாக, பதின்மூன்று மூல குடியேற்ற நாடுகளின் ஐக்கியத்தைப் பற்றிச் சிந்தித்தவர், அது பற்றி ஒரு கட்டுரையும் எழுதியவர்

பிராங்ளின் ஸ்டவ் என்ற கூட்டுப்பை அவர் கண்டு பிடித்தார் அதுதான் சூடேற்றும் கருவி முறைகளின் வளர்ச் சிக்கு வழி நடத்தியது

முதலாவது மின்சாரப் பாட்டரியை அவர்தான் நிர்மாணித் தார் மின்சார வேகத்தில், பாஸிடிவ் நெகடிவ் என்னும்

இரண்டு ரக ஓட்டங்கள் இருக்கின்றன என்று குறிப்பிட்டுக் காட்டி மின்சாரத்திற்கு ஒரு புதிய கோட்பாட்டை வகுத்தவர் அவர்தான். பாஸிடிவ், நெகடிவ் என்ற கலைச் சொற்கள் இன்றளவும் உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றன.

மின்சாரமும் மின்னலும் ஒன்றுதான் என்பதை அவர் நிரூபித்துக் காட்டினார்.

இடி மின்னலின் அபாயகரமான விளைவுகளைத் தவிர்ப்பதற்கு ஒரு சாதனமாக இடிதாங்கியை அவர்தான் கண்டு பிடித்தார். அது, எத்தனையோ கோடிக்கணக்கான டாலர் மதிப்புள்ள சொத்துக்களையும் பல உயிர்களையும் காப்பாற்றியிருக்கலாம். இடிதாங்கிகள் இன்றளவும் உபயோகத்திலிருந்து வருகின்றன.

பென்ஸில்வேனியா சட்டசபையில் அவர் பதினொரு வருஷங்கள் பணியாற்றியிருக்கிறார். அதன் அதிசெல்வாக்குள்ள அங்கத்தினராகவும் விளங்கியுள்ளார்.

அமெரிக்காவிலே முதன் முதலாக வெளியான நாவலை அவர்தான் பிரசுரித்தார் — அது, சாமுயெல் ரிச்சார்ட்ஸன் என்பவர் எழுதிய பாமீளா எனும் நாவலாகும்.

அக்காலத்திய அதி முக்கியமான செய்திப் பத்திரிகையாக விளங்கிய பென்ஸில்வேனியா கெஜட்டை அவர்தான் சொந்தமாக நடத்திப் பிரசுரித்து வந்தார்—அதுதான் இன்றுள்ள சாட்டர்டே ஈவினிங் போஸ்ட் (சனி மாலைத் தபால்) எனும் சஞ்சிகைக்கு மூதாதையாகும்.

பிற்காலத்தில் பென்ஸில்வேனியா சர்வகலாசாலை என்று பெயர் பெற்ற பென்ஸில்வேனியா கலைக்கழகத்தை (Academy of Pennsylvania) அவர்தான் ஸ்தாபித்தார்.

பெரியம்மை நோய் வராமல் தடுப்பதற்கு அம்மை குத்திக் கொள்ளும் முறையை—அது பொது உபயோகத்திற்கு வருவதற்குப் பல வருஷங்கள் முன்பாகவே—அவர்தான் வற்புறுத்தினார். சாமானிய ஜலதோஷம் பற்றி அவர் அறிவுறுத்திய கொள்கைகளே இன்றளவும் சரியானவை எனக் கருதப்பட்டு வருகின்றன.

புரட்சிக்கு முன்னதான துயர வருஷங்களிலே அவர் குடியேற்ற நாட்டின் பிரதிநிதியாக இங்கிலாந்தில் வேலை பார்த்து வந்தார். அந்தச் சமயத்திலக்கூட ஸ்டாம்பு சட்டத்தை நீக்கிவிடும்படி செய்ய அவரால் முடிந்தது. இது கைகூடுவதற்காக, தம் சொந்த நாட்டின் நலனை உத்தேசித்து, தமமுடைய

உயர்ந்த பதவியையும் பிரகாசமான உத்தியோக முன்னேற்றத்தையும் அவர் தியாகம் செய்தார்.

சுதந்திரப் பிரகடனத்தைத் தயாரிக்கவும் திருத்தி ஒழுங்குபடுத்தவும் அவர் துணை புரிந்தார்.

ஐக்கிய நாடுகளின் அரசியல் அமைப்புச் சட்டத்தை எழுதவும், அதனை நிறைவேற்றவும் அவர் துணை புரிந்தார். அந்த அரசியல் அமைப்பின்கீழ்தான் நாம் தொடர்ந்து வாழ்ந்து வருகிறோம்.

பிரான்ஸ் தேசத்தில் குடியேற்ற நாடுகளின் கமிஷனராக அவர் பணியாற்றி வருகையிலே, அமெரிக்க இராணுவத்திற்குத் தேவையான பணம், ஆயுதங்கள், வெடி மருந்துகள், உணவுப் பண்டங்கள் முதலானவற்றைப் பெற்றார்.

அமெரிக்கக் குடியேற்ற நாடுகளுக்கு அதிகம் பணத்தேவை ஏற்பட்ட சமயத்திலே, பிரெஞ்சு அரசாங்கத்திடமிருந்து ஒரு கணிசமான தொகை கடன் வாங்கிக் கொடுத்தார்.

போராட்டத்தின் முடிவில் இங்கிலாந்திற்கும் ஐக்கிய நாடுகளுக்குமிடையே அவர்தான் சமாதான உடன்படிக்கை பேசினார்.

அடிமை முறையை ஒழித்துவிட அவர் வாதாடி, அந்த விஷயம் பற்றித் துண்டுப் பிரசுரங்களும் வெளியிட்டார்.

பெஞ்சமின் பிராங்ளின் நம் நாட்டிற்காகச் செய்த மிகவும் புகழ்பெற்ற அருஞ்சாதனைகள் நாம் இங்கே இன்னும் அவருடைய சுறுசுறுப்பான வாழ்வின் நீண்ட வருஷங்களுக்கிடையே அவர் சாதித்த காரியங்கள் எத்தனையோ எவருக்கும் தெரியாது. தேச சேவையின் அழைப்பை ஏற்க முடியாத அளவிற்குத் தமக்கு அதிக வேலை இருக்கிறதென்றோ, தாம் அவ்வளவு தூரம் முக்கியஸ்தர் என்றோ, அவர் கருதியதே இல்லை. தம் கடமையை நிறைவேற்றுவதிலே, தம்முடைய அந்தஸ்தையும் செல்வத்தையும் ஆரோக்கியத்தையும், சொந்த இன்பத்தையுங்கூட அவர் தியாகம் செய்யத் தயங்கியதே இல்லை, அவ்வளவு தூரம் கௌரவம் பாராட்டிக்கொண்டதுமில்லை.

அமெரிக்கக் குடியேற்ற நாடுகளின் பக்கம் சேர்வதற்காக அவர் தம்முடைய நண்பர்களையும் குடும்பத்தையுங்கூடப் புறக்கணித்துவிட்டார். யுத்தத்தின் மத்தியிலே பிரான்ஸ் தேசத்திற்கு ரிப்ரைசல் (Reprisal) கப்பலில் செல்லத் தம் உயிரைக் கூடப் பணயம் வைக்கத் துணிந்தார். சுதேசக் காங்கிரசுக்குத் தம்முடைய சொந்தப் பணத்தைத் தர முன்வந்து, அதற்குத் தேவைப்பட்ட காலம்வரை கடனும் பணமும்

கொடுத்து வந்தார் தம் வாழ்நாளின் கடைசி முடிவுவரை அதற்காகவே தம் நேரம் முழுவதையும் செலவழித்தார் உண்மையில், அவர் தாம் நேசிக்கும் நாட்டிற்குத் தேவையான எதையும் தம்மிடமே ஒளித்து வைத்துக் கொள்ளவில்லை அவருடைய மாபெரும் இதயத்திலே அமெரிக்காதான் எழுதப் பட்டிருந்தது

எங்கெல்லாம் நம்முடைய கொடி, தன் நட்சத்திரங்களை குலுங்கச் செய்கிறதோ, அங்கெல்லாம் பெஞ்சமின் பிராங்ளி னுக்கு நாம் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். ஏனெனில் அதை உருவாக்குவதற்கு அவருடைய இலட்சியக் கனவுகளும் சாதனைகளுமே பெரிதும் உதவின அவர் அமெ ரிக்க மண் பூமியை நேசித்தார் என்றால், அதைப் பிரும்மாண்ட மாக்கிய அதன் ஜீவ உத்வேகத்தைத்தான் அதிகம் நேசித்தார். நினைவில் வைத்துக்கொள்ளத் தகுதியான எத்தனையோ மாபெரும் விஷயங்களைப் பற்றியெல்லாம் அவர் சொல்லி யிருக்கிறார் என்றாலும், இதைவிட முக்கியமானது எதையும் சொல்லியிருக்க முடியாது என்லாம்—அதாவது

"எங்கு சுதந்திரம் வாழ்கிறதோ, அங்கேதான் என் தேசம் இருக்கிறது!"

இரண்டாவது பகுதி

பிராங்ளினின் சிந்தனைகள்

[பெஞ்சமின் பிராங்ளின் எழுதிய சுயசரிதையிலிருந்தும் கட்டுரைகளிலிருந்தும் அவருடைய சிந்தனைகள் இப்பகுதியில் சுருக்கியும் திரட்டியும் தரப்பெறுகின்றன]

திரட்டு. 1

வாழ்க்கை வெற்றிக் குரிய நல்ல பண்புகள்

1 தன்னடக்கம்

அசமந்தம் ஏற்படும்படி சாப்பிடாதே, போதை வெறி ஏறும்படி குடிக்காதே

2 மௌனம்

உனக்கோ பிறருக்கோ பயன் தரும் என்றாலொழியப் பேசாதே, அற்பமான உரையாடல்களைத் தவிர்த்துவிடு

3 ஒழுங்கு

உன்னுடைய சாமான்களெல்லாம் அவற்றிற்குரிய இடங்களில் ஒழுங்காய் இருக்கட்டும், உன் வேலையின் ஒவ்வொரு பகுதிக்கும் அதனதனுக்குரிய நேரத்தை ஒழுங்குபடுத்து

4. தீர்மானம்

நீ எதைச் செய்ய வேண்டுமோ அதைச் செய்யத் தீர்மானம் செய், நீ எதைத் தீர்மானம் செய்கிறாயோ அதைத் தவறாமல் செய்துவிடு

5 சிக்கனம்

உனககோ மறறவாகளுககோ நலலது செய்வறகாகத தவிர வேறெதறகும செலவு செயயாதே , அதாவது எதையும வீணாக் காதே

6 சுறுசுறுபபு

நேரததை வீணககாதே, ஏதாவது உபயோகமான வறறிலேயே உன்னுடைய எநத நேரததையும ஈடுபடுதது, அனு வசியமான செயகைகளை யெல்லாம அறுததெறிநதுவிடு

7 நோமை

துன்புறுததும எநதப பிததலாடடததையும உபயோகபபடுத தாதே! கபடு சூது இல்லாத வெள்ளை உள்ளததுடனும நோமை நியாயததுடனுமே எதையும சிநதி , எதைப பேசினாலும அவ வாறே பேசு

8 நீதி

இடையூறுகள விளைவிததோ, உன் கடமை தவறி எநத விதப பலனகளையும கைநழுவச செயதோ, எவருககும தவறிழைக் காதே

9 மிதம

எதிலும அளவுமீறிய போககைத தவிாததுவிடு தேவையான அளவு சகிபபுத தனமையை வளாததுக கொள

10. சுததம

உடலிலோ, ஆடைகளிலோ, பழகக வழககஙகளிலோ எநத வித அசுததததைபும சகிககாதே

11 சாநதம

சிறு விஷயஙகளுககாக மனங குழமபாதே , சாமானியமான விபததுகளையும தவிாகக முடியாத இடையூறுகளையும கண்டு மனங் கலஙகாதே , அமைதியாகவே இரு

12 கறபு

குழந்தை பெறுவதற்கோ, உடலநலததிறகோ மடடும அபூர்வ மாக ஆண் பெண் உறவு வைததுக்கொள , அசயநதம ஏறபடும படியாகவோ, உடல் பலஹீனம ஏறபடுமபடியாகவோ, உன்னு டைய அல்லது மறறவரின் அமைதிககும மானததிறகும பஙகம ஏற்படும்படியாகவோ ஆண பெண தொடாபில ஈடுபடாதே!

13 பணிவுப பணபு

ஏசுநாதரையும சாகரடீஸையும போல நட

[இப பதிமூனறு பணபுகள மீதும ஒருவன ஒரே சமயததில கவனம செலுததி அபபியசிகக முடியாவிடடாலும, மேறகூறிய வரிசைக கிரமபபடி ஒவவொரு பணபையும, ஒனறனபின ஒனருக பதிமூனறு வாரஙகளுககுள தன பழககததுககுக கொணடுவநதுவிட முடியும எனறும, மேறபடி பணபுகளில பிசகவிலலையா எனத தினசரி தனனுடைய நடவடிககைகளைப பரிசோதிததுக கொளவது அவசியம எனவும பெஞசமின பிராஙளின கருதிறா]

தனனடககநதான முதனமையான பணபு, அது மூளைககுத தெளிவையும குளிரசசியையும கொணடுவரத தூணடுகிறது, நிலையான ஆணமைககு இனறியமையாதது, ஆசைக கவாசசிகளிலிருநது தடுததாடகொளளும பாதுகாவலனனது தனனடககப பணபு நிலைபெறறு விடடால மௌனம சுலபமானதாகி விடும தீரமானமான போககுப பழககததிறகு வநதுவிடடால எலலாப பணபுகளும கைவரபபெறும முயறசியில உறுதியாக ஈடுபட முடியும சிககனமும சுறுசுறுபபும கடனகளிலிருநது விடுதலை தேடித தநது, செலவாககையும சுதநதிரததையும உறபததி செயகிறது, நேரமை நீதி முதலான பணபுகளை அபபியசிபபதும மிகச சுலபமானதாகிவிடுகிறது

திரட்டு—2

கால அட்டவணை

[குறிபபிடட நேரததில குறிபபிடட காரியததைத தான செயயவேணடும எனபதைப பழககததிறகுக கொணடுவர, ஒருநாளின 24 மணி நேரததிறகும பெஞசமின பிராஙளின தயாரிததுககொணட கால அடடவணை]

காலை	— 5 —	படுககையை விடடு எழு
கேளவி இனறு நான நலலது என்ன செயய செயயலாம ?	— 6 —	தல ஸநான சுததி, **எல**
	— 7 —	லாம வலல இறைவனைத தொழுதல ! இனறையத தினததின வேலைகளைப பறறிச சிநதிததல, தீர மானம செயதுகொளளு தல ! பிறகு படிபபு, காலை உணவு

— 8 —
— 9 —
— 10 —
— 11 — ஓய்வு

மததியானனம

— 12 — படிததல அலலது என வரவு செலவு கணககுகளை
— 1 — மேறபாாததல, பிறகு சாப பிடுதல

— 2 —
— 3 —
— 4 —
— 5 — ஓய்வு

மாலை

கேளவி இன்று நலலது என்ன செயதேன ?

— 6 — சாமானகளை அதனத னிடததில ஒழுஙகுபடுததி
— 7 — வைததல, இரவுச சாப பாடு சஙகீதம அலலது
— 8 — வேறு பொழுதுபோக்கு அலலது உரையாடல இன
— 9 — றையத தினம செயதன வறறைப பறறி ஆராயதல.

இரவு

— 10 —
— 11 —
— 12 —
— 1 —
— 2 —
— 3 —
— 4 — தூககம

திரட்டு—3

தூக்கததில் இன்பக் கனவுகள் பெறவழி

[ஒரு கனனிப பெண விருமபிக கேட்டதினபேரில் பெஞசமின பிராஙளின எழுதிய கட்டுரையின சுருக்க மாகும இது.]

நமமுடைய வாழவில பெரும பகுதி உறககததில கழிந்து விடுகிறது உறஙகுமபோது நாம சில சமயஙகளில இன்பகர

